# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 30
பக்கங்கள் - 28

சுடர் 31 | கதிர் 341 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 16, செவ்வாய்க்கிழமை 01.11.2016




## தமிழர்களின் போராட்டத்தை
# பயங்கரவாதம் என இனிமேல் சொல்லவேண்டாம்
### ஜனாதிபதி முன்னிலையில் மாவை ஆணித்தரம்

யாழ்ப்பாணம், நவம்பர் 1

இந்த நாட்டின் அரசியல் தலைவர்கள், இராணுவத்தினர் உள்ளிட்டோர் மீண்டும் மீண்டும் பயங்கரவாதம் என்ற சொல்லை உச்சரிக்காமல் இருப்பது நல்லது என்று கூறிக் கொள்ள விரும்புகின்றேன். எங்களைத் தோற்கடித்துவிட்டோம் என்று சொல்லுகின்ற வார்த்தைகளை பயன்படுத்தவேண்டாம் என்பதை இதயபூர்வமாக உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அதுதான் நல்லிணக்கத்தின் >> 08

## அனைவரும் ஏற்கும் அரசமைப்பு உருவாகும்

யாழ்ப்பாணம், நவ. 1

புதிய அரசமைப்பு வருவதற்கு முன்னரே அது தொடர்பில் பொய்ப்பரப்புரைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது நாட்டுக்குப் பொருத்தமான, நாட்டில் வாழ்கின்ற >> 25

## வடக்கு மக்களின் உதவி ஒருபோதுமே மறவேன்
### கீரிமலை வீடு கையளிப்பில் மைத்திரி

யாழ்ப்பாணம், நவ. 1

என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்காக இந்த வடபகுதி மக்கள் எனக்குச் செய்த உதவியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எந்த உடன்படிக்கையும் இல்லாமல் தமிழ் மக்கள் எனக்கு வாக்களித்ததாக மாவை. சேனாதிராசா சொன்னார். ஒரு பத்திரத்தில் போடுகின்ற கையெழுத்து உடன்படிக்கையை விட, உள்ளத்திலே மன சாட்சியிலே இருக்கின்ற உடன்படிக்கைதான் மிக முக்கியம் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்கின்றேன்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். கீரிமலையில் வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். >> 08

## நிதி மதிப்பீட்டு அறிக்கை கோருகிறார் ஆளுநர் குரே

யாழ்ப்பாணம், நவ. 1

வடக்கு மாகாண அமைச்சர்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட குழுவுக்கான செலவு மதிப்பீட்டு விவரத்தை அனுப்பி வைக்குமாறு, வடக்கு மாகாண ஆளுநர் குரே, தலைமைச் செயலரிடம் கோரியுள்ளதாகத் தெரியவருகின்றது.

வடக்கு மாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு மூவர் அடங்கிய விசாரணைக் குழு, முதலமைச்சர் >> 25



நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களுக்காக கீரிமலையில் அமைக்கப்பட்ட 100 புதிய வீடுகள் நேற்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

## நல்லிணக்கபுரம் ஜனாதிபதியால் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள காணிகள் இல்லாத மக்களுக்காக அமைக்கப்பட்ட 100 வீடுகள் கையளிப்பு >> 25



## மாணவர் கொலைக்கு நீதியான விசாரணை
### யாழ்ப்பாணத்தில் மைத்திரி உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நீதியான விசாரணை நடக்கும் என்று தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால >> 24

# போராட்டத்தை நிறுத்தினர் பல்கலைக்கழக மாணவர்
### அமைச்சர் சுவாமிநாதனின் உறுதிமொழியை அடுத்து

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் பிரதான வாசல்களைப் பூட்டி நேற்றுக் காலை தொடக்கம் முன்னெடுத்த போராட்டம் அமைச்சர் சுவாமிநாதனின் உறுதிமொழியை அடுத்துக் கைவிடப்பட்டது.

துணைவேந்தர் மற்றும் விரிவுரையாளர்கள், பணியாளர்கள் ஆகியோரைப் பல்கலைக்கழகத்துக்குள் செல்லாதவாறு மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



கொல்லப்பட்ட மாணவர்களுக்கு >> 08

## மாணவர் படுகொலை
## பொலிஸார் மீதான வழக்கை அநுராதபுரத்துக்கு மாற்றுக
### கம்மன்பில கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டமை தொடர்பில் கைதான பொலிஸார் விசாரணைகளுக்கு மாத்திரம் யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்படுகின்றமையானது, அவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். எனவே அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை அநுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றவேண்டும். >> 08

# யாழ்ப்பாணம் போகமுடியாத நிலமை வரும்
### அதற்கு நல்லாட்சியே காரணம் என்கிறார் மகிந்த

கொழும்பு, நவ. 1



யாழ்ப்பாணத்தில் பிரபாகரன் படை என்ற பெயரில் புதிய குழுக்கள் உருவாகுவதற்குதற்போதைய மைத்திரி- ரணில்அரசின் தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அக்கறையின்மையே காரணம் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச குற்றம் >> 23



ஐயா நல்லாத்தான் வெருட்டுறார் பாருங்கோ...

## பல்கலை மாணவர் இன்று ஜனாதிபதியுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இன்று மதியம் கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் மாணவர்கள் 15 பேர் மற்றும் துணைவேந்தர் உள்ளிட்ட குழுவினர் பங்கேற்கவுள்ளனர்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் இந்தத் தகவலை நேற்றுத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் >> 25

## பிள்ளைகளால் கைவிடப்பட்டோரின் சொத்துக்கள் அரசுடைமை

கொழும்பு, நவ. 1

பிள்ளைகளால் கைவிடப்பட்டு, சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழான முதியோர் இல்லங்களில் பராமரிக்கப் >> 25

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 ஆண்டுகளில் 425 பேரை திருப்பி அனுப்பியது ஆஸி.

## இலங்கையிலிருந்து தஞ்சம் கோரியவர்கள்

கொழும்பு, நவ. 1

படகுகளில் ஆஸ்திரேலியா சென்ற 425 பேர், கடந்த மூன்று ஆண்டுகளில் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவ்வாறு 'த ஆஸ்ரேலியன்' ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் தொடக்கம் 2016 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வரையான காலப் பகுதியிலேயே இவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இந்தக் காலப் பகுதியில் படகு மூலம் வந்து ஆஸ்திரேலியாவில் அடைக்கலம் கோரிய 320 பேரில் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டு, இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று ஆஸ்திரேலியாவின் குடிவரவு மற்றும் எல்லைப் பாதுகாப்புப் பிரிவுப் புள்ளி விவரங்களில் கூறப்பட்டுள்ளது.

இவர்களில் பாதிப் பேர், வேறு வழியின்றித் தாமாகவே முன்வந்து நாடு திரும்பினர். 160 பேர் பலவந்தமாக இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர்.

இவர்கள் தவிர, ஆஸ்திரேலியா நோக்கி வந்த ஆறு படகுகளில் இருந்த 105 இலங்கை அகதிகள் படகில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டவர்கள் இலங்கையில் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்ட பின்னர் பெரும் பாலானவர்கள் இரண்டொரு நாள்களில் விடுவிக்கப்பட்டனர். எனினும் சிலர் பல மாதங்களாகச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் 'த ஆஸ்ரேலியன்' ஊடகம் குறிப்பிட்டுள்ளது. (த-5)

# மேற்குலகின் சதியே புதிய அரசமைப்பு

## குணதாச அமரசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, நவ 1

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான தற்போதைய தேசிய அரசு, தயாரித்து வரும் புதிய அரசியல் யாப்பின் ஊடாக நாட்டை இரண்டாகத் துண்டாட திட்டமிட்டுள்ளதாகத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மக்கள் மத்தியில் தற்போது மிகப்பெரிய சவால் இது என்று குறிப்பிட்டுள்ள அந்த அமைப்பின் தலைவரான கலாநிதி குணதாச அமரசேகர, இந்தச் சதிக்குப் பின்னால் மேற்குலகமும், இந்தியாவும் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

'நல்லொழுக்கமான ஆட்சியைக் கட்டியெழுப்புவதற்கான பயணம்' என்ற தலைப்பில் எழுதப்பட்ட நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று முன் தினம் கண்டியில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த வெளியீட்டு விழாவில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவை மீண்டும் ஆட்சிபீடம் ஏற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் உட்பட சிங்களப் பேரினவாத அமைப்புக்களின் பிரதிநிதிகள், பௌத்த பிக்குகள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய குணதாச அமரசேகர, நாடு பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளதால், நாட்டை நேசிக்கும் அனைவரும் ஒன்றிணைந்து தற்போதைய அரசை வெளியேற்றுவதற்காகப் போராட வேண்டும்-என்றார். (த)

## லஞ்ச ஆணைக்குழுவில்

# ரணில், மகேந்திரனுக்கு எதிராக கூட்டு எதிரணி நேற்று முறைப்பாடு

கொழும்பு, நவ 1

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் ஆகியோருக்கு எதிராக மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று நேற்று இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளது.

மத்திய வங்கியின் பிணை முறிகள் விற்பனையில் இடம்பெற்ற பெரும் நிதி மோசடிக்கு இருவருமே பொறுப்புக்கூற வேண்டும் என்று குற்றஞ்சாட்டியுள்ள கூட்டு எதிர்க்கட்சியினர், இவர்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அலுவலகத்துக்கு நேற்று முற்பகல் சென்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த முறைப்பாட்டைச் செய்துள்ளனர்.

முறைப்பாடு செய்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த வாசுதேவ நாணயக்கார பிரதமரின் ஊழல் மோசடிகளை அடிப்படையாகக் கொண்டு முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளோம். மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மற்றும் அவரது மருமகனுக்கு இடையில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலால் இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள மோசடி மற்றும் அரச சொத்துக்கள் கொள்ளை என்பவற்றை முன்னிலைப்படுத்தி 7 விதமான ஆதாரங்களுடன் இந்த முறைப்பாட்டை வழங்கியிருக்கின்றோம்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த மோசடியுடன் நேரடியாக தொடர்புபட்டுள்ளார் என்பதையே நாங்கள் எமது முறைப்பாட்டில் கூறியுள்ளோம். இதற்கமைய மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மீதும், பிரதமர் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்.

> “மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் மற்றும் அவரது மருமகனுக்கு இடையில் இடம் வெற்ற கொடுக்கல் வாங்கலால் இந்த நாட்டுக்கு ஏற் பட்டுள்ள மோசடி மற்றும் அரச சொத்துக்கள் கொள்ளை என்பவற்றை முன்னிலைப் படுத்தி 7 விதமான ஆதாரங்களுடன் இந்த முறைப்பாட்டை வழங்கியிருக்கின்றோம்.”

இதுபோன்று வழங்கப்பட்ட முறைப்பாடுகள் இன்னும் நிலுவையில் இருப்பதோடு விசாரணைகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

ஊழல், மோசடி தடுப்பு விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளருடன் நான் இன்று (நேற்று) காலை பேச்சு நடத்தியிருந்தேன். இதற்கமைய நியாயமான விசாரணையை நடத்தவிருப்பதாக அவர் என்னிடம் உறுதியளித்தார். இதற்கு முன்னரும் விசாரணைகள் இடம்பெற்றிருக்கவில்லை என்பதை நாங்கள் சுட்டிக்காட்டினோம்-என்றார்.

இந்த முறைப்பாட்டைச் செய்வதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, கெஹலிய ரம்புக்வெல, மகிந்தானந்த அளுத்கமகே, ஜனக பண்டார தென்னகோன் மற்றும் வீரகுமார திஸாநாயக்க உட்பட பத்துப் பேர் சென்றிருந்தனர். (த)

# மகிந்த அணி இன்று சந்திப்பு

கொழும்பு, நவ 1

இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற பிணைமுறி மோசடி தொடர்பான விவகாரம் மற்றும் எதிர்வரும் 10ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் தீர்மானிக்க இன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணி விசேட கலந்துரையாடலை நடத்தவுள்ளது.

மத்திய வங்கி விவகாரத்தில் முன்னாள் ஆளுநர் குற்றமிழைத்துள்ளார் என்று கோப் குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டதைத் தொடர்ந்து மகிந்த அணி அரசுக்கு எதிராகப் பிரசாரங்களை முடுக்கிவிட்டுள்ளது. அதன் ஒருகட்டமாக பிரதமர் மற்றும் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன மகேந்திரனுக்கு எதிராக நேற்று இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் பொது எதிரணி முறைப்பாடு செய்துள்ளது.

மத்திய வங்கி விவகாரம் மற்றும் எதிர்வரும் 10ஆம் திகதி சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு-செலவுத்திட்டம் தொடர்பில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பதற்கு இன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த தலைமையில் பொது எதிரணி கூடவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் பத்தரமுல்லையில் அமைந்துள்ள மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. (த)

# தொலைபேசிக் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிப்பு

கொழும்பு, நவ 1

15 சதவீத வற் வரி அதிகரிப்பு, இன்று செவ்வாய்க்கிழமை முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

அதற்கிணங்கத் தொலைபேசி, அலைபேசி அழைப்புக் கட்டணங்கள் இன்று முதல் அதிகரிக்கின்றன.

80 பொருள்கள் மற்றும் சேவைகள் வற் அதிகரிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன் தொலைபேசி அழைப்புக் கட்டணம், தபால் கட்டணம் உள்ளிட்டவை உள்வாங்கப்பட்டுள்ளன.

தொலைபேசி, அலைபேசி அழைப்புக் கட்டணங்களுக்கு நடைமுறைப்படுத்தப்படும் 15 சதவீத வற் வரி உள்ளடங்கலாக அழைப்புக் கட்டணத்தில் 48 சதவீதம் வரியாக, பாவனையாளர்கள் செலுத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

# எந்த விசாரணைக்கும் முகம் கொடுக்கத் தயார்

## அர்ஜுன மகேந்திரன் சூளுரை



கொழும்பு, நவ 1

இலங்கை மத்திய வங்கியின் பிணைமுறி தொடர்பில் தனக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுச் சம்பந்தமான எந்த விசாரணைக்கும் முகம் கொடுக்கத் தான் தயாராக இருப்பதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் தெரிவித்தார்.

இந்தக் குற்றச்சாட்டுக்குப் பயந்து தான் ஒளிந்து திரியவில்லை எனவும் தனக்கும் தனது குடும்பத்துக்கும் களங்கம் கற்பிக்க முயல்பவர்கள் நடத்தும் எந்தவிதமான விசாரணைக்கும் தான் தயாராக இருப்பதாகவும் அவர் சிங்கப்பூரில் இருந்தவாறே தொலைபேசி மூலம் தெரிவித்தார்.

மத்திய வங்கியின் ஆளுநராகப் பதவி வகித்த காலத்தில் அரசின் பிணைமுறிகள் நீண்டகாலச் செயற்றிட்டங்களைத் தான் முன்னெடுத்ததாகவும், மத்திய வங்கியின் நடவடிக்கைகளில் தனியார் ஊடுருவலைத் தவிர்க்கப் பகிரங்க விலை மனுக்களை அறிமுகம் செய்யுமாறு தனது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


கடந்த வாரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட கோப் குழு அறிக்கையில் மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் அர்ஜுன மகேந்திரன் சம்பந்தப்பட்டிருப்பதாகவும், அதனால் அவருக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்கவேண்டுமென அந்தக் குழு பரிந்துரை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாள்களுடன் சென்ற கும்பல் கோண்டாவிலில் அட்டகாசம்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணம், கோண்டாவில் பகுதியிலுள்ள சிற்றுண்டிச் சாலைக்குள் வாள்களுடன் நுழைந்த மூன்று நபர்கள் அங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கிச் சேதப்படுத்தினர். அதன் உரிமையாளரை வெட்டு வதற்கு அவர்கள் முயற்சித்த போதும் அவர் சுதாக ரித்துத் தப்பித்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.



பலாலி வீதியில் கோண்டாவில் சந்திக்கு அருகில் உள்ள சிற்றுண்டிச் சாலையிலேயே நேற்றிரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது

முகத்தை கறுப்புத் துணியால் மறைத்து ஒரு மோட்டார் சைக்கிளில் வந்திறங்கிய மூன்று பேர் கடை உரிமையா ளர் மீது வாள் வீச்சினை மேற் கொண்டனர். எனினும் அவர் கடையினுள் இருந்து சிறிய கட்டையால் வாள் வீச்சினை தடுத்து காயமின்றி தப்பித்தார். எனினும் வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்து தப்பி செல்லும் போது, கடையில் இருந்த கண்ணாடிகளை அடித்து நொறுக்கி விட்டு சென்றனர். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ-21,37)

## இந்திய மீனவர்களுடனான பேச்சுக்கு யாழ். மாவட்ட மீனவர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், நவ.1

புதுடில்லியில் இடம்பெறும் இந்திய மீனவர்களுடனான பேச்சு வார்த்தைக்கு வடக்கு மாகாணத்திலிருந்து சென்றுள்ள பிரதிநிதிகள் எடுக்கும் முடிவுகளை ஏற்கப்போவதில்லை என்று யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் அறிவித்தனர்.

யாழ். கடற்றொழில் சம்மேளனத்தலைவர் வே.தவச்செல்வன் தலைமையிலான குழு எந்தவித அறிவித்தல்களையும் வழங்காது, தான்தோன்றித்தனமாக செயற்பட்டுள்ளனர் எனவும் மீனவ சங்கப்பிரதிநிதிகள் குற்றம் சுமத்தினர்.

யாழ் மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க சமாசங்களின் சம்மேளனத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் தெரிவித்ததாவது:

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் குறித்துப் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இந்தியாவின் புதுடில்லிக்கு குழு ஒன்று இலங்கையிலிருந்து பயணமாகியது. இந்தக்குழுவில் யாழ். மாவட்ட மீனவ சங்கங்கள் சார்பில் சமாசத் தலைவர் வே.தவச்செல்வம் உட்பட நான்கு பிரதிநிதிகள் சென்றுள்ளனர். எனினும் இது தொடர்பில் மீனவ சங்கப்பிரதிநிதிகளுடன் எந்தவித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளாது தான்தோன்றித்தனமாக அவர்கள் செயற்பட்டுள்ளனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம்.

அத்துடன், அண்மையில் நடந்த மீனவ சங்கக் கூட்டத்தில் மீனவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் எடுத்துக்கூறி, அவருடைய தலைமையில் இந்தியாவுக்குச் சென்று எமது பிரச்சினைகளை எடுத்துரைப்போம் என்று தீர்மானிக்கப்பட்டது. தற்போது அதனை உதாசீனம் செய்துவிட்டு, இந்திய மீனவர்களுடன் பேச்சுவார்த்தைக்கு இவர்கள் சென்றுள்ளனர். இவர்கள் அங்கு சென்று என்ன கதைக்கப் போகின்றனர். எமது பிரச்சினைகள் தொடர்பில் இவர்கள் ஆராய்வார்களா என்ற கேள்வி எம்மிடையே எழுந்துள்ளது.

அதுமட்டுமன்றி எட்கா உடன் படிக்கை மூலம் எமது கடற் பிரதேசங்களில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதற்கும் சந்தர்ப்பம் உள்ளது. ஆகவே இது தொடர்பில் அவர்கள் கருத்துக்களை முன்வைப்பார்களா? இதனை தடுக்க ஏதாவது வழி செய்வார்களா? என்பது எமக்கு தெரியவில்லை. எனவே, நாம் இந்தியாவில் நடைபெறவுள்ள மீனவ மக்களின் பிரச்சனை தொடர்பில் எடுக்கப்படும் முடிவுகளை ஏற்கப்போவதில்லை. எமது கடல்வளங்களை காப்பதற்காக நாம் உணவு ஒறுப்பு போராட்டம், எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளோம்.' என்றனர்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில் வலி. வடக்கு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை ஆகிய மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (வ-8)

## வவுனியாவில் கடும் மழை

வவுனியா மாவட்டத்தில் நேற்று கடும் மழை வீழ்ச்சி பதிவாகியது. காலை முதல் மாலை வரை 43.6 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியதாக வவுனியா மாவட்ட வானிலை அவதானிப்பு நிலையம் தெரிவித்தது.

காலபோக நெற்பயிர் செய்கை காலத்தில் உரிய நேரத்தில் மழை பெய்யவில்லை என்று விவசாயிகள் கவலை அடைந்தனர். இந்த நிலையில் வடக்கில் தற்போது பல பாகங்களிலும் மழை முகில்கள் சூழ்ந்து சிறிய ளவிலான மழை பெய்ய ஆரம்பித்துள்ளது.

இதே வேளை, நவம்பர் 4ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரையான மூன்று தினங்கள் வடக்கு மாகாணத்தில் பரவலாக கடும் மழைவீழ்ச்சி பதிவாகும் என்று வானிலை அவதான நிலையம் அறிவித்தது. (வ-21)

## வாள்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் ஆசிரியர், மாணவனுக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம் நவ.1

வாள்களுடன் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட ஆசிரியரையும் மாணவரையும் நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

நேற்றுமுன்தினம் பொலிஸ் அவசர அழைப்பு பிரிவான 119 க்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் கொக்குவில் பகுதியில் வைத்து இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து இரண்டு வாள்கள் கைப்பற்றப்பட்டன. அவருக்கு வாளை வழங்கியதாகத் தெரிவித்து மற்றொரு இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலிஸார் நேற்று யாழ் நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அத்துடன் கைப்பற்றப்பட்ட வாள்களும் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டன.

முதலில் கைது செய்யப்பட்டவர் இந்த வருடம் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவன். நாடகமும் அரங்கியலும் பாடத்தின் செய்முறைப் பரீட்சைக்காகப் பெற்ற வாளை திருப்பி ஒப்படைப்பதற்காகக் கொண்டு சென்றபோதே, அவர் கைது செய்யப்பட்டார். மற்றையவர் சுன்னாகம் பகுதியிலுள்ள பிரபல பாடசாலையொன்றின் நாடக ஆசிரியர். கொக்குவில் பகுதியிலுள்ள நாடக இயக்கம் ஒன்றிடமிருந்து வாளை அவர் பெற்றுக் கொடுத்தார் என்று கைது செய்யப்பட்டவர்களின் சார்பில் முன்னிலையான சட்டத்தரணிகள் தெரிவித்தனர். எனினும் பிணை வழங்குவதற்கு பொலிஸார் கடும் எதிர்ப்பை நீதிமன்றில் முன்வைத்தனர். அதனையடுத்து இருவரையும் நாளை புதன்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் சி.சதீஸ்தரன், விசாரணை அதிகாரியை நாளை மன்றில் முன்னிலையாகுமாறும் உத்தரவிட்டார். (வ-103)

## மாணவர் சீருடை வவுச்சர்கள் விநியோகம் இன்று ஆரம்பம்

### கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ.1

பாடசாலை மாணவர்களின் சீருடைக்காக வழங்கப்படும் பண வவுச்சர்களை பாடசாலைகளுக்கு விநியோகிக்கும் பணிகள் இன்று ஆரம்பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்தது.

வலயக் கல்விப் பணிப்பாளர்களின் மூலம் அனைத்துப் பாடசாலை அதிபர்களுக்கும் மாணவர் சீருடைக்கான பண வவுச்சர்கள் அனுப்பி வைக்கப்படும் என்று கல்வி ராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவவித்தான தெரிவித்தார்.

பாடசாலைகளில் தரம் ஒன்றுக்குப் புதிதாக சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களுக்கு பண வவுச்சர் அவர்கள் பாடசாலைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பின்னரே வழங்கப்படும்.கடந்த வருடத்தில் இடம் பெற்ற குறைபாடுகளை களைந்து இம்முறை முறையான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படும். இந்த பண வவுச்சர் மிகவும் பாதுகாப்பானது. இலகுவாக மாணவர்களுக்கு விநியோகிக்கக் கூடிய வகையில் இவை தயாரிக்கப்பட்டுள்ளன. நான்கு இலட்சம் மாணவர்களுக்கு தேவையான பண வவுச்சர்கள் இன்று முதல் விநியோகிக்கப்படும். மாணவர்களுக்கு சேட்டுக்காகவும் காற்சட்டைக்காகவும் இம்முறை தனித்தனியே வவுச்சர்கள் வழங்கப்படுகின்றன என்று செயலாளர் திஸ்ஸ ஹேவவித்தான தெரிவித்தார். (வ)

## யாழ். பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரிக்கு நேற்றுத் திடீர் இடமாற்றம்

யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பதில் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றியவர் நேற்று உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்.நகரில் வைத்து நேற்றுமுன்தினம் ஆசிரியர் ஒருவரும் மாணவர் ஒருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வாள் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. எனினும் அவர்கள் பாடசாலையில் இடம்பெறவிருந்த நிகழ்வு ஒன்றுக்காக அதனை எடுத்துச் சென்றிருந்ததாகவும் கூறப்பட்டது.

அவ்வாறு இருவரும் கைது செய்யப்பட்ட விடயம் தொடர்பில் பொலிஸ் மேலதிகாரிகளுக்கு அறிவிக்கவில்லை என்ற குற்றச்சாட்டில், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய பதில் தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாகப் பணியாற்றியவர் முல்லைத்தீவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். யாழ். தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக ஓரிரு நாள்களில் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

வேலையாள்கள் தேவை
கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 077 6231295

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 1310
சீட்டிழுப்பு திகதி 2016.10.31
வெற்றி இலக்கங்கள்
15 29 57 59 Y
ரூ. 10,564,280/-

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 34
சீட்டிழுப்பு திகதி 2016.10.31
வெற்றி இலக்கங்கள்
06 26 38
40
8,355,480/-
73
1976708

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 570
சீட்டிழுப்பு திகதி 2016.10.31
திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
28 49 64 72 T
சுப்பர் ஜக்பொட்
ரூ.57,996,320/=

## துயர் பகிர்கின்றோம்.



தோற்றம் 23.05.1934

மறைவு 27.10.2016

யா/வரணி மத்திய கல்லூரியில் ஆசிரியர்களாக பணிபுரியும் **பொன்னையா வல்லிபுரநாதன், திருமதி இராசமலர் நடராசா** ஆகி யோரின் பாசமிகு தாயார்.

### திருமதி இராசம்மா பொன்னையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் பங்கேற்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையுவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**ஆசிரியர் நலன்புரிசங்கம்,**
**யா/வரணி மத்திய கல்லூரி.**

(சி23058)(7.19.20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை (கிளிநொச்சி)

01.முகாமையாளர் (அடிப்படை சம்பளம் 30, 000/=)
02.கணக்காளர் /எழுதுவினைஞர்
(அடிப்படை சம்பளம் 12. 000/=)
03.அறைகள் பராமரிப்பாளர் (அடிப்படை சம்பளம் 15, 000/=)
04.சமையல் உதவியாளர் (அடிப்படை சம்பளம் 20, 000/=)
மேலதிக கொடுப்பனவு தங்குமிட வசதிகள் செய்து தரப்படும்.
அங்கீகரிக்கப்பட்ட ஹொட்டல், பாடசாலை பயிற்சி பெற்றிருத்தல் Or முன் அனுபவம் விரும்பத்தக்கது.

**077 760 4667**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில்
யா/ கைதடி குருசாமி வித்தியாலயத்திலிருந்து 15 மாணவர்கள் தோற்றி வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவிகளான

**தயானந்தன் அபிர்த்தனா -154**
**மயூரகுமாரன் திரிஷா -153**

அவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற 12 மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களிற்கு கற்பித்த ஆசிரியர் திருமதி விஜயந்தி சதீஸ்வரன் அவர்களையும் பாடசாலை அதிபர் திரு.ந. ஜெயரூபன் அவர்களையும் பாராட்டி வாழ்த்துக்கின்றோம்.

(ஜெ/5764)(02.21)

**பெற்றோர்கள்.**


# போதையில் இடையூறு விளைவித்த 12 பேருக்கு பிணை

திருகோணமலை, நவ. 1

திருகோணமலை நகரில் இடம்பெற்ற களியாட்ட நிகழ்வொன்றில் மது போதையில் கைது செய்யப்பட்ட 12 நபர்களையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்லுமாறு திருகோணமலை நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

திருகோணமலை நகரை அண்மித்த விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற களியாட்ட நிகழ்வின் போது மது அருந்தி விட்டு பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்ட போது எச்சரிக்கப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட 12 பேரையும், பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி மன்றில் முன்னலையாகுமாறும் நீதிமன்று உத்தரவிட்டது.

இதேவேளை- களியாட்ட நிகழ்வைப் பார்வையிடச்சென்ற இருவர், தாக்குதலுக்குள்ளான நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் நடத்திய சந்தேகநபர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று திருகோணமலை தலைமையக பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)


## பாதுகாப்பு ஊழியர் தேவை

யாழ்ப்பாண நகர மற்றும் கிராமப் புறங்களிலே பாதுகாப்பு ஊழியர்களாக வேலை செய்ய விரும்பும் 21 - 60 வயதுக்கு உட்பட்ட நல்ல பழக்கவழக்கமும், தேக ஆரோக்கியமும் கொண்டவர்கள் தங்களது சுய விவரக் கோவையினைப் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொண்டு சமர்ப்பித்து வேலையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**077 539 6350, 077 239 2850**
Mr. சின்னய்யா பாலதாஸ்
அங்கர் பாதுகாப்புச் சேவை.



## திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணி சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம்

### முன்னறிவித்தல்

இத் திருப்பணிச்சபையின் ஆண்டுப் பொதுக்கூட்டம் துர்முகி வருடம் கார்த்திகை மாதம் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (11.12.2016) முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி பம்பலப்பிட்டி இல.75, லோரன்ஸ் வீதியில் இருக்கும் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் முன்மொழிய விரும்பும் தீர்மானங்கள் மற்றும் எழுப்ப விரும்பும் கேள்விகளை அனுப்ப விரும்புவோர் இந்த அறிவித்தலில் இருந்து பத்து (10) நாள்களுக்குள் எங்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சரஸ்வதி மண்டபம்,
75, லோரன்ஸ் வீதி,
கொழும்பு-04

அ.திருநாவுக்கரசு.
செ.இராகவன்
இணைப்பொதுச் செயலாளர்கள்.

துர்முகி வருடம் ஐப்பசி மாதம் 14ஆம் நாள் (30.10.2016)

## தென்னம் பிள்ளைகள் விற்பனைக்குண்டு

எம்மிடம் நல்லினத் தென்னம் பிள்ளைகளும், குறைந்த காலத்தில் பயன் தரக் கூடிய தென்னம் நாற்றுக்களும் விற்பனைக்குண்டு.

**077 659 2044**

## பணிப்பெண் தேவை

கொழும்பு 5 இல். உள்ள வீட்டுக்கு பணிப்பெண் தேவை. தங்கி வேலை செய்ய கூடியவர். வயது 35 மேல். சம்பளம் 18000 மேல்

**077 226 8825**

## ஆட்டெரு தேவை

கிளிநொச்சியில் அமைந்துள்ள தோட்டத்திற்கு ஆட்டு எரு தேவை.

**077 985 7865**

THE HALO TRUST

# வேலைவாய்ப்புக்கள்

450 Thirunagar West,
Kilinochchi,Sri Lanka
T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தளமாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 14நாடுகளில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

எமது நிறுவனமானது பின்வரும் பதவிநிலைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தங்களிடமிருந்து விண்ணப்பங்களை எதிர்பார்க்கின்றது.

### கண்ணிவெடி அகற்றுனருக்கான பதவிவெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் இன் எதிர்காலவேலைக்கான மிதிவெடிப்பயிற்சிக்காக ஆண், பெண் இருபாலரின் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது கண்ணிவெடியகற்றல் துப்புரவற்றதும், தேகவலுவை அதிகம் பிரயோகிக்கும் கடினமான வேலையாகும். எமது தரமான நடவடிக்கைகள் கண்ணிவெடி அகற்றுதலிலுள்ள அபாயத்தை இயலுமான அளவு குறைத்துக் கொள்வதுடன் முற்றாக நீக்கமுடியாது. எனவே கருத்தில் கொள்ளப்படும் விண்ணப்பதாரிகளிடமிருந்து பலமான அர்ப்பணிப்பு உணர்வு எதிர்பார்க்கப்படுகின்றது.

குறிப்பு : எமதுமுன்னாள் பணியாளர்களும் விண்ணப்பிக்கலாம். ஆனால் அவர்கள் புதிய விண்ணப்பதாரிகளாகவே கருதப்படுவர்.

### சாரதிகளுக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ட்ரஸ்ரின் எதிர்கால வேலைக்காக சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்திற்கு நகர்த்திச் செல்வதும் அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் ADஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

கனரகவாகனங்கள் ஓட்டியஅனுபவமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.

### வாகனத்திருத்துனர்கள் (MECHANICS)பதவிவெற்றிடம்

கிளிநொச்சியைத் தளமாகக் கொண்டு இயங்கிவரும் எமதுவாகனத்திருத்தகத்திற்கும் மற்றும் இயந்திரம் மூலம் மிதிவெடிஅகற்றும் உபகரணங்களைத்திருத்துவதற்காகவும் அனுபவமுள்ள இயந்திரத்தொகுதி,வாகனத்திருத்துனர்களையும் ஆட்சேர்த்துக் கொண்டிருக்கின்றோம்.

அத்தியாவசிய தகுதிகள்:
- குறைந்தது மூன்றுவருடங்கள் இத்தொழிலில் அனுபவம் கொண்டிருத்தல் வேண்டும்.
- கடினவேலை செய்யக்கூடிய ஆர்வமுடையவராகவும் நல்ல தேகஆரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்.
- கிளிநொச்சியைச் சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
- ADவாகனஓட்டுனர் உரிமம் வைத்திருக்கவேண்டும்.

### Vacancy: Data Entry Officer/ தரவுப்பதிவுஅலுவலர்

The HALO Trust is the world's largest humanitarian demining organisation, with 8,000 staff working in 14 countries. HALO has been operating in Sri Lanka since 2002 and employs over 500 people.

HALO is seeking an experienced Data Entry officer to run the operational databases. The position will be based in Kilinochchi.

**Requirements:**
- Assist GIS Officer in data entry of mine clearance statistics, maintenance of records and archives.
- Assist Community Liaison officer in data entry for beneficiary studies and reports.
- Assist in the production of detailed statistical reports for submission to donors
- Ensure continuity of information between GIS and Liaison officers and their respective databases.
- Report directly to GIS officer.
- Any other duties as directed by the Programme Manager.

**Essential:**
- Microsoft office word and Excel.

**Desirable:**
- English language skills
- GIS knowledge or qualifications

மேற்குறிப்பிட்ட பதவிநிலைகளுக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் கடித உறையின் இடதுபக்கமேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கவுள்ள பதவிநிலையினைக் குறிப்பிட்டு எதிர்வரும் 07ஆம் திகதி கார்த்திகை மாதம் 2016 அன்று திங்கட்கிழமைக்கு முன்னதாகத் தங்களது சுயவிபரக்கோவையினைக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோஅல்லது நேரிலோ அனுப்பிவைக்க முடியும்.

**ஹெலோ ரஸ்ட், 450,திருநகர்மேற்கு, கிளிநொச்சி.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியிடம் அனுமதி பெற்றே வெளிநாடு சென்றார் விக்கி

## எனினும் ஆளுநர் ஊடாக அனுமதி பெறாததால் வெடித்தது சர்ச்சை

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், பிரிட்டனுக்கான தனது பய ணத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் ஊடாக அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடம் நேரடியாக அனுமதி பெற்றுச் சென்றமை சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

ஆளுநரிடம் அனுமதி பெற்றுக் கொள்ளாது வடக்கு மாகாண முதலமைச்சர் வெளிநாடு சென்றமை தொடர்பில் கொழும்பு ஊடகங்கள் பலவும் செய்திகளை வெளியிட்டுள்ளன.

பிரிட்டனின் கிங்ஸ்ரன் நகரத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்வதற்காக வடக்கு மாகாண முதல மைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கடந்த மாதம் 14ஆம் திகதி பயணம் மேற்கொண்டிருந்தார்.

வடக்கு மாகாண முதலமைச்சர் வெளிநாடு செல்லும்போது அதற்கான அனுமதியை வடக்கு மாகாண ஆளுநர் ஊடாகப் பெற்றுக் கொள்ளாமல் நேரடியாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பெற்றுக் கொண்டுள்ளார்.

முதலமைச்சர் ஆளுநரிடம் அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற ஏற்பாடு இல்லை. அண்மையில் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில், முதலமைச்சர் வெளிநாடு செல்வதாயின் ஜனாதிபதியிடமே அனுமதி பெறவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும் முதலமைச்சர் நாட்டிலிருந்து வெளியேறுவதற்கு முன்னதாகப் பதில் முதலமைச்சரை நியமிக்கவேண்டும். அதனை வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன். நாட்டை விட்டு வெளி யேறும்போது மேற்கொள்ளவில்லை. இதன் பின்னரே பதில் முதலமைச்சராக த.குருகுலராஜா, வடக்கு அவைத் தலை வர் சி.வி.கே.சிவஞானத்தின் முன்னிலை யில் பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## தையல் இயந்திரங்கள் வந்து சேர்ந்தன

தென்மராட்சி, நவ.1

தென்மராட்சி பிரதேசத்தில் மீள்குடியேற்ற அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான தையல் இயந்திரங்கள் நேற்று தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளன.

வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளின் விருப்பத்துக்கேற்ப கால்நடைகள், கோழிக் குஞ்சுகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் உட்பட பல்வேறு உதவிப் பொருள்கள் விநியோகிக் கப்படுகின்றன. தையல் இயந்திரத்துக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்ட 25 பேருக்கான தையல் இயந்திரங்கள் வந்து சேர்ந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இவை விரைவில் பயனாளிகளுக்கு அறிவிக்கப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.


## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க உபசெயலாளர் திரு.உதயகுமாரனின் அன்புத் தந்தையார்

அமரர் சரவணமுத்து செல்வரட்ணம்

அவர்கள் 28.10.2016 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி!

இணுவில் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்.



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 10 . 03 . 1948



மறைவு 13 . 11 . 2015

அமரர் செல்லையா ஜெயசேகரம்

(ஓய்வுநிலை அஞ்சலதிபர்)

திதி: வளர்பிறை துதியை- (01.11.2016)

ஆண்டு ஒன்று போயினும் அழியா நினைவுகளுடன்
என்றென்றும் உங்கள் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கும்

பெரியநாவலடி, கொடிகாமம். (Ver/5707)(11.18.21)

மனைவி, மகன்

## ஒன்பதாம் ஆண்டு நினைவுமலர்

அன்னை மடியில் 20 . 07 . 1982



ஆண்டவன் பிடியில் 11 . 11 . 2007

பரமநாதன் ஜெயக்குமார் (ஜெயா)

திதி:துதியை 01.11.2016

எங்கள் அன்பின் ஜெயாவே எங்கள் ஆருயிர் செல்வமே
பாசமிக்க மகனாக அன்புமிக்க சகோதரனாய்
பண்புமிக்க மைத்துனராய் பாசத்தின் மாமனாக
தித்திக்கும் சித்தப்பாவாக வந்துதித்த எங்கள் செல்லமே ஜெயா!
கந்த சஷ்டி திருநாளில் கண் இமைக்கும் நேரத்தில்
கயவர்களின் அம்புபட்டு கந்தன் தன் திருவடியில் உனை அழைத்தானோ
கந்த சஷ்டி திருநாள் வந்ததுமே எமை கண்டவர்கள் எல்லாம்
ஜெயாவின் நினைவுநாள் வருகிறதே என கேட்கும் போது எம் நெஞ்சம் வெடிக்குதடா
எங்கள் ஜெயா உன் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!!

தாவளை இயற்றாலை, கொடிகாமம். (V 134)(16,17,19)

என்றும் உன் நினைவில் வாழும் குடும்பத்தினர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



இராசையா நவரத்தினம்

ஆண்டொன்று சென்றதுவோ அன்புத் தந்தையே
ஓராண்டென்ன ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
நெஞ்சை விட்டகலாது உம் நினைவுகள்

என்றும் அன்புள்ள மனைவி, மகள்

(K/201)(12.21)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 06.04.1941



மறைவு 13.11.2015

கந்தையா தர்மபாலன்

கண்ணியமாய் வாழ்ந்து காலமெல்லாம் நற்பணிசெய்து
எண்ணியவை எல்லாம் நிறைவேறி புண்ணியத்தின் புகழ் கண்டீர்
கால் பதித்து யாவரையும் கவர்ந்திழுக்கும்
கனிவான பண்பினிலே காலமெலாம் வாழ்ந்தீர்
சீலமுடன் எமை அன்பாய் நற்கோலமுடன் வாழ
ஞாலமதில் வழிகாட்டி நன்நெறிமுறைகள்
நலமுடனே பகன்று நின்ற பகலவனே!
திண்ணியமாய் வர்த்தகத்தில் திகழ்ந்தொடு
வண்ணமுடன் கலை மிளிர தொழிலாற்றி
காண்போர் வியந்திடவே நிலையாக நிமிர்ந்து நின்றீர்
விண்ணில் மதி உள்ளவரை உமை மறவோம்
ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

60, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம். (J 5751)(16.17)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிரியையும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 20 . 11 . 1941



இறைவன் அடியில் 03 . 10 . 2016

அமரர் கந்தையா இராஜசிங்கம்

(இளைப்பாறிய மதுவரி திணைக்கள உதவி ஆணையாளர்)

மலேசியாவை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழை கட்டுவனை வசிப்பிடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த கந்தையா இராஜசிங்கம் 03.10.2016 அன்று சிவபதமடைந்த செய்தி கேட்டு எம் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும் நேரிலும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலமும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்தவர்களுக்கும், இறுதிக் கிரியைகள் மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு 02.11.2016 புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிரியைகளிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து 03.11.2016 வியாழக்கிழமை, பம்பலப்பிட்டி தொடர்மாடி நலன்புரி மண்டபத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் T.P. 0113158839 / 0777938477


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்வகம்
## விழிப்புல வலுவிழந்தோர் இல்லம்

### பதவி வெற்றிடம்

**அலுவலக எழுதுவினைஞர்**

- **தகைமை :-** க.பொ.த.உயர்தரம் கற்றிருத்தல் அலுவலக கணக்கீட்டில் போதிய தேர்ச்சி
- **நியந்தனை :-** வாழ்வக நிறுவனத்தில் தங்கியிருந்து பணியாற்ற முன்வருவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**பாதுகாப்பு உத்தியோகத்தர்**

- **தகைமை :-** எழுத, வாசிக்கத் தெரிந்த நல் ஒழுக்கம் உடைய 30 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் மட்டும்.

மேற்குறித்த வெற்றிடங்களுக்கு விண்ணப்பதாரர் தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக தமது சுயவிவரங்களை **20.11.2016** இற்கு பிந்தாமல் **"தலைவர், வாழ்வகம், சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்"** என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

## வாழ்வகம்
சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்
**021 224 0146, 076 828 6331**

(ச/23054)
(11.17.21)


## அறிவித்தல்

**வலி. தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம் - 04**
**ஆதன இல 07 (புதிய பதிவு)**
**சுதுமலை வீதி**

வட்டாரம் 04, சுதுமலை வீதி, ஆதன இலக்கம் 07 இல் அமைந்துள்ள (உறுதிப்படி) வடமாகாணம் சுதுமலை இறை "சான்றான் தோட்டம்" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 02 குளி 17.85 கொண்ட இவ்வாதமானது யாழ்ப் பாணம், சுதுமலை தெற்கைச்சேர்ந்த கதிரவேலு தர்மலிங்கம் பெண் யோகராணி ஆகிய இவர்களால் சுதுமலை தெற்கு மானிப்பாயைச்சேர்ந்த செல்வி குலகேரம் தமயந்தி என் பவருக்கு பிரசித்த நொத்தரிஸ் திரு. M.தியாகராஜா முகதாவில் நிறைவேறிய 16738 ஆம் இலக்க 18.08.2016 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. N.சத்தியமூர்த்தி அவர்களால் வரையப்பட்ட 3048 ஆம் இலக்க 2016.08.18 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் 02 குளி 17.85 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோரு பவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாள்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடத்து இவ்வாதனம் செல்வி. குலசேகரம் தமயந்தி என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை,**
**மானிப்பாய்.**
(J5775)(7.19.20)

"I have fought the good fight, I have finished the race, I have kept the faith. Now there is in store for me the crown of righteousness"
*2 Timothy 4:7-8*



| Born | Called to rest |
|---|---|
| 20 | 30 |
| 12 | 10 |
| 1968 | 2016 |

**Miss Shanthakumary (Kiruba) Selvarajah**
*Primary Trained Teacher*
*(1999 - 2016)*
*Chundikuli Girl's College,*
*Jaffna*

*you are loved beyond words*
*and be missed beyond measure*
*May your soul rest in peace*

*Teachers' Guild*
*Chundikuli Girls' College*
*Jaffna*

## அறிவித்தல்

**வலி. தென்மேற்கு பிரதேச சபை**
**மானிப்பாய் கிராம உப அலுவலகம், ஆனைக்கோட்டை**
**வட்டாரம் - 05**
**பிடாரி கோயில் வீதி**
**ஆதன இல 33 (புதிய பதிவு)**

வட்டாரம் 05, பிடாரி கோயில் வீதி, ஆதன இலக்கம் 33 இல் அமைந்துள்ள (உறுதிப்படி) வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "சாமிச்சாட்டி" என்னும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 03.51 கொண்ட இவ்வாதமானது யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை வராகி அம்மன் கோயிலடி தற்போது கொக்குவில் மேற்கு, மருதப்பு நல்லையா கைம்பெண் பரமேஸ்வரியும் தற்காலம் சுவிற்ஸர்லாந்து நல்லையா சிவகுமாரும் (இவர் தனது அற்றோனித்தத்துவக்காரியான மருதப்பு நல்லையா கைம்பெண் பரமேஸ்வரி மூலம்) ஆகிய இவர்களால் ஆனைக்கோட்டை உயரப்புலத்தைச் சேர்ந்த தேவசகாயம் தாசீஸ் பெண் மேரிகமலா என் பவருக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தரிஸ் திரு.செ.ந.விஸ்வலிங்கம் முகதாவில் நிறைவேறிய 4199 ஆம் இலக்க 26.06.2011 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக் கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்து வதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. K.கனகசபை அவர்களால் வரையப்பட்ட 4560/11 ஆம் இலக்க 2011.06.21 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ்வாதமானது "சாமிச்சாட்டி" நிலப்பரப்பு 01 குளி 03.51 கொண்ட இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக பிரசுரத் திகதியிலிருந்து 14 நாள்களுக்கு தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அவ்வாறு யாராவது எவ்வுரிமையும் கோரப்படாதவிடாது இவ்வாதனம் தேவசகாயம் தாசீஸ் பெண் மேரிகமலா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசபை,**
**மானிப்பாய்.**
(J5772)(7.19.20)

## முதலாம் ஆண்டு நினைவும் சிரார்த்ததின அழைப்பும்

### கணபதிப்பிள்ளை தியாகராஜா



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30.01.1952 | 13.11.2015 |

ஓடி முடிந்தது ஓராண்டு
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எங்ஙனம் மறப்போம் உம்மை

எங்கள் அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு சிரார்த்ததினமான இன்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் நினைவு பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெற இருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**39, கல்லூரி வீதி, நீராவியடி,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்.**

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
### சின்னத்தம்பி பரமு

கடந்த 01.10.2016 அன்று இறைபதம் எய்திய எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி பரமு அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து எமது ஆறாத்துயரில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தொலைபேசி, இணையத் தளங்கள் மூலம் அனுதாபச் செய்திகளை தெரிவித்தவர்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்களை வெளியிட்டவர்கள், அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள், இறுதி ஊர்வலத்தில் மயானம் வரை கலந்து சிறப்பித்தவர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தினர் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, மேலும் இன்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணிக்கு சாவகச்சேரி டச்சுவீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ ஐங்கரன் மணிமண்டபத்தில் இடம்பெறவிருக்கும் அமரரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சாவகச்சேரி வடக்கு,**
**மீசாலை.**

**குடும்பத்தினர்.**
**077 8630951**

## பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பிலுள்ள தூய்மையான ஹெல உறுமய அமைப்பின் தலைமை அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ். பல்கலைக்கழக மாணவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகளின்போது கைதாகியுள்ள பொலிஸாருக்குத் தேவையான சட்ட உதவிகளை வழங்க வேண்டிய பொறுப்பு பொலிஸ்மா அதிபரைச் சார்ந்துள்ளது. மேலும் கைதாகியுள்ள பொலிஸார் ஐவரும் யாழ்ப்பாணத்தில் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, தாக்குதலுக்கு இலக்காகியிருந்தனர். அதனால் அவர்கள் தற்போது அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஆனால் யாழ்ப்பாண நீதிவான் மன்றிலேயே அந்த வழக்கு விசாரணை இடம்பெறுகிறது. இந்த நிலையில் இவர்கள் ஐவரையும் விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் அழைத்துச் செல்வது கைதான பொலிஸாருக்குப் பாதுகாப்பாக அமையாது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள தளம்பல் நிலமையினால் பொலிஸார் சார்பில் தமிழ் மொழியில் சரளமாகப் பேசும் சட்டத் தரணிகளைத் தேடிக் கொள்வதும் கடினம். பொலிஸாருக்காக அவர்கள் முற்படுவதும் கேள்விக் குறியாகவே உள்ளது. தெற்கிலிருந்து சட்டத்தரணிகள் சென்றால், அவர்களின் பாதுகாப்பும் கேள்விக் குறியாகிவிடும். அதேபோல் வழக்கும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, கைதானவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்றால், அங்கு அவர்களின் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் இல்லை. அதனால் இவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொறுப்பு பொலிஸாரைச் சார்ந்துள்ளது. ஆனால் தற்போது யாழ்பாணத்தில் பொலிஸாரின் பாதுகாப்பும் கேள்விக் குறியாகியுள்ள நிலையில் அவர்கள் எப்படி மக்களுக்குப் பாதுகாப்பு வழங்க முடியும் என்று சிந்திக்க வேண்டும். எனவே இந்த வழக்கை விரைவில் யாழ்ப்பாணத்திலிருந்து அநுராதபுரத்துக்கு மாற்றுவதே சிறந்த வழியாகும் -என்றார். (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமாகாண மரநடுகை மாதம்

"மரங்களை நாட்டுவதற்கான மிகச் சிறந்த காலம் 20 வருடங்களுக்கு முன்னர் இருந்தது. அடுத்த நல்ல நாள் இன்றாகும்"

– சீனப் பழமொழி

கார்த்திகை 01–30, 2016
"சொந்த மண் சொந்த மரங்கள்"
"ஆளுக்கொரு மரம் நடுவோம் நாளுக்கொரு வரம் பெறுவோம்"

# அடிப்படை வசதிகள் எதுமின்றி பெரிய தோட்டம் கிராம மக்கள்

## வாழ்வாதார உதவிகள் வழங்குமாறு கோரிக்கை





யாழ்ப்பாணம், நவ.1

யாழ்ப்பாணம், அரியாலை தென்கிழக்குப் பெரிய தோட்டம் கிராமத்தில் 68 குடும்பங்கள் வாழ்கின்றன. அங்கு மின்சாரம், வீதிச் சீரமைப்பு, மலசல கூடங்கள் என எதுவித அடிப்படை வசதிகளும் இல்லை என்று அங்குள்ள மக்கள் கவலை தெரிவித்தனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது:

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட ஜே/89 கிராம அலுவலர் பிரிவில் அண்மையில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களே சிரமங்களை எதிர் நோக்குகின்றனர். குடியமர்த்தப்பட்ட மக்களில் பெரும்பாலானோர் குடிசை வீடுகளிலேயே வாழ்கின்றனர். சிலருக்கு மலசல கூடங்கள் அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட போதிலும் அங்குள்ள மக்களில் ஒரு தொகுதியினர் மலசல கூட வசதி அற்ற நிலையில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். மக்களின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் பெண்கள் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் எனப் பலரும் அயலவர்களின் உதவிகளை நாடவேண்டிய நிர்ப்பந்த நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். பொது இடங்களில் சிறுவர்கள் மலம் கழிப்பதால் அந்தப் பகுதியில் சுகாதார சீர்கேடும் காணப்படுகின்றது.

மக்கள்வாழும்குடிசைகள் ஓலைக் குடிசைகளாகவும், படங்குகளால் விரிக்கப்பட்ட குடிசைகளாகவும் காணப்படுகின்றன. குறித்த கிராமம் கடற்கரையை அண்டிய பிரதேசமாக காணப்படுவதனால் அதிக காற்றின் காரணமாக குடிசைப் படங்குகள் கிழிவடைகின்றன.

தற்போது மழைகாலம் ஆரம்பித்துள்ளது. குடிசைகளுக்குள் நீர் ஒழுகுகின்றது. குடியிருப்புக்குள் வெள்ள நீர் உட்செல்லக் கூடிய நிலையும் காணப்படுகிறது. என்ன செய்வது என்று தெரியாமல் நாம் கடும் துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் இது தொடர்பில் விளக்கிய போதிலும் ஒரு சில குறிப்பிட்டவர்களுக்கு மட்டுமே வாழ்வாதார திட்டங்களும் வீட்டுத் திட்டங்களும் வழங்கப்பட்டுள்ளன. மிகுதிப் பேருக்கு எதுவுமில்லை. எமக்கான திட்டங்கள் பற்றி கேட்கும் போதெல்லாம் தருகின்றோம் என்பார்கள். ஆனால் இதுவரை தந்ததில்லை. நாம் இந்தக் கிராமத்துக்கு மீள்குடியேறி 4 வருடங்கள் ஆகின்றன. எமக்கான எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை.

எமது கிராமத்தில் பாடசாலை சிறுவர்கள் அதிகமுள்ளனர். ஆனால் குழந்தைகளுக்கு ஒரு முன்பள்ளி கூட இங்கு இல்லை. பாடசாலை மாணவர்கள், பலகலைக்கழகம் செல்லும் மாணவர்கள் எனக் கல்வி பயிலும் பிள்ளைகள் இருக்கின்ற போதிலும் எமது பிள்ளைகளின் கல்விக்கு உதவி செய்ய யாரும் முன்வருவதில்லை. அதனால் எமது பிள்ளைகளின் கல்வியில் முன்னேற்றமில்லை.

எமது கிராமப் பகுதியின் உள்ளக வீதிகள் புனரமைக்கப்படாத நிலையிலும், வீதி மின் வசதிகள் இன்னமும் பொருத்தப்படாத நிலையிலும் உள்ளது.

இரவு வேளையில் வீதிகளில் மற்றும் குடியிருப்புகளுக்குள் விசஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

நாம் ஒவ்வொரு நாள் பொழுதுகளையும் பெரும் சவால்களுக்கு மத்தியில் கழிக்க வேண்டியுள்ளது. எமது வாழ்வாதரத்துக்கு அரசு உதவி செய்ய வேண்டும்– என்றனர்.

குறித்த கிராமத்துக்கான வீட்டுத்திட்டங்கள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம். அவர்களுக்கான உதவிகளும் வீட்டுத் திட்டங்களும் படிப் படியாக வழங்கப்படும்– என்று நல்லூர் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ற–4,8)



வவுனியா, குருமன்காடு பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு பெய்த மழையால் வயிரவபுளியங்குளம் செல்லும் சந்தியில் உள்ள [illegible] மரமொன்று முறிந்து வீழ்ந்தது. வீதியில் பயணித்த பாடசாலை மாணவர்கள் உட்பட பலரும் சிரமப்பட்டனர். நேற்று முற்பகல் வரை அந்த மரம் அந்த இடத்திலிருந்து அகற்றப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ற–4,402)

# நயினாதீவில் குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகம்

யாழ்ப்பாணம், நவ. 1

நயினாதீவில் பிரசித்தி பெற்ற இரு ஆலயங்களுக்கும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பொதுமக்களுக்கும் நிலத்தடி குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப் படவுள்ளது என யாழ். மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

குடிதண்ணீர் பற்றாக்குறையான இடங்கள் மற்றும் உப்புத் தன்மையுள்ள தண்ணீர் உள்ள இடங்களைத் தெரிவு செய்து அந்தப் பகுதி மக்களுக்கு நிலத்தடி குழாய்கள் மூலம் தண்ணீர் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம் மற்றும் நாகவிகாரைக்கும் அந்தச் சூழலில் வசிக்கும் மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் இந்தத் தண்ணீர் விநியோகம் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இந்தப் பிரதேசத்தில் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. அதன் அடுத்தகட்டப் பணியாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அந்த பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகம் வழங்கப் படவுள்ளது.

கரவெட்டி பிரதேச செயலகத்துக்குட்பட்ட உடுப்பிட்டி, இமையாணன் பகுதிகளுக்கும் நிலத்தடிக்குழாய் மூலம் குடிதண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு 35 மில்லியன் ரூபா நிதி யாழ். மாவட்ட செயலர் ஊடாக மீள்குடியேற்ற அமைச்சால் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்குவதற்குரிய வேலைத்திட்டங்கள் அடுத்த வருட ஆரம்பத்தில் நடைபெறவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ற–10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதிக் கொடை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், நவ.1

இலங்கை மின்சார சபையின் 47ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு இன்று குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இலங்கை மின்சார சபை வடக்கு மாகாண ஊழியர் நலன்புரி மற்றும் விளையாட்டு சங்கத்தினால் இந்த குருதிக்கொடை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகின்றது. இந்த நிகழ்வு இன்று செவ்வாய்கிழமை காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரை யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் உள்ள இலங்கை மின்சார சபையின் பிரதி பொது முகாமையாளர் அலுவலகத்தில் இடம்பெறுகிறது. இந்த குருதிக் கொடை நிகழ்வில் இலங்கை மின்சார சபை வடக்கு மாகாண உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-21)

# கந்த சஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம், நவ. 1

சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் நேற்றுத் திங்கட்கிழமை முதல் தினமும் பகல் 10.30 மணிக்கு முழுக்குடன் ஆரம்பமாகி தொடர்ந்து முருகப்பெருமானுக்கு சிறப்பு வழிபாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

எதிர்வரும் சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு முழுக்குடன் ஆரம்பமாகி தொடர்ந்து சூரசங்காரம் இடம்பெறும். மறுநாள் மாலை 4.30 மணிக்கு வள்ளி, தெய்வயானை சமேத முருகப் பெருமானுக்கு திருக்கல்யாண வைபவமும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. (வ)

# 'கந்தில் பாவை' நூல் வெளியீடு இன்று

யாழ்ப்பாணம், நவ. 1

தேவகாந்தனின் 'கந்தில் பாவை' நூல் வெளியீடும் கருத்துரையும் இன்று செவ்வாய்க்கிழமை பி.ப.3.30 மணிக்கு கரவெட்டி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. இதில் முதன்மை விருந்தினராக எழுத்தாளர் தெணியான் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ)

# ஹோட்டல் உரிமையாளரின் சடலம் மீட்பு

கொழும்பு, நவ.1

நிட்டம்புவ, ஊராப்பொல பகுதியிலுள்ள ஹோட்டலொன்றின் உரிமையாளரொருவர், அவரது ஹோட்டலிலிருந்து, நேற்று அதிகாலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். உயிரிழந்தநபர், ஊராப்பொல பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அவர், கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டுள்ளார் எனவும் தெரிவித்த பொலிஸார், அவரின் சடலத்தின் மீது பூச்சிநாசினி தெளிக்கப்பட்டிருந்ததாகவும் கூறினர். (து)

## போராட்டத்தை...

நீதி கோரி ஏற்கனவே தாம் கற்றல் செயற்பாடுகளைப் புறக்கணித்துள்ள நிலையில், பல்கலைக்கழக நிர்வாகத்தின் செயற்பாடுகள் தொடர்ந்து கொண்டிருந்தன. இந்த நிலையிலேயே நிர்வாகச் செயற்பாட்டையும் முடக்கித் தமது போராட்டதை முன்னெடுத்ததாக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

போராட்டத்தால் பல்கலைக் கழகத்தின் பிரதான வாயிலின் உள்ளே மாணவர்களும் வெளியே நிர்வாகத்தினரும் நின்று கொண்டனர். இதனால், யாழ்.பல்கலைக் கழக நிர்வாகச் செயற்பாடுகள் அனைத்தும் நேற்று முடங்கின.

பல்கலைக்கழக நிர்வாகப் பணி யாளர்கள் கடமைக்குச் செல்ல முடியாது வீதியில் கூட்டமாகத் தரித்து நின்றனர். இதனால் அந்தப் பிரதேசத்தில் பரபரப்பான நிலமை காணப்பட்டது.

அத்துடன் பல்கலைக்கழக மாணவர்கள் வளாகத்தில் கறுப்புக் கொடிகளையும் கட்டி தமதுஎதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முதலில் நிர்வாக உத்தியோகத்தர்கள் வாயிலுக்கு வெளியே காத்திருந்தனர். அதன் பின்னர் யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் துணைவேந்தர் வசந்தி அரசரட் ணம் சென்றபோது மாணவர்கள் அவரையும் உள்ளே செல்ல விடாது தடுத்தனர். இதனால் சிறிது நேரம் மாணவர்களுக்கும் துணைவேந்தருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனை அவதானித்த ஊடகவி யலாளர்கள் அதனைப் படம் பிடித்தபோது, அதனை அவதானித்த துணைவேந்தர் சடுதியாக ஊடகவியலாளர் ஒருவரின் புகைப்படக் கருவியைப் பறிக்க முற்பட்டதாகவும், இதனால் ஊடகவியலாளர்களுக்கும் துணை வேந்தருக்கும் இடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர் மாணவர்கள், துணை வேந்தரையும் பீடாதிபதிகளையும் மட்டும் உள்ளே செல்ல அனுமதித்தனர். அதன் பின்னர் அமைச்சர் சுவாமிநாதனுடனான சந்திப்பின்போது அவர் வழங்கிய உறுதி மொழியை அடுத்துப் போராட்டம் கைவிடப்பட்டதாக மாணவர்கள் கூறினர். (து-4-8-101)

## பயங்கரவாதம்...

நற்பண்பாக இருக்க முடியும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமான மாவை.சேனாதிராசா தெரிவித்தார்.

கீரிமலையில் நேற்று இடம் பெற்ற மக்களிடம் வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பாக உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களுடைய மக்கள் மிகப் பெரும் எதிர்பார்ப்புடன் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்திருந்தார்கள். அரசியல் தீர்வு, நில விடுவிப்பு, அரசியல் கைதிகள் விடுதலை உள்ளிட்ட பல்வேறு எதிர்பார்ப்புடன்தான் உங்களுக்கு வாக்களித்தார்கள்.

நீங்கள் நல்லிணக்கத்தை நாட்டில் நிலைநிறுத்துவதில் விசுவாசமாகச் செயற்படுவீர்கள் என்று நம்புகின்றோம். அமைச்சுப் பொறுப்பு எங்களின் இலக்கு அல்ல. எமது மக்களின் விடுதலையே முக்கியமானது.

மத ரீதியிலான முரண்பாடுகள் உருவாக்கப்படுகின்றன. மக்களின் நம்பிக்கையைக் கெடுக்கும் விதத்தில் சில விடயங்கள் நடக்கின்றன. மத நல்லிணக் கத்தைக் குழப்ப நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகப் போராடினார்கள். மகாத்மா காந்தி அகிம்சை ரீதியாகப் போராடினார். சுபாஸ் சந்திரபோஸ் ஆயுதத்தை ஏந்திப் போராடினார். ஆங்கிலேயர்கள் கூட காந்தியைப் பயங்கரவாதி என்று தான் சொன்னார்கள். போர் நடைபெற்றது உண்மை தான். நாங்கள் எங்களுடைய விடுதலைக்காகத் தான் போராடியவர்கள் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன். 7 ஆண்டுகளுக்குப் பின்னரும் நல்லிணக்கம் பேசிக் கொண்டு, நாங்கள் மீண்டும் மீண்டும் பயங்கரவாதம் என்ற சொல்லை உச்சரிக்காமல் இருப்பது நல்லது என்று கூறிக் கொள்கின்றேன். தோற்கடித்து விட்டோம் என்று சொல்லுகின்ற வார்த்தைகளை பயன்படுத்த வேண்டாம் என்பதை இதயபூர்வமாக உங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அதுதான் நல்லிணக்கத்தின் நற்பண்பாக இருக்க முடியும்.

நல்லிணக்கத்தில் ஒரு சில விடயங்களைத்தான் இதுவரை அடைந்திருக்கின்றோம். அடைய வேண்டிய விடயங்கள் இன்னமும் ஏராளமாக இருக்கின்றன.

இங்குள்ள மக்கள் தாங்கள் ஆக்கிரமிப்புக்குள் இருக்கின்றோம் என்றோ, அடக்கப்பட்டு இருக்கின்றோம் என்றோ எண்ணாமல், அவர்கள் தங்களைத் தாங்களே ஆளுகின்றார்கள் என்று எண் ணக் கூடிய - உணரக்கூடிய நிலமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

எங்களுடைய நம்பிக்கைகளை இழக்காமல் நீங்கள், எங்களு டைய பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கவேண்டும். தீர்வு காண வேண்டும். அதனைச் செய்வீர் கள் என்று நம்புகின்றேன்.

இந்த மண்ணிலே எந்தக் கரங் களினால் இந்தப் பிரதேசம் அழிக்கப்பட்டதோ, எந்தக் கரங் களினால் உயிர்கள் அழிக்கப்பட்டனவோ அவர்களின் கரங் களினால் இந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டு, உயிர் வாழ்வை அங்கீகரித்தமை சிறப்பானது - என்றார். (து-5-7)

## வடக்கு...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரையாற்றுவதற்கு முன்னதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா உரையாற்றினார். அவர் தனது உரையில், எங்கள் மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள். நாங்கள் உங்களுடன் எந்தவொரு ஒப்பந்தமும் செய்திருக்கவில்லை. எங்களுடைய மக் களின் இதயத்தை உங்களுக்கு தந்து நீங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்து உரையாற் றிய ஜனாதிபதி, இந்த வடபகுதி மக்கள் என்னைத் தெரிவு செய்வதற்காக வாக்களித்த அந்த உதவியை நான் ஒருபோதும் மறக்கமாட்டேன். எந்தவிதமான உடன்படிக்கையும் இல்லாமல் எங்களுடைய தமிழ் மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள் என்று மாவை சொன்னார். ஒரு பத்திரத்திலே போடுகின்ற கையெழுத்து உடன்படிக்கையை விட உள்ளத்திலே-மனச்சாட்சியிலே இருக்கின்ற உடன்படிக்கைதான் மிக முக்கியம் என்பதைச் சொல்கின்றேன். நாட்டில் மக்கள் மத்தியில் மனச்சாட்சியில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அனைவரும் ஒன்றுபட வேண்டும் - என்றார்.

யாழ். பல்கலைக்கழக மாண வர்களின் உயிரிழப்புச் சம்பவம் தொடர்பில் குறிப்பிட்டுவிட்டு மேலும் உரையாற்றிய ஜனாதிபதி மைத்திரிபால, ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படவேண்டும். சில ஊடகங்கள் தங்களுடைய செய்திகள் ஊடாக மக்களை அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டார்கள். ஆனால் இன்னும் சில ஊடகங்கள் மக்களை குழப்பிவிடும் விதத்திலே, அமைதியற்ற சூழலை ஏற்படுத்தும் விதத்தில் செயற்பட்டார்கள். எல்லாவிதமான உரிமைகளும், சுதந்திரங்களும் ஊடகங்களுக்கு இருந்தாலும் கூட இப்படியான சூழல் ஏற்படும்போது நாட்டில் அமைதியையும் - சமாதானத்தையும் ஏற்படுத்தும் விதத்திலே செயற்படவேண்டும். தொலைக்காட்சியைப் பார்த் தால், புத்திரிகைகளைப் பார்த்தால் மக்களுடைய மனங்கள் அமைதியடையும் வகையிலே இருக்க வேண்டும். மக்களை அமைதியற்ற நிலைக்கு உள்ளாக்குவது தவறு. அது பிழையான விடயம். ஊடகங்கள் எப்போதும் சமாதானத்தை ஏற்படுத்தும் விதத்தில் செயற்படவேண்டும். மக்கள் அமைதியாக இருக்கும் விதத்தில் செயற்படவேண்டும்.

ஊடகங்கள் தமது பொறுப்பைச் சரியாகச் செய்யாவிட்டால் ஒரு நாட்டையே நிர்மூலமாக்க முடியும். அப்படியான விடயங்களைச் செய்யும்போது அரசியல் நோக்குடன் செயற்படக்கூடாது. நாங்கள் கடமையுணர்வோடு செயற் படவேண்டும். நாட்டின் நன்மைக் காகப் பணியாற்ற வேண்டும். மக் கள் அமைதியாக இருக்கக் கூடிய விதத்தில் செயற்பட்ட அனைத்து ஊடகங்களுக்கும் நன்றி - என்றார். (து-5-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார அமைச்சு அதிகாரிகள் 8 பேர் விரைவில் இடமாற்றம்

கொழும்பு, நவ 1

சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால உட்பட ஏனைய உயரதிகாரிகள் எட்டுப் பேர் அடுத்த வருடம் இடமாற்றம் செய்யப்படக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகச் சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வருடாந்தம் நடக்கும் இந்த இடமாற்றங்களின் அடிப்படையில் அடுத்த வருடம் இடமாற்றம் செய்யப்படவுள்ள உயரதிகாரிகளின் பெயர்கள் சுகாதார அமைச்சின் இணையத்தளத்தில் இப்போது வெளியாகியிருப்பதாகத் தெரியவருகின்றது.

2017ஆம் ஆண்டுக்கான இடமாற்றப் பட்டியலில் சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால, பிரதிப் பணிப்பாளர் நாயகங்களான லக்ஸ்மி சோமசுந்தர, சுனில் டி அல்விஸ், எம்.எல்.சியம்பலாகொட, சரத் அமுனுகம, ஹேமந்த நவரத்னகம, சம்பிக்கா விக்கிரமசிங்க மற்றும் வைத்திய சேவைகள் பணிப்பாளர் பிரியந்த அத்தபத்து ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சின் தகவலறிந்த வட்டாரங்கள், இந்த இடமாற்ற ஏற்பாடுகள் அவசர அவசரமாக செய்யப்பட்டு இணையத்தளத்தில் வெளியிடப்பட்டி ருப்பதாகவும், சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால வெளிநாடு சென்றிருக்கும் இந்தச் சமயத்தில் இந்த இடமாற்றப் பட்டியல் வெளியிடப்பட்டிருப்பதன் சூட்சுமம் மர்மமாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளன. (து)

## குற்றங்களைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைப்புத் தேவை

### உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசுந்தர தெரிவிப்பு

> “பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒழுக்க மீறல்கள் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஏதாவது தவறுகள் ஒழுக்க வீனங்கள் நம்பிக்கை யீனங்கள் இருப்பின் அது தொடர்பிலும் தெரிவிக்க முடியும். முறைப்பாடுகள் தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்கள் மீது கடுமையர்ன நடவடிக்கை எடுக்கப்படும். பொது மக்கள் எனக்கு வழங்கும் தகவல்கள் தொடர்பில் இரகசியம் காக்கப்படும்.”

யாழ்ப்பாணம், நவ. 1

குற்றச்செயல்கள் தொடர்பான தகவல்கள் பொலிஸாரின் ஒழுக்க மீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் நேரடியாக என்னிடம் முறையிடும் பட்சத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்களின் ஒத்துழைப்பை அதிகம் எதிர்பார்க்கின்றேன்.

இவ்வாறு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசுந்தர தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

வடமராட்சியில் இடம்பெறும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்த பொலிஸார் தீவிர அக்கறை எடுத்து செயற்பட்டுவரும் நிலையில் பொதுமக்களின் ஒத்துழைப்பை அதிகமாக எதிர்பார்க்கின்றோம். பொதுமக்கள் என்னிடம் நேரடியாகவோ தொலைபேசி மூலமாக அல்லது கடிதம் மூலமாக தகவல் வழங்கும் பட்சத்தில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். வழங்கப்படும் தகவல்கள் தொடர்பில் இரகசியம் பேணப்படும்.

பொலிஸ் உத்தியோகத்தர்களின் ஒழுக்கமீறல்கள் அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் ஏதாவது தவறுகள் ஒழுக்கவீனங்கள் நம்பிக்கையீனங்கள் இருப்பின் அது தொடர்பிலும் தெரிவிக்க முடியும். முறைப்பாடுகள் தொடர்பில் குறித்த உத்தியோகத்தர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். பொது மக்கள் எனக்கு வழங்கும் தகவல்கள் தொடர்பில் இரகசியம் காக்கப்படும். துணிந்து விடயங்களை, முறைப்பாடுகளை தெரிவிக்க முடியும்.

குற்றச்செயல்கள், போதைபொருள் கடத்தல் நடவடிக்கை தொடர்பில் பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கி செயற்பட்டால் சிறந்த சேவையை மேலும் வழங்க முடியும். எனது கைத்தொலைபேசி இலக்கமான0718591322 அல்லது காங்கேசன்துறை உதவி பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் அல்லது அல்லது பருத்தித்துறையில் இருக்கும் உதவி பொலிஸ் அலுவலகத்துக்கோ வந்து நேரடியாக தமது தகவல்கள், பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிரான முறைப்பாடுகளை தெரிவிக்கமுடியும்- என்றார்.

(ற-4,109)

## நான்கு பொலிஸாருக்கு உடனடியாக இடமாற்றம்

### மணல் திருடர்கள் நால்வரை விடுதலை செய்தமைக்காக

கொழும்பு, நவ 1

தங்கொட்டுவ, ஜங்குராவெள பிரதேசத்தில் மாஓயாவில் மணல் அகழ்ந்து கொண்டிருந்த குற்றத்துக்காகக் கைது செய்யப்பட்ட ஐவரில் நால்வர் விடுதலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணையின் பின் அந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் உடனடியாக இடமாற்றம்செய்யப்பட்டிருப்பதாகத் தங்கொட்டுவ பிரதேசத்தின் பொலிஸ் உயரதிகாரியொருவர் தெரிவித்தார்.

தங்கொட்டுவ பொலிஸ் நிலையத்தின் பதில்பொறுப்பதிகாரி, இரு சப் இன்ஸ்பெக்டர்கள், ஒரு சார்ஜண்ட் மற்றும் ஒரு கான்ஸ்டபிள் ஆகிய நால்வருமே இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும், அவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

தங்கொட்டுவ பொலிஸ் வலயத்துக்குட்பட்ட கரகடுவெல பகுதியில் பெருமளவு மணல் சட்டவிரோதமாக அகழப்படுவதாக புத்தளம் பிரதேசத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் சம்பிக்க சிறிவர்தனவுக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து அவர் அந்த இடத்தைச் சுற்றிவளைக்குமாறு தங்கொட்டுவ பொலிஸ் நிலையத்துக்கு உத்தரவிட்ட பின் பொலிஸ் குழுவொன்று அவ்விடத்தைச் சுற்றிவளைத்து ஐந்து பேரைக் கைது செய்ததுடன், மணல் அகழ்வதற்குப் பயன்படுத்தப்பட்ட இரு படகுகளையும்கைப்பற்றியது. அதன்பின் கைது செய்யப்பட்ட ஐவரில் நால்வர் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்தே 4 பொலிசார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (து)

## முஸ்லிம் திருமண சட்ட திருத்தத்துக்கு பாராட்டுத் தெரிவித்திருப்பது கவலை

### அகில இலங்கை ஜம் இய்த்துல் உலமாவுக்கு உலமாக் கட்சி கடிதம்

திருகோணமலை, நவ.1

முஸ்லிம் திருமணச் சட்டத்தை திருத்துவதற்கு புதிய உப குழுவை நியமித்துள்ளமைக்கு அகில இலங்கை ஜம் இய்த்துல்உலமாபாராட்டுத்தெரிவித்துள்ளமை கவலை தருகிறது.

இவ்வாறு உலமாக் கட்சி தெரிவித்தது.

உலமாக் கட்சித் தலைவரால் உலமா சபைத் தலைவருக்கு அனுப்பப்பட்டுள் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது-

நாடும், முஸ்லிம்களும் பல பிரச்சினைகளுக்கும் பொருளாதார கஷ்டங்களுக்கும் முகம் கொடுக்கும் நிலையில் இன்றைய தலையாய பிரச்சினை என்பது முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்றுவதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஒரு ஜனநாயக நாட்டில் ஒரு சமூகத்தின் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர வேண்டுமாயின் ஆகக் குறைந்தது அந்தச் சமூகத்தின் நாடாளுமன்ற பிரதிநிதிகள் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்திருக்க வேண்டும். அவ்வாறான எந்தக் கோரிக்கையும் இல்லாத நிலையில் ஐரோப்பிய நாடுகளின் கோரிக்கையை ஏற்று முஸ்லிம் திருமண சட்டத்தை மாற்ற உபகுழு நியமிக்கப்பட்டிருப்பது முஸ்லிம்களினதும் நாட்டினதும் இறைமைக்கு ஏற்பட்ட அவமானமாகும். சட்டத்திருத்தம் பற்றிய முயற்சியை கடுமையாக எதிர்க்க வேண்டிய உலமா சபை திருத்தத்துக்காக உப குழு நியமிக்கப்பட்டிருப்பதை வரவேற்றிருப்பதன் மூலம் நடைமுறையில் உள்ள முஸ்லிம் திருமண சட்டத்தில் இஸ்லாத்துக்கு முரணான சட்டம் உள்ளது என்று உலமா சபை ஏற்றுக்கொண்டதாகவே கருதப்படும். அவ்வாறு இஸ்லாத்துக்கு முரண்பட்ட என்னென்ன சட்டங்கள் உள்ளன என்பதை பொது மக்களுக்கு பகிரங்கமாக உலமா சபையால் அறிவிக்க முடியுமா என நாம் கேட்கிறோம்.

கடந்த மகிந்த ஆட்சியின் போது வெளிநாட்டு ஏகாதிபத்தியங்கள் எமது நாட்டுக்குள் மூக்கை நுழைப்பதற்கு இடமளிக்கப்படாத நிலையில் தற்போதைய ஆட்சியில் அவர்கள் மூக்கை நுழைத்தது மட்டுமன்றி பாரிய தலையீடுகளும் செய்வதன் விளைவே இத்தகைய சட்டத்திருத்த அறிவுறுத்தல்களாகும். ஜி.எஸ்.பி.சலுகை என்பது முஸ்லிம்களுக்கு மட்டுமானதல்ல முழு மக்களுக்குமானதாகும். அதற்காக முஸ்லிம்களின் உரிமையில் கைவைப்பது தர்மமா என்பதை உலமா சபை கேட்காமல் வரவேற்பளிப்பது வரலாற்றுத்தவறாகும்.

-என்றுள்ளது. (ற-10)

## பொதுச் சுகாதார பரிசோதர்களுக்கு பயிற்சி பட்டறை

யாழ்ப்பாணம், நவ.1

உணவகங்கள், உணவு தயாரிப்பு நிலையங்கள், உணவு கையாளும் நிலையங்களில் உணவு சுகாதாரத்தை மேம் படுத்தல் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கு மேலதிக விளக்கங்களுடன் கூடிய பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பொதுச் சுகாதார பரிசோதகர்களுக்கான இந்தப் பயிற்சிப் பட்டறை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.

உணவு கையாளும் நிலையங்கள், உணவுப் பொருள்கள் விற்பனை நிலையங்கள், உணவு தயாரிக்கும் இடங்கள் போன்றவற்றின் தரத்தை மேம்படுத்த விசேட உணவுப் பரிசோதனைத் திட்டத்தின் கீழ் பரிசோதனை மேற்கொள்வது, ஆலோசனைகள் வழங்கல் போன்றவை தொடர்பாக கொழும்பு சுகாதாரத் திணைக்களத்தின் உணவுக் கட்டுப்பாட்டு நிபுணத்துவ அலுவலர்கள் பயிற்சி வழங்கினர்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களால் வழங்கப்படும் ஆலோசனைகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றைச் செயற்படுத்தாத நிலையங்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவும் பயிற்சிகள் வழங்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## தென்மராட்சிக்கு குழாய் மூலம் குடி தண்ணீர்

தென்மராட்சி, நவ. 1

வடமராட்சி கிழக்கு தாளையடியில் அமைக்கப்படும் கடல் நீரைக் குடிதண்ணீராக்கும் திட்டத்தின் கீழ் அடுத்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் தென்மராட்சி பிரதேசத்தில் குடிதண்ணீர் பற்றாக்குறையுள்ள பிரதேசங்களுக்கு குழாய் மூலம் வழங்கப்படவுள்ளது.

தற்போது ஏ-9 வீதியோரமாக குழாய்கள் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. குடி தண்ணீர் தேவைப்படும் கிராமங்களின் விவரங்களை வழங்குமாறு குடிதண்ணீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் தென்மராட்சி பிரதேசசெயலகஅலுவலர்களைக்கோரியுள்ளனர்.

கடல் நீரைக் குடிதண்ணீர் ஆக்கி பளை, மீசாலை, நாவற்குளி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தாங்கிகள் மூலம் குடிதண்ணீர் பற்றாக் குறையாக காணப்படும் கிராமங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலகத்தில் நீர் வழங்கல் அதிகார சபையின் அலுவலர்களால் நடத்தப்பட்ட கூட்டத்தில் எழுதுமட்டுவாழ் தொடக்கம் நாவற்குளி வரையான ஏ -9 வீதி செல்லும் பகுதிகளில் உள்ள கிராம அலுவலர்கள் அழைக்கப்பட்டு குடிதண்ணீர் வழங்குவதற்கான குழாய்கள் பொருத்தும் பணிகள் நிறுவனமொன்றிடம் கையளிக்கப்பட்டுள்ளன என்றும், அவர்கள் குழாய்கள் பொருத்தும் பணிகளை மேற்கொள்ளும் போது ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை பொலிஸ் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஆரம்பம்

பளை, நவ.1



பொலிஸ்திணைக்களத்தின் 150ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பொலிஸ், பொதுமக்கள் உறவை மேம்படுத்தும் வகையில் வடக்கின் பல இடங்களிலும் பொலிஸாரால் நடமாடும் சேவைகள் நடத்தப்படுகின்றன.

பளை பொலிஸ் நிலையத்தின் நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் முகமாலையில் ஆரம்பிக்கப்பட்டது. பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மினிபுர தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கிளிநொச்சி உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொகான் ராஜபக்ச நடமாடும் சேவையை ஆரம்பித்தார்.

இந்த நடமாடும் சேவை எதிர்வரும் 30ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. முகமாலை, கிளாலி, வேம்பொடுகேணி, கச்சார்வெளி, இத்தாவில் ஆகிய இடங்களைச் சேர்ந்த மக்கள் அதில் சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் மரக் கன்றுகளும் நடப்பட் டன. (ற-9)

# புங்குடுதீவில் நெற்செய்கை பெரும் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், நவ. 1

பெரும்போகத்துக்கான நெற்செய்கை புங்குடுதீவில் இந்தமுறையும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று கமநல சேவைகள் திணைக்களம் தெரிவித்தது.

காலபோக மழையை அடுத்து குடாநாட்டில் பெரும்போகத்துக்கான நெற்செய்கையில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தீவக வலயத்துக்குட்பட்ட விவசாயிகள் இந்த காலபோக நெற்செய்கையில் ஈடுபடுவதில் ஆர்வமற்றவர்களாகக் காணப்படுகின்றனர்.

பிந்திய மழை வீழ்ச்சியும், கட்டாக்காலி கால்நடைகளின் அதிகரிப்புமே தீவக வலயத்துக்குட்பட்ட விவசாயிகள் நெற்செய்கையில் ஆர்வம் காட்டாமைக்கு முக்கிய காரணமாக உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

புங்குடுதீவில் 40 விவசாயிகள் 55 கெக்ரேயரில் பயிற்செய்கை செய்வதற்கென கமநலசேவைகள்திணைக்களத்திடம்உரத்துக்கு விண்ணப்பித்துள்ளனர். அவர்களில் குறைந்தளவான விவசாயிகளே தற்போது நெல் விதைப்பதற்குரிய வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

கமநல சேவைகள் திணைக்களத்தால் விவசாயிகளுக்கு இந்த முறை உரத்துக்குப் பதிலாக பணம் வழங்கப்படவுள்ளது. ஒரு ஏக்கருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. ஒரு விவசாயி ஆகக்குறைந்தது 5 ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபா பெற்றுக்கொள்ள முடியும். இதேநேரம் தீவக வலயத்தில் கமநல சேவைகள் திணைக்களத்தின் பிராந்திய நிலையத்தில் இருந்து அந்த ஊர் மக்களுக்கு வயல் உழுவதற்குரிய ஒரு வகை இயந்திரம் மற்றும் சட்டிக்கலப்பை ஆகியன ஒரு பரப்புக்கு 130 ரூபா வீதமும், முள்ளுக்கலப்பை ஒரு பரப்புக்கு 100 ரூபா வீதமும் வழங்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

ஏனைய பிரதேசங்களை விட தீவகத்தில் உரிமை கோரப்படாத கட்டாக்காலி கால்நடைகளின் நடமாட்டம் அதிகமாக உள்ளது. கடந்த காலங்களில் கட்டாக்காலி கால்நடைகளின் தாக்கத்தால் பயிரழிவுகள் அதிகமாகவே ஏற்பட்டன. அவற்றின் தாக்கத்தை விரைவில் கட்டுப்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ற-10)

# பஸ்ஸை தாக்கிய குற்றச்சாட்டில் கைதானோருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

பொதுச்சொத்துக்களுக்குச்சேதம் விளைவித்து சண்டித்தனம் புரிவோருக்கு இலகுவில் பிணை வழங்கமுடியாது என்று தெரிவித்த நீதிமன்று, பேருந்தின் மீது தாக்குதல் நடத்தியவர்களுக்குப் பிணை மறுத்து மறியலை நீடித்தது.

இந்த மாதம் 12 ஆம் திகதி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த காரைநகர் சாலைக்குரிய இலங்கைப்போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்தை யாழ்ப்பாணம் கச்சேரிப் பகுதியில் வழிமறித்த பட்டா வாகனத்தில் வந்த இளைஞர்கள் அதனுள் ஏறி சாரதியையும் நடத்துநரையும் அச்சுறுத்தியதுடன் நடத்துநரின் கையிலிருந்த பற்றுச்சீட்டு புத்தகம், பணம் ஆகியவற்றைப் பறித்தனர். பின்னர் பேருந்தைத் தாக்கிச் சேதப்படுத்தினர் என்று யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பாக பொலிஸார் அந்தப் பகுதியில் விசாரணை நடத்திக் கண்காணிப்புக் கமராக்களின் உதவியுடன் பருத்தித்துறையைச் சேர்ந்த 12 இளைஞர்களைக் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தினர். அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது.

தாக்குதலால் பேருந்துக்கு 2 இலட்சத்து 23 ஆயிரம் ரூபா சேதம் ஏற்பட்டுள்ளது என்றும், அடுத்த வழக்குத் தவணையின்போது உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் அறிக்கையுடன் பொதுச் சொத்துக்கள் கட்டளை சட்டத்தின் கீழ் வழக்கு தாக்கல் செய்ய உத்தேசிக்கப்படுகின்றது என்றும் தெரிவித்த பொலிஸார் சந்தேகநபர்களை பிணையில் விடுவதற்கு எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இலங்கைப்போக்குவரத்துச்சபை சார்பாக நீதிமன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் பேருந்துக்கு ஏற்பட்ட இழப்பீட்டை வழங்கினால் இணக்கமாகச் செல்வதற்குத் தாம் தயாராக உள்ளோம் என்று தெரிவித்தனர். அதனை நிராகரித்த பதில் நீதிவான் க.அரியநாயகம் பொதுச் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து சண்டித்தனம் புரிவோருக்கு இலகுவில் பிணை வழங்க முடியாது என்று தெரிவித்து அவர்களை எதிர்வரும் 11ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-4,103)



வவுனியா உக்கிளாங்குளத்தில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் முதலையொன்று பிடிக்கப்பட்டது. நெளுக்குளத்தில் இருந்தே குறித்த முதலை கிராமத்துக்குள் புகுந்துள்ளது என்று கிராம மக்கள் தெரிவித்தனர். சில மணி நேரப் போராட்டத்தின் பின்னர் முதலை பிடிக்கப்பட்டது என்றும், பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது என்றும் அவர்கள் தெரிவித்தனர். கடந்த 20ஆம் திகதியும் உக்குளாங்குளத்தில் முதலை ஒன்று பிடிக்கப்பட்டிருந்தது. (ற-4)

# காலாவதியான பொருள்கள்; வர்த்தகர்களுக்கு தண்டம்

தென்மராட்சி, நவ. 1

காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 9 வர்த்தகர்களுக்கு 81 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்று.

யாழ்.மாவட்ட பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை அலுவலர்கள் தென்மராட்சி பிரதேசத்தில் மேற்கொண்ட திடீர் பரிசோதனையில் திகதி காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த 9 வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

அவை அண்மையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டன. வழக்குகளை தனித் தனியாக விசாரணை செய்த நீதிவான் தண்டம் விதித்தார். (ற-9)

## பம்பால் தாக்கியவருக்கு மறியல்

மதுபோதையில் சைக்கிளுக்கு காற்றடிக்கும் பம்பால் அடித்துக் காயம் விளைவித்த நபரை விளக்க மறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

தீபாவளி தினத்தன்று கச்சாய்ப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நபரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் நேற்றமுன்தினம் நீதிமன்ற நீதிவானிடம் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நபரை எதிர்வரும் 11 ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ற-9)

# நெடுங்கேணிப் பொதுச் சந்தைக்கு மின் இணைப்பு வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 1

நெடுங்கேணி பொதுச் சந்தையில் நீண்ட காலமாக பொருத்தப்பட்டுள்ள சூரிய ஒளி மின்குமிழ் சீராக ஒளிராமல் உள்ளது. அதனால் திருடர்கள், யானைகளில் அட்டகாசத்துக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. உடனடியாக மின்சார இணைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு சந்தை வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள நெடுங்கேணி பொதுச்சந்தைக்கு சூரிய ஒளியில் ஒளிரும் மின்குமிழே பொருத்தப்பட்டுள்ளது. மழையுடன் கூடிய காலநிலை காணப்படின் இரவு ஏழு மணிக்கே மின்குமிழ் அணைந்து விடுகின்றது. அதைப் பயன்படுத்தி சந்தைப் பகுதிக்குள் திருடர்கள் கைவரிசையைக் காட்ட முற்படுகின்றனர். நெடுங்கேணிப் பகுதிகளில் இரவு வேளைகளில் உள்நுழையும் காட்டு யானைகள் சந்தைக்குள் வருகின்றன. வியாபாரத்துக்கு வைத்திருக்கும் மரக்கறிகளை அழிக்கின்றன. சந்தைக் கட்டடத்தொகுதிக்கும் சேதங்களை விளைவிக்கின்றன. சந்தைப் பகுதிக்குள் பொருத்தப்பட்டுள்ள சூரிய ஒளி மின்குமிழ் அணைந்து விடுவதே இதற்குப் பிரதான காரணமாக இருக்கின்றது. சந்தை அமைந்துள்ள பகுதிக்கு மின்சார இணைப்பு ஏற்படுத்தி தரும்படி நெடுங்கேணி பிரதேச சபையினரிடம் கோரிக்கை விடுத்த போதும் இன்னமும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. -என சந்தை வியாபாரிகள் கவலை தெரிவித்தனர்.

இரண்டு சூரிய ஒளி மின்குமிழ்கள் அங்கு அமைக்கப்பட்டுள்ளன. தற்போது மழை காலம் என்பதால் அவை நேரத்துடன் அணைந்து விடுகின்றன. மின் இணைப்பு வழங்குவதற்கு அனுமதி கோரப்பட்டிருக்கின்றது. விரைவில் பொருத்தப்படும்.- என்று நெடுங்கேணி பிரதேச சபை செயலாளர் தெரிவித்தார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் ஊழியர் பற்றாக்குறை

## நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.1

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்கு 144 பணியாளர்களுக்கான தேவை உள்ளபோதும், தற்போது 67 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். பணியாளர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கிராம அபிவிருத்திச் சங்கங்கள் கோரிக்கை விடுத்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எமது பிரதேசமான மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு எந்தவிதமான அதிகாரம் மிக்க உத்தியோகத்தர்களும் கிடையாது. சாதாரண பணியாளர்களிலும் வெற்றிடம் காணப்படுகின்றது. ஒரு சிலரை மட்டும் கொண்டே பெயருக்கு இயங்குகின்றது. இங்குள்ள அதிகாரிகளும் வேலைப்பளு காரணமாக திணறுகின்றனர்.

15 கிராம அலுவலர் பிரிவைக் கொண்ட 494 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட பிரதேச செயலகத்திற்கு மொத்தமாக 174 உத்தியோகத்தர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இங்கு 67 பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர். அவர்களிலும் 8 பேர் கிராம அலுவலர்களாகவும் 9 பேர் சமுர்த்தி உத்தியோகத்தர்களாகவும் உள்ளனர். 50 பேர் மட்டுமே அலுவலகப் பணியாளர்கள். அவர்களில் சாரதிகள், அலுவலக உதவியாளர்களும் உள்ளடக்கம்.

எமது பிரதேசத்தில் இன்றுவரை பிரதேச செயலாளர் இல்லை, கணக்காளர் இல்லை, நிர்வாக உத்தியோகத்தர் இல்லை, பிரதம முகாமைத்துவ உதவியாளர் இல்லை, நிதி உதவியாளர் இல்லை, இவை அனைத்துக்கும் மேலாக 27 முகாமைத்துவ உதவியாளர் இருக்கவேண்டிய இடத்தில் 4பேர் மட்டுமே பணியாற்றுகின்றனர்.

15 கிராம அலுவலர்களுக்குப் பதிலாக 8 பேரும், 33 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டிய அலுவலகத்தில் 15 பேருமே உள்ளனர். 3 ஆயிரத்து 500 குடும்பங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 800 பேர் வாழும் பிரதேசத்தின் செயலகத்துக்கு இன்றுவரை ஒரு தொலைநகல் இயந்திரம் கிடையாது. இவ்வாறான குறைகளுடன் இயங்கும் பிரதேச செயலகம் இலங்கையிலேயே பாண்டியன்குளம் பிரதேச செயலகமாக மட்டுமே இருக்க முடியும். இந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டும் – என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"பணி வெற்றிடங்கள் காணப்படுவது உண்மையே. அதற்கும் மத்தியில் நாம் எமது பணிகளை முடிந்தவரை திறம்படச் செய்து வருகின்றோம். வாரத்தில் இரு நாள்கள் பிறிதொரு செயலக கணக்காளர் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிலையிலும் 76 பணியாளர் வெற்றிடங்கள் நிலவுகின்றன"– என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் இ.ரமேஸ் தெரிவித்தார்.

"அதிக பணியாளர் வெற்றிடம் நிலவுவது உண்மையே. அது தொடர்பில் அமைச்சுக்கு எழுத்திலும் நேரடியாகவும் முறையிடப்பட்டுள்ளது"– என்று மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார். (ற-101)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் பாரிச வாத நோயாளர்கள் விடுதி

யாழ்ப்பாணம், நவ.1

பாரிச வாத நோயாளர்களுக்கான விடுதி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் இதுவே முதன்முறையாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாரிச வாத நோயாளர்களுக்கான விடுதியாகும்.

யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து அனுப்பப்படும் நோயாளர்களே அங்கு சேர்க்கப்படுவர் என்று தெரிவிக்கப்பட்டது.



வைத்தியசாலைப் பொறுப்பதிகாரியும் யாழ்.போதனா வைத்தியசாலை நரம்பியல் பிரிவு வைத்திய நிபுணரும் இணைந்து விடுதிக் கட்டடத்தை திறந்தனர்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக்காலமாக பாரிசவாத நோயால் பலர் பாதிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் போதிய இடவசதியின்மையால் குறுகிய கால சிகிச்சையின் பின்னர் நோயாளர்கள் வீடுகளுக்கு அனுப்பப்படுகின்றனர். அவர்கள் தொடர் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குச் சிரமங்களின் மத்தியில் சென்று வருகின்றனர். நோயாளர்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து சுகாதாரத் திணைக்களத்தினர் மேற்கொண்ட ஆய்வுகளின் பிரகாரம் சாவகச்சேரி வைத்தியசாலையில் கட்டடம் அமைக்க இடம் தெரிவு செய்யப்பட்டு இன்னமும் நிதி கிடைக்காததால் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

# ஐயன்கன்குளம் பகுதியில் காட்டு யானை அட்டகாசம்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ. 1

ஐயன்கன்குளம் பகுதியில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். அதனால் தாம் எந்நேரமும் அச்சத்துடன் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றும் அவர்கள் கவலை வெளியிட்டனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஐயன்கன்குளம், பழைய முறிகண்டி, புத்துவெட்டுவான், தேறாங்கண்டல் ஆகிய பகுதிகளில் காட்டுயானைகளின் தொல்லை அதிகளவில் காணப்படுகின்றன. குறித்த கிராமங்களில் வாழும் மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

நேற்று முன்தினம் இரவு ஐயன்கன்குளம் பகுதியில் மக்கள் குடியிருப்புக்களுக்குள் புகுந்த காட்டு யானைகள் அறுவடை செய்து வைத்த நெற்சூட்டை முற்றாக அழித்தன. பெருமளவான பயன்தருமரங்களையும் அழித்ததுடன், ஊர் மனைக்குள் பெரும் அட்டகாசம் செய்தன. பெரும் சத்தமிட்டு கலைத்த போதும் யானைகள் இடத்தை விட்டுச் செல்வதில்லை. இரவு வேளை முழுவதும் அச்சத்துடனேயே உள்ளோம்– என்றனர்.

ஐயன்கன்குளம் பகுதியில் யானையால் பாதிப்புக்குள்ளான விவசாயிக்கு நட்டஈடு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. குறித்த விவசாயி ஏற்கனவே யானையால் ஏற்பட்ட அழிவுக்கு நட்டஈடு பெற்றிருந்தால் இதற்குரிய நட்டஈடு கிடையாது. துணுக்காய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளில் யானைகளின் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக மின்சார வேலிகள் அமைப்பதற்கு வனவளத்திணைக்களத்திடம் கோரிக்கை முன் வைத்துள்ளோம் – என்று துணுக்காய் பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-7)

# குற்றங்களைக் கட்டுப்படுத்த ஆயுதமில்லா நடவடிக்கைகள்

## முல்லை. மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.1



கிராமப் பகுதிகளில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் வாழும் பிரதேசங்களுக்குப் பொலிஸார் நேரடியாகச் சமூகமளித்துப் பாதுகாப்பு வழங்கவுள்ளதுடன், சுகாதாரம் உள்ளிட்ட நன்மை தரும் பணிகளையும் மேற்கொள்வர்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் பொது நோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட உதவிப் பொலிஸ் பொறுப்பதிகாரி சி.கே.லால்சந்திரசிறி தலைமையில் பொலிஸ் நடமாடும் சேவை நடத்தப்பட்டது. குறித்த நடமாடும் சேவை முள்ளிவாய்க்கால் மேற்கில் ஒரு மாத காலத்துக்கு நடத்தப்படவுள்ளது.

அதில் கலந்து கொண்டு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி உரையாற்றினார்.

அவர் தெரிவித்ததாவது:

பொலிஸ் நடமாடும் சேவையின் நோக்கம் பிரதேசங்களில் நிகழும் பல்வேறுபட்ட குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதாகும். குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸ் பிரிவினர் ஆயுதமில்லாத சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வர். கிராமப் பகுதிகளில் உள்ள குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதற்காக பொதுமக்கள் வாழும் பிரதேசங்களில் பொலிஸார் நேரடியாக சமூகமளித்து பொதுமக்களுக்குப் பாதுகாப்பளிப்பர் – என்றார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக போதைப்பொருள் தடுப்புப் பிரிவு முல்லைத்தீவு மாவட்ட பொறுப்பதிகாரி வசந்த கந்தவத்தை, ரத்னநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் பொதுமக்களுக்கு பயன்தரு மரங்கள் வழங்கப்பட்டன. (ற-7)

# போதையில் சாரத்தியம்; 6 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ.1

அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் தீபாவளி தினத்தன்று மதுபோதையில் வாகனம் செலுத்திய 6 பேரும், ஏற்கனவே பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்த 11 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் குறிப்பிட்டனர். (ற-101)

# ஆபாசப்படம் வைத்திருந்த நபருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், நவ.1

கைபேசியில் ஆபாசப் படங்களை சேமித்து வைத்திருந்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது முல்லைத்தீவு நீதிமன்று.

கடந்த 27ஆம் திகதி சந்தேகத்தின் பேரில் ஒருவரைக் கைது செய்த பொலிஸார் அவரின் கைபேசியைச் சோதனையிட்டபோது ஆபாசப்படங்கள் அதில் சேமிக்கப்பட்டமை கண்டறியப்பட்டது. அதையடுத்து அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்றம் தண்டம் விதித்தது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4,7)

# பறங்கியாற்றில் மணல் அள்ள அனுமதிக்குக

## மாந்தை கிழக்கு மக்கள் கோரிக்கை

கட்டுமான தேவைகளுக்கான மணலை நாம் பெற்றுக் கொள்வதில் தொடர்ந்து இழுபறிகள் காணப்படுகின்றது. எந்தவித தடைகளும் இன்றி வெளியிடங்களுக்குத் தாராளமாக மணல் எடுத்துச் செல்லப்படுகின்றது. எங்கள் தேவைகளுக்கு மணலைப் பெற்றுத் தாருங்கள்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மாந்தை கிழக்கு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட பறங்கியாற்றில் இருந்து மணலை எமது தேவைக்கு பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால் வெளியிடங்களுக்கு மணலை தாராளமாக எடுத்துச் செல்கிறார்கள். எங்களுக்கு மணல் அனுமதிக்கு போனால் யாட்டிடம் கொள்வனவு செய்யுங்கள் என கூறுகிறார்கள். யாட்டிடம் கொள்வனவு செய்யப் பணம் இருந்தால் ஏன் நாங்கள் அவர்களிடம் போகிறோம். எங்கள் தேவைக்கு போதுமான அளவு மணலை வழங்கிய பின்னர் தான் வெளியிடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என தெரிவிக்கப்பட்டபோதும் அதை யாரும் கவனம் எடுக்கவில்லை. கட்டுமானத் தேவைகளுக்கான மணலை பெற்றுத்தர சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றனர்.

மாதம் ஒன்றுக்கு 100 கியூப் மணல் வழங்குவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. வீட்டுத் திட்ட வேலைகளுக்காக எங்களிடம் மணல் அனுமதிக்கு வருபவர்களுக்கு அனுமதி அளித்துள்ளோம். வீட்டுத் திட்டங்களுக்கான மணலை பெறுவதில் சிரமமாக உள்ளது என யாரும் எனக்கு தெரியப்படுத்தவில்லை. வெளி மாவட்டத்துக்கு மணலை எடுத்துச் செல்வது பிரதேச செயலாளருக்குத் தொடர்பில்லை – என்று மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் தெரிவித்தார். (ற-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முஸ்லிம் - தமிழ் இணக்க உறவு தீர்வுக்கு மிக முக்கியம்

இலங்கையில் அரசியல் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகள் தீவிரம்பெற்றிருக்கையில் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய சிறுபான்மை இனங்கள் இன்னமும் பிளவு பட்டே நிற்கின்றன என்கிற அதிர்ச்சிகரமான உண்மை வெளிப்பட்டுள்ளது. தமிழ் பேசும் மக்கள் ஓரணியாக இல்லை என்ற உண்மை உறுத்துகிறது - அச்சத்தை ஏற்படுத்து கிறது. இது பேரினவாதத்திற்கு வாய்ப்பாகிப் போவதுடன், உச்சபட்ச அதிகாரப் பகிர்வுக்கான சாத்தியங்களைச் சிதைத்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

போர் முடிவுக்கு வந்த பின்னர், தமிழ் - முஸ்லிம் உறவு மேம்பட்டிருப்பதான தோற்றப்பாடு காணப்பட்டது. குறிப்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில், அரசியல் தீர்வு விடயத்தில் ஒரு புரிந்துணர்வான போக்கு இருப்பதாகத் தோன்றியது. ஆனால், அந்த வெளித்தோற்றம் முழு மையான உண்மையல்ல, இரு தலைமைகளும் ஒன்றுக்கொன்று ஆதர வாக, உறுதுணையாகச் செயற்படவில்லை என்ற உண் மையை எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலை வருமான இரா. சம்பந்தன் வெளிப்படுத்தியிருக்கிறார்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் பலவந்தமாக வெளியேற் றப்பட்டதன் 26ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டிக் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் பேசும்போது அவர் மிகத் தெளிவாக இந்தச் செய்தியைச் சொல்லிச் சென்றிருக்கிறார்.

"கூட்டாட்சியைப் பெறுவதற்காக தமிழ் மக்கள் நீண்ட காலமாகப் போராடி வருகின்றனர். சாத்வீக வழியில், அரசி யல் ரீதியில், ஆயுத ரீதியில் போராடியுள்ளனர். தற்போது இராஜந்திர ரீதியில் போராடுகின்றனர். இந்தப் போராட்டங் களில் முஸ்லிம் தலைவர்களின் பங்களிப்பு குறைவாக இருந் ததைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதனை மறுத்துவிட முடி யாது. எங்கள் போராட்டத்தில் முஸ்லிம் மக்களின் ஒத்து ழைப்பை எதிர்பார்த்தோம். எதிர்பார்க்கின்றோம். ஆனால் அது கிடைக்கவில்லை. சிறுபான்மை இனங்கள் அதிகாரத் தைப் பெறுவதற்கு முஸ்லிம்களின் ஒத்துழைப்பு அவசியம்" என்று கூறிய சம்பந்தன், மேலும் ஒரு முக்கியமான விடயத் தையும் சொல்லிச் சென்றிருக்கிறார். வடக்கு கிழக்கு இணையவில்லை என்றால், கிழக்கு மாகாணம் நிரந்தர மாகவே தமிழ் - முஸ்லிம் மக்களிடம் இருந்து பறிபோய் விடும் என்பதை அவர் ஓர் எச்சரிக்கையாகவே விடுத்திருக் கிறார்.

அவரது பேச்சு இலங்கையின் அரசியல் தீர்வு மற்றும் எதிர்காலம் குறித்த அர்த்தமுள்ள பல விடயங்களை மறை முகமாகச் சுட்டிச் செல்கிறது. தமிழ் பேசும் சிறுபான்மை இனங்களின் ஒற்றுமையை வலியுறுத்துகிறது.

அதேநேரத்தில் சிங்கள, தமிழ் இனங்கள் இரண்டாலுமே துன்பங்களுக்கு உள்ளானவர்கள் முஸ்லிம்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. அந்த வரலாற்றுக் காயங்களில் இருந்து அவர்களை மீட்டெடுத்து தமிழர்களோடு சேர்ந்து பயணிக்க வைப்பதற்காகத் தமிழர்களும் தமிழ்த் தலைமை களும் இதுவரை என்ன செய்தார்கள் என்ற கேள்வியைப் புறந்தள்ளிவிட முடியாது. அதற்குப் புறம்பாக, எழுக தமிழ் போன்ற விடயங்களால் மீண்டும் அவர்களைத் தனித்து ஒதுக்கி அச்சுறுத்தவே தமிழர்களில் ஒரு பகுதியினர் முயன்றனர் என்ற உண்மையையும் மறுக்க முடியாது.

அந்த இடைவெளியைத்தான் முஸ்லிம் தலைமைகளில் சில தமது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கின்றன.

முதலில் இந்த இடைவெளி நிரப்பப்பட வேண்டும். அதற் கான கைகள் தமிழர் தரப்பிலிருந்தே முதலில் உயர வேண்டும்.

தமிழர்கள் தனித்து நின்று தமது போராட்டத்தில் வென் றால் அதன் பயனை முஸ்லிம் மக்களும் சேர்ந்து எவ்வாறு அனு பவிப்பார்களோ, அதேபோன்று முஸ்லிம் மக்கள் வெறுத்து நின்று இந்தப் போராட்டம் தோற்றால், அது தமிழர்களுக்கும் தோல்வியாகவே அமையும் என்பதை மனங்கொள்ள வேண் டும். தமிழர்களும் தம்மை அடிமை கொள்ளவே முயல்கின் றனர் என்ற அச்சத்தை முஸ்லிம்களிடம் இருந்து நீக்கவேண் டும். அதற்கான செயற்றிட்டங்கள் வகுக்கப்பட்டு முஸ்லிம் கள் அரவணைக்கப்பட வேண்டும். முரண்பாடுகளைக் களைந்து உறவுகளை வளர்க்க வேண்டும்.

அதேநேரத்தில் முஸ்லிம் தலைமைகளுக்கான சம்பந்தனின் செய்தி காலத்தால் மிக முக்கியமானது. சிங்களத் தீவிர அமைப் புக்கள் இப்போது தமிழர்களைவிடவும் முஸ்லிம்களே ஆபத் தானவர்கள் என்று கூவ ஆரம்பித்துவிட்டன என்கிற ஆபத்தை நன்கு மனங்கொண்டு, கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தை வீணடித்து விடாமல் இருக்கும் வகையில், ஒத்துழைத்துச் செயலாற்றி இரு இனங்களுமே நன்மையடையக்கூடிய வழி வகையைக் காணவேண்டும். தமது குறுகிய நலன்களைக் கைவிட்டு தூரநோக்கோடு தமது மக்களின் நலன் கருதிச் செயற்பட முஸ்லிம் தலைமைகள் முன்வரவேண்டும்.

# வாழ்க்கையே போராட்டமாகிவிட்ட தமிழர்களது நிலை




ந.லோகதயாளன்

இலங்கையின் வடக்கை மீண்டும் ஒருமுறை உலகம் ஆச்சரியக் குறியுடன் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இலங்கை ஆட்சியாளர்கள் அமைதியாக நகரு வதன் அர்த்தம் புரியாது, தமிழ் மக்கள் ஏக்கத்துடன் காத்திருக் கின்றனர். தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் போராட்டமே வாழ்க்கையாகவும், வாழ்க்கையே போராட்டமாகவும் தீர்மானிக்கின்றது ஆட்சி பீடம். கடந்த 20ம் திகதி நள்ளிரவு வரைக்கும் ஓரளவு அமைதியை எதிர்பார்த்துக் காத்திருந்த வடக்கு கிழக்கு மக்களை குழப்பி விட்டது, யாழ்ப்பாணம் பொலிசாரின் செயற்பாடு ஒன்று. காங்கேசன்துறைவீதியில், கொக்குவில் பகுதியில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகில் வீதிரோந்தில் ஈடுபட்டிருந்த பொலிஸார், யாழில் இருந்து கந்தரோடை நோக்கி மோட்டார் சைக்கிளொன்றில் பயணித்த இரு பல்கலைக் கழக மாணவர்கள்மீது அதிகாலை வேளையில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம், உறக்கத்தில் இருந்த கிராம மக்களுடன் தயக்கத்தில் இருந்த தமிழ் மக்களையும் தட்டி எழுப்பிவிட்டுள்ளது.

### துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் குறித்து வெளியான செய்தி

குறித்த தினத்தன்று கொக்குவில் பிரதேசத்தில் இரவுக் கடமையில் இருந்த பொலிசார் இரு அணிகளாக சிறு இடைவெளி தூரத்தில் பணியில் இருந்துள்ளனர். இதன் போது நகர் திசையில் நின்ற பொலிசார் யாழ் நகரில் இருந்து பயணித்த மோட்டார் சைக்கிளை வழிமறிக்க இரு மாணவர்களும் நிறுத்தாமல் சென்றனர் என்பதன் அடிப்படையில், குளப்பிட்டிச் சந்தியை அண்டிய பகுதியில் பணியில் இருந்த இரண்டாவது அணியினர் குறித்த மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளனர்.

இதன்காரணமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவரின் வலது பக்க சள்ளைப் பகுதியில் பட்ட துப்பாக்கிச் சன்னம் ஒன்று, இடது பக்க விலா பகுதியின்ஊடாகவெளியேறியுள்ளது. குறித்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான இளைஞன் செலுத்திய மோட்டார் சைக்கிள், சுமார் 100 மீற்றர் தூரம் சென்று பயணம் செய்த திசையில் தினமும் மரவள்ளிக் கிழங்கு பொரியல் விற்பனை செய்து அன்றாட வாழ்வாதாரம் நடாத்தும் பெண்மணி ஒருவரின் கடையோரம் வீழ்ந்தது. இதனை அடுத்து துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்ட பொலிஸாரே இளைஞர்கள் வீழ்ந்த இடத்திற்கு வந்து பார்வையிட்டு இளைஞர்களை வைத்தியசாலைக்கும் அனுப்பி வைத்துள்ளனர்.

இவ்வாறு வந்து வீழ்ந்த இளைஞர்கள் அந்த இடத்தில் அவலக் குரல் எழுப்பியதை அயலவர்கள் உறுதி செய்கின்றனர். சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையின் பிரகாரம், மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்த மாணவன் துப்பாக்கிச் சூட்டில் இறந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. இரண்டாவது மாணவனின் உடலில் உள்ள காயத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை. இந்த நிலையில் குண்டுபட்டு வீழ்ந்த மாணவர்கள் எழுப்பிய அவலக் குரலை அயலவர்கள் அவதானித்த போதும், சம்பவ இடத்தில் பொலிஸாரின் பிரசன்னம் இருந்தமையினால் எவருமே அவ்விடத்துக்குச் செல்ல முன்வரவில்லை.

இவற்றின் அடிப்படையில் வீழ்ந்த இடத்துக்கு பொலிஸார் வந்ததும் அவலக் குரல் எழுப்பியமையினால் இரண்டாவது இளைஞனை பொலிசார் தாக்கியே கொன்றனரா? என்கின்ற பலமான கேள்வி ஒன்றும் எழுப்பப்படுகின்றது. இவற்றுக்கும் அப்பால், இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது சுமார் 10ற்கும் மேற்பட்ட வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக அயலவர்கள் கூறுகின்றனர்.

### சம்பவத்தை மூடி மறைக்கும் பொலிஸாரின் எத்தனம் தவிடுபொடியானது

மறுநாள் காலையில் சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸாரோ, இது ஓர் விபத்து என்று கூறியே அறிக்கையிட முனைந்தவேளையிலேயே அயலவர்களின் விமர்சனங்கள் கசிந்தமையினால், முதலில் ஒப்புக்கான பணிகளே இடம்பெற்றன. இருப்பினும் பலரின் முயற்சினால் பொலிஸாரின் திட்டம் பலிக்கவில்லை.

இதன்காரணமாக இந்தப் பகுதியில் குறித்த நேரம் பணியில் இருந்தவர்களில் மேற்படி சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புபட்டதான ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தப்பட்டதோடு நவம்பர் மாதம் 4ம் திகதி வரை விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களை 26ஆம் திகதி அதாவது சம்பவம் இடம்பெற்ற ஆறாவது தினம், அழைத்து வந்த விசேட விசாரணைப் பிரிவினரிடம் தமது தரப்புப் பொலிஸ் உத்தியோகத்தர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இடத்தை 5 சந்தேக நபர்களில் ஒருவர் அடையாளம் காண்பித்தார். இவ்வாறு இனம் காட்டிய பொலிஸ் உத்தியோகத்தர், ஒரு பொலிஸ் சாரதி என தற்போது தெரிவிக்கப்படுகின்றது. அவ்வாறானால் சாரதிகளின் கையில் துப்பாக்கி வழங்கப்பட்டது ஏன் என்ற கேள்வியும் எழுந்துள்ளது. மேற்படி சம்பவத்தின்போது உயிரிழந்த மாணவர்களின் விடயத்தை மூடிமறைக்க முயன்ற பொலிஸார், மூக்கு டைபட்டு நின்றாலும், தமிழர்களின் வாழ்வு நிலை மட்டும் இன்றும் மாறவில்லை. போர்க்காலத்தில் ஆயுதம் வைத்திருப்பவர்கள் பயங்கரவாதிகள் என்ற சித்தாந்தத்தை விதைத்தவர்கள் ஆட்சியாளர்கள். ஆனால், இன்று ஆயுதம் வைத்திருப்பவர்களே அந்தச் சித்தாந்தத்தை நிரூபணம் செய்வதாக தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

ஏனெனில் கடந்த ஆட்சியில் போராடிய மக்கள் இந்த நல்லாட்சியிலும் அகிம்சை ரீதியில் பாரிய போராட்டத்தின் மூலமே தமக்கு நிகழும் அவலத்தை வெளிக்கொணர வேண்டுமாயின், இங்கே காட்சி மட்டுமே மாறியுள்ளது. ஆனால் ஆட்சி முறை மாறவில்லை என நம்புகின்றனர். இதனால் தமிழர் வாழ்வு, போராட்டமே வாழ்க்கையாகவும், வாழ்க்கையே போராட்டமாகவும் உள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரப் போட்டியில் சிக்கி பலிக்கடாவான தில்ருக்ஷி டயஸ்

சிங்கள மூலம் - மவ்பிம
தமிழில் - வீ.எஸ்.ரீ

டி.பி.விஜேதுங்க ஜனாதிபதியாகப் பதவி வகித்த வேளையில், அந்த வேளைய லஞ்சஊழல்தடுப்பு ஆணைக்குழுவின் தலைவியாகவிருந்த நெலும் கமகேயால் முன்னெடுக்கப்பட்ட புகையிரதத் திணைக்கள உயரதிகாரியொருவர் மற்றும் ஐ.தே.கட்சியின் முக்கிய புள்ளிகளுக்கு எதிரான விசாரணையை நிறுத்துமாறு ஜனாதிபதி விஜேதுங்கவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது. ஆனால் விசுவாசமான அரச அதிகாரியான நெலும் கமகே, தமது அதிருப்தியை வெளிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி விஜேதுங்கவின் அந்தப் பணிப்புரைக் கடிதத்தை புகையிரதத் திணைக்கள அந்த உயர் அதிகாரியின் கோவையில் இணைத்து விட்டிருந்தார். இதனால் ஜனாதிபதி விஜேதுங்க கடும் சீற்றத்துக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவின் தலைவி நெலும் கமகேயின் குடும்பம், சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு மிக நெருங்கியவர்கள் என்பது தெரிந்திருந்தும், அவரது திறமையை மட்டும் கருத்தில் எடுத்து, அவ்வேளைய ஜனாதிபதி பிரேமதாச, நெலும் கமகேயை அந்தப் பதவிக்கு நியமித்திருந்தார். ஆனால் பின்னர் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கவின் தலையீடுகள், வற்புறுத்தல்கள் காரணமாக, தமது கடமையைச் சரிவரச் செய்ய இயலாதிருப்பதாக உணர்ந்த நெலும் கமகேயால், தமது லஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக் குழுவின் தலை வர் பதவியைத் தொடர இயலாது போயிற்று.

1994ஆம் ஆண்டின் பொதுத்தேர்தல் வேளையில், டி.பி.விஜேதுங்கவின் குறுக்கீடுகள், அழுத்தங்கள் காரணமாகவே நெலும்கமகே தமது பணியை உரியவாறு முன்னெடுக்க இயலாது போனதாகவும், தாம் பதவிக்கு வந்தால் மீண்டும் நெலும் கமகேயை அதே பதவிக்கு நியமித்து, லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவைப் பலப்படுத்துவேன் எனவும் பொதுசன முன் னணி சார்பில் சந்திரிகா வாக்காளர்களுக்கு வாக்குறுதி வழங்கியிருந்தார். இதனால் அச்சமுற்ற ஐ.தே.கட்சி யினர், தாம் பதவிக்கு வந்தால் தாமும் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக் குழுவுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி அதனைப் பலப்படுத்துவோம் எனவும் தெரிவித்து வந்தனர்.

குறித்த 1994ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் பொது ஜன முன்னணி வெற்றியிட்டியது. அந்த அரசில் நீதி அமைச்சராகவிருந்த ஜீ.எல்.பீரிஸ், லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் சட்ட மூலமொன்றைத் தயாரித்து, அதனை சுதந்திரமான ஆணைக்குழுவொன்றாக இயங்க வைக்கும் முயற்சிகளை மேற்கொண்டார். அந்த வேளை யில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காமினி திசநாயக்காவும், ஐ.தே.கட்சியினரும், குறித்த சட்டமூலம் எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஓரம்கட்டவே கொண்டு வரப்படுகிறது என்பதைத் தெளிவாக உணர்ந்திருந்தும், பொதுமக்களைத் திருப்திப்படுத்துவதற்காக குறித்த சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதற்கு ஆதரவளிக்க நேர்ந்தது.

நாடாளுமன்றத்தில் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டதையடுத்து, நியமிக்கப்பட்ட லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நெலும் கமகே ஜனாதிபதி சந்திரிகாவால் மீண்டும் நியமிக்கப்பட்டார் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்ட நெலும் கமகே, 17ஆண்டுகள் காலமாக ஐ.தே.கட்சிப் பிரமுகர் களால் மேற்கொள்ளப்பட்ட சட்ட விரோதச் செயற் பாடுகளை ஒவ்வொன்றாக விசாரணை செய்வதில் ஆர்வம்



காட்டிச் செயற்பட்டார். இதனால் அச்சமடைந்த ஐ.தே. கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதிகள் பலரும், நெலும் கமகேக்கு எதிராக பரப்புரைகளை மேற்கொள்ள ஆரம்பித்தனர். நெலும் கமகேக்கு எதிரான பொய்ப் பரப்புரைகளில் ஏதோவகையில் நெலும் கம கேயின் கணவரையும் இணைத்துக் கொள்வதில் அந்தத் தரப்பினர் வெற்றி கண்டனர். வெளிநாட்டில் குறிப்பிட்டதொரு காலம் வசித்து விட்டு நாடுதிரும்பிய நெலும் கமகே, லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் சிலரும் தமக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தெளிவாக உணர்ந்து கொண்டார். அவர்களுக்கு எதிராக நெலும் கமகே நீதிமன்றத்தை நாடினார். லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் கேலிக்கு இடமாவதைத் தடுத்து நிறுத்த ஜனாதிபதி சந்திரிகா நடவடிக்கை மேற்கொண்டார். அவர் கேட்டுக்கொண்டதற்கமைய, நெலும் கமகே தமது பணிப்பாளர் நாயகம் பதவியைத் துறந்தார். இதனால் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழு செயலிழந்தது. குற்ற விசாரணைகளை எதிர்நோக்கி அச்சத்துடன் காலம் கழித்து வந்த ஐ.தே. கட்சிப் பிரமுகர்கள் இதனால் வெற்றிக் கோஜம் எழுப்பி தமக்குள் மகிழ்ச்சியைப் பங்கிட்டுக் கொண்டனர்.

அதுசரி, இன்று நாட்டின் அரசியலரங்கில் இதேபோன்ற நிகழ்வுகள் தான் அரங்கேறுகின்றனவா?

உண்மையில் நாட்டின் இன்றைய அரசியல் நிலையும் மேற்குறிப்பிட்ட நிலையை ஒத்ததொன்றே.

லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் தில்ருக்ஷி டயஸ், பிரதமர் ரணிலுக்கு மிக நெருக்கமானவர். இதன் காரணமாக அவரைக் குறித்த அந்தப் பதவிக்கு நியமிப்பதைத் தவிர்த்திருந்திருக்கலாம். ஆனால், ரணில், அவரை அந்தப் பதவிக்குச் பரிந்துரை செய்தார். ஜனாதிபதியும் நியமனத்தை வழங்கியிருந்தார். கடந்த ஜனாதிபதித் தேர்தல் பரப்புரையின் போது மைத்திரி தரப்பின் தேர்தல் சுலோகமாக அமைந்தது லஞ்ச ஊழல் ஒழிப்பே. மகிந்த தரப்பினரது ஊழல் மோசடி களைப் பொறுத்துக் கொள்ள இயலாத நிலையிலேயே வாக்காளர்கள் மைத்திரிபாலவுக்கு தமது ஆதரவை வழங்கினர். இதனாலேயே ஜனாதிபதித் தேர்தலின் பின் னர் மைத்திரிபாலவும் ரணிலும் லஞ்ச ஊழல் தடுப்பு ஆணைக்குழுவைச் சுதந்திரமாக இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொண்டனர். ஆனால் மைத்திரி, சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றதும், மகிந்தவின் அரசில் லஞ்ச ஊழல்களில் ஈடுபட்டதான குற்றச்சாட்டுக்கு உட்பட்டோர் மைத்திரியின் பின்னால் திரண்டதால், லஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு இடை யூறுகள் தோன்றின. தமது குற்றங்களை மூடி மறைக்கவே பலர் மைத்திரியின் பின்னால் அணி திரண்டனர். அதே வேளை மைத்திரி, மகிந்தவுடன் இணைந்து அரசைக் கவிழ்த்துவிடக் கூடுமென ரணில் ஒருபுறம் சந்தேகப்பட்டார். அந்த வகையில் மைத்திரியும் மகிந்தவும் இணையாதிருக்கச் செய்வதில் ரணில் ஆர்வம் காட்ட, மகிந்த ஆட்சிக் காலத்தில் லஞ்ச, ஊழல் குற்றச் சாட்டுக்களுக்கு உள்ளான அமைச்சர்கள் மீதான குற்றச் சாட்டுக்களை புறமொதுக்கிவைக்க மைத்திரி முயல, இவர்கள் இருவருக்குமிடையேயான அதிகாரப் போட்டியின் இடையில் சிக்கி தில்ருக்ஷி டயஸ் தடுமாற நேர்ந்தது.

எது எப்படியோ; அன்று தம்மைக் குற்றவாளிகளாக்க முயன்றநெலும் கமகேயை, ஏதோ விதத்தில் அவரது பதவியிலிருந்து அகற்றிய ஐ.தே.கட்சித் திருடர்கள் போன்று, இன்று சுதந்திரக்கட்சியின் திருடர்கள் தம்மைத் தண்டிக்க முயன்ற தில்ருக்ஷி டயசைத் தண்டித்துள்ளனர் என்பதே யதார்த்த உண்மை.

### மழை நீரைத்தேக்கி வைப்போம்; நிலத்தடி நீரைப் பாதுகாப்போம்

பருவமழை பொய்த்ததால் நாடு முழுவதும் கடுமையான வறட்சி ஏற்பட்டு நீருக்கான தட்டுப்பாடும் நிலவி வந்தது. தற்போதுதான் ஓரளவேனும் மழை பெய்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

மழை பெய்து நீருக்கான தட்டுப்பாடு நீங்கியதும் வறட்சியை நாம் மறந்து விடுவோம். மீண்டும் அடுத்த ஆண்டுதான் இதைப் பற்றி நாம் சிந்திக்கத் தொடங்குவோம். மனி தர்களான எம்மிடமுள்ள மிகப்பெரிய குறைபாடே இதுதான்.

எமது பகுதியில் மழைநீரைச் சேமித்து வைப்பதற்கான ஏற்பாடுகள் எதுவுமில்லை. இதனால் மாரியில் பெய்கின்ற மழை நீர் வீணாகக் கடலில் கலப்பதை நாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றோம். குடாநாட்டின் பல பகுதிகளில் குடிப்பதற்கு நல்லநீர் கூடக் கிடைப்பதில்லை. உவர் நீர்தான் கிடைக்கிறது. அந்தப் பகுதிகளில் மழைநீரைத்தேக்கி வைப்பதன் மூலமாக உவர் நீரின் பாதிப்பை ஓரளவாவது கட்டுப்படுத்த முடியும். உவர் நீர் காணப்படுகின்ற பிரதேசங்களை அண்டியுள்ள பகுதியிலுள்ள, மழைநீர் தேங்கிக் காணப்படும் வயல்கள் மற்றும் குளங்களை அண்மித்ததாக அமைந்துள்ள கிணறுகளில், குடிப்பதற்கு உகந்த நல்ல நீர் கிடைக்கின்றது. இதைப் பார்க்கும்போது ஆங்காங்கு மழை நீரைத் தேக்கி வைப்பதன் மூலமாக நிலத்தடி நீரை உவர்த் தன்மையிலிருந்து பாதுகாக்க முடியுமென்பது புலனாகின்றது.

ஆகவே பயனற்றுக் கிடக்கின்ற நிலங்களில் சிறிய குளங்களை அமைத்து நீரைத் தேக்கி வைப்பதற்கு நாம் இப்போதே முனைப்புடன் செயற்பட வேண்டும். இதைவிட மழைநீர் கடலை நோக்கி ஓடுவதைத் தடை செய்யும் வகையில் சிறிய அணைக்கட்டுக்களையும் அமைத்துக் கொள்வதன் மூலமும், நீரைச் சேமித்து வைக்க முடியும். குடாநாட்டின் நீர்த்தட்டுப்பாடு நிரந்தரமா கவே நீடிக்கின் றது. இதைப் போக்குவது எமது கரங் களிலேயே உள்ளது.

பா.தர்மிலன். வரணி.

### பாடசாலைகள் ஆரம்பமாகும் நேரத்தில் மாற்றம் வேண்டவே வேண்டாம்

குடாநாட்டில் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகவிருப்பதாக வட மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

தற்போது 8மணிக்கு ஆரம்பிக்கப்படும் பாடசாலைகள் இனிமேல் அரை மணிநேரம் முன்பதாகவே ஆரம்பிக்கப்படப்போகின்றன. இதில் சில சிக்கல்கள் இல்லாமலில்லை. ஏராளமான மாணவர்கள் தூர இடங்களிலிருந்து வந்து யாழ் நகரிலுள்ள பிரபல பாடசாலைகளில் கல்வி கற்கின்றனர். இவர்களில் அநேகமானவர்கள் அரச பஸ்களையே பயன்படுத்தி பாடசாலைக்கு வருகின்றனர். தற்போது இவர்கள் அதிகாலை வேளையில் வீட்டிலிருந்து புறப்பட்டு இரண்டு, மூன்று கிலோ மீற்றர் வரை வந்தே பிரதான வீதியோரங்களில் பஸ்களுக்காகக் காத்திருக்கின்றனர். ஓரளவு வசதி படைத்தவர்கள் வீட்டு வாசலில் வந்து பாடசாலை சேவைகளில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களில் ஏறிப் பாடசாலைகளைச் சென்றடைகின் றனர். ஆனால் அனைத்துமாணவர்களுக்கும் இத்தகைய வசதி கிடைப்பதில்லை. அரச பஸ்களையே நம்பியிருக்கும் மாணவர்களுக்கு இந்த அரைமணிநேரம் முந்திப் புறப்படுவதென்பது சிரமமாக அமைந்து விடப்போகின்றது.

பாடசாலைகளில் முன்பள்ளி மற்றும் ஏனைய ஆரம்ப வகுப்பில் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு காலை 7.30 மணிக்குப் பாடசாலை செல்வதென்பது கஷ்டமானதொரு விடயமாகவே மாறி விடப்போகின்றது. இந்த மாணவர்களின் பெற்றோர்களுக்கும் சிரமம் ஏற்படத்தான் போகின்றது. மேலும், சில ஆசிரியர்கள் தமது வீடுகளிலிருந்து தொலைவில் அமைந்துள்ள பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நேர மாற்றம் ஆசிரியர்களுக்கு குறிப்பாகப் பெண்களுக்கு சிரமத்தையே கொடுக்கும் என்பதில் ஐயமில்லை.

ஆகவே வடமாகாணக்கல்வி அமைச்சர் இதில் தலையிட்டு முன்னர் போன்று காலை 8 மணிக்கே பாடசாலைகளை ஆரம்பிக்கும் வகையில் ஏற்பாடுகளைச் செய்யுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

சி.நந்தினி சுழிபுரம்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமெரிக்காவின் மெக்சிக்கோ நகரில் சாவு ஊர்வலம் இடம்பெற்றது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். (ம-எ)

# 10 ஆயிரம் அரச
# கொன்று குவிக்க

## இராணுவப் புரட்சிக்கு



அங்காரா, நவ. 1

துருக்கியில் இராணுவப் புரட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஆயிரக்கணக்கான அரச உத்தியோகத்தர்களில் 10 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

துருக்கியில் கடந்த ஜூலை மாதம் இராணுவப் புரட்சி மேற்கொள்ள சதித்திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் மக்களின் எதிர்ப்புக்களால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. தேசப்பற்றுள்ள ஏராளமான இளைஞர்கள் களத்தில் இறங்கி இராணுவச் சிப்பாய்களின் நகர்வுகளை முடக்கினர். இதையடுத்து இராணுவப் புரட்சியை மேற்கொள்ளச் சதித்திட்டம் தீட்டிய குற்றச் சாட்டிலும், ஒத்துழைப்பு வழங்கிய குற்றச்சாட்டிலும் 10 ஆயிரத்து 131 பேர் பணிநீக்கம் செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு உறுதியானதையடுத்து கடந்த சனிக் கிழமை 10 ஆயிரத்துக்கு அதிகமானவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

துருக்கியின் பிரபல இஸ்லாமிய மதகுருவான பெதுல்லா கிலின் என்பவரே இராணுவப் புரட்சிக்கு மூளையாகச் செயற்பட்டார் என துருக்கி ஜனாதிபதி ஏர்டகன் குற்றஞ்சாட்டினார். பெதுல்லா கிலின் கடந்த பல வருடமாக அமெரிக்காவில் தஞ்சமாகியுள்ளார். இதனால் அவரை துருக்கியிடம் ஒப்படைக்க வேண்டும் என ஏர்டகன் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்கா உடன்படவில்லை. இதனால் துருக்கி–அமெரிக்கா உறவில் விரிசல் ஏற்பட்டது. அமெரிக்காவுக்கு எதிரான தனது அதிருப்தி நிலைப்பாட்டைக் காட்டும் வகை

யில் துருக்கி
படுத்தியது.
அதிகமான
பரப்பையும்
தனது மக்க



## வெள்ளைமாளிகையில் குத்துவிளக்கேற்றி தீபாவளிக் கொண்டாட்டம்

வொஷிங்டன், நவ. 1

இந்துக்களின் பண்டிகையான தீபாவளித் திருநாள் இந்த வருடம் வெள்ளை மாளிகையிலும் விளக்கேற்றிக் கொண்டாடப்பட்டுள்ளது. 2009 ஆம் ஆண்டில் இருந்து வெள்ளை மாளிகையில் தீபாவளி கொண்டாடப்பட்ட போதும், இம் முறை முதல் தடவையாக குத்துவிளக்கை ஏற்றி ஒபாமா தீபாவளி கொண்டாடினார். அவரது கொண்டாட்ட ஒளிப்படங்கள் சமூக வலைத்தளங்களில் விரைவாகப் பரவி வருகின்றன. இந்துக்களைக் கௌரவிக்கும் முகமாக எனது அலுவலகத்தில் கொண்டாட்டத்தை ஒழுங்கு செய்தேன். இருள் நீங்கி ஒளி பிறப்பதை ஆதாரமாக வைத்து நடத்தப்படும் பண்டிகைக்கு ஆதரவாக நானும் குத்து விளக்கேற்றினேன். எதிர்கால ஜனாதிபதியும் இவ்வாறு செய்வார் என எதிர்பார்க்கிறேன் என ஒபாமா தெரிவித்தார். (ம-எ)

## வெனிசுலா அரசியலில் திருப்பம் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி பேச்சு

கரகாஸ், நவ. 1

வெனிசுலாவில் ஆளும் கட்சியும், எதிர்கட்சியும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளன. இதனால் அந்த நாட்டின் அரசியல் நிலவரங்களில் காத்திரமான மாற்றம் ஏற்படும் என்று கருதப்படுகிறது.

வெனிசுலா கடந்த பல மாதங்களாகக் கடுமையான பொருளாதார நெருக்கடியைச் சந்தித்து வருகிறது. ஜனாதிபதி நிக்கலஸ் மடுரோவை பதவி விலக வலியுறுத்தி அங்கு எதிர்கட்சியால் பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப் பட்டன. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி இடையே புரிந்துணர்வென்பது இல்லாத நிலை இருந்தது. இந்த விவகாரத்தில் பாப்பரசர் தலையிட்டு இரு கட்சிகளும் பேச்சுவார்த்தைக்கு முன்வர வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார்.

இதனையடுத்து ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும் நேற்றுமுன்தினம் பேச்சுவார்த்தை நடத்தின. அரசியல் கைதிகளின் விடுதலை, பொருளாதார நெருக்கத்தில் உள்ள மக்களுக்கு உதவி, பொருளாதாரச் சரிவில் இருந்து மீளல், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கான அதிகாரம் போன்ற விடயங்கள் விவாதிக்கப்பட்டன. வரவேற்கத்தக்க முடிவுகள் எடுக்கப்படவில்லை. ஆயினும் பேச்சுவார்த்தை நடந்தமை இதுவரை காலமும் நிலவிவந்த அரசியல் நிலையில் திருப்பத்தை ஏற்படுத்தும் என்று சொல்லப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகளும் குறித்த சந்திப்பில் கலந்து கொண்டனர் என வெனிசுலா ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)



## ஜனாதிபதியை பதவி வில
## தென் கொரிய மக்கள் ஆ



சியோல், நவ. 1

தென்கொரிய ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனத் தெரிவித்து அந்த நாட்டின் மக்கள் பல்லாயிரக்கணக்கானோர் ஒன்றுதிரண்டு நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர். தென்கொரியா அரச இரகசியங்களை ஜனாதிபதி அம்பலப் படுத்துகிறார் என்ற குற்றச்சாட்டு நீண்ட காலமாகவே அவருக்கு எதிராக வைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை முக்கிய அரச அதிகாரிகள் 10 பேரை பதவி விலகவும் அவர் உத்தவிட்டார். இதனையடுத்து பலதரப்பிலிருந்தும் அவருக்கு எதிர்ப்புக்கள் குவிந்தன. அவை அனைத்தும் ஒன்றுதிரண்டு அவருக்கு எதிராக மிகப்பெரிய மக்கள் போராட்டமாக வெடித்துள்ளது. ஜனாதிபதிக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் 12 ஆயிரம் மக்கள் பங்கெடுத்தனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

என் மீது சுமத்தப்
தவறானவை. ந
யாரிடமும் கையளி
ஜனாதிபதி பார்க் 

## அகதிகளுக்குத் தடை; ஆஸ்திரேலியா 

அகதிகளுக்கு ஆஸ்திரேலியாவில் நேற்று முன்தினம் முதல் தடை விதிக்கப்படுவதாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை தொழிலாளர் கட்சி ஆட்சியில் இருந்தது. அப்போது 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் அங்கு அகதிகளாக தஞ்சம் அடைந்தனர். 2014 ஆம் ஆண்டு கொன்சவேடிவ் கட்சி ஆட்சி அமைத்தது. அதைத் தொடர்ந்து அங்கு அகதிகளுக்குத் தஞ்சம் அளிக்கத் தடை விதிக்கப்பட்டது. கரையோரப் பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டன. ஆஸிக்கு வர வேண்டாம் என்று ஏனைய நாடுகளில் பரப்புரைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில் அகதிகளுக்கு நேற்றுமுன்தினம் முதல் தடை விதிக்கப்படுவதாக அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்தது.




இதனால்,
பெறாத
நாடுகளுக்
சென்று
ளது. ஆஸ்
அகதிகளி
விதிக்கப்
அரசின்இ
ரிக்கவேண்
ஆர்ப்பாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ச உத்தியோகத்தர்கள் கப்பட்டனர் துருக்கியில்

## கு வித்திட்ட குற்றச்சாட்டில்



புரட்சியில் ஈடுபட முற்பட்ட இராணுவத்தினரை இளைஞர்கள் அடக்கியபோது...

க்கி அவ்வப்போது சில துலங்கல்களை வெளிப் து. இதன் வரிசையில் தற்போது 10 ஆயிரத்துக்கு னவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை பெரும் பர யும் பதற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் க்களைப் பாதுகாக்கும் நோக்கில் அமெரிக்காவில் உள்ள துருக்கி மக்கள் அனைவரையும் நாட்டைவிட்டு வெளியேற அமெரிக்கா உத்தவிட்டது.

துருக்கியின் இந்தப் படுகொலை தொடர்பாக செய்தி வெளியிட்ட பல ஊடக நிறுவனங்கள் சோதனையிடப்பட்டு 13 செய்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர். (ம-எ)

# லகக் கோரி ஆர்ப்பாட்டம்



தப்பட்ட குற்றச்சாட்டுகள் முற்றிலும் நான் எந்த ஆவணங்களையும் ளிக்க வில்லை எனத் தென்கொரிய க் மேலும் தெரிவித்தார். (ம-எ)

# விடுத்தது

ல், அங்கு தங்கியிருக்கும் குடியுரிமை த அகதிகள் தங்களது சொந்த ருக்கோ அல்லது வேறுநாடுகளுக்கோ குடியேறும் நிலை உருவாகி உள் ஆஸ்திரேலியாவின் கடல் எல்லைக்குள் களின் படகுகள் நுழையவும் தடை ப்பட்டது.

இந்தமுடிவைஎதிர்த்து, அகதிகளை ஆத ண்டும் எனத் தெரிவித்து மக்கள் நேற்று ாட்டங்களில் ஈடுபட்டனர். (ம-எ)

# டெல்லியில் 42 மடங்கு காற்று மாசு

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு டெல்லியில் கடந்த இரு நாள்களாக மக்கள் பட்டாசுகளை வெடித்து கொண்டாட்டங்களில் ஈடுபட்டதில் காற்று, வழமையைவிட 42 மடங்கு மாசடைதலை எதிர்கொண்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

காற்று மாசடைதலை எதிர்நோக்கியுள்ள நகரங்களின் பட்டியலில் டெல்லிக்கு தனியான இடமுண்டு. இந்த நிலையில் நடைபெற்று முடிந்த தீபாவளிக் கொண்டாட்டங்கள் அங்கு மேலும் காற்று மாசடைதலை ஏற்படுத்தியுள்ளன.

இதன்படி டெல்லியில் நேற்றுக் காணப்பட்ட புகை மாசு அளவு பன்னாடுகளால் அபாயகரமான அளவாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அளவு புகைமாசு பரவினால் பள்ளிகள், அலுவலகங்களுக்கு விடுமுறை விடுவதை சீனா வழக்கத்தில் வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# பேஸ்புக் பதிவால் வெடித்தது கலவரம்

டாக்கா, நவ. 1

பங்ளாதேஷில் முகநூல் பதிவொன்றினால் 15 இந்துக் கோவில்கள் நாசம் செய்யப்பட்டமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நசீர் நகரில் வாழும் இந்து மதத்தைச் சேர்ந்த நபரொருவர் உலகின் பயங்கரமான பள்ளிவாசலென்றால் அது மெக்காவாகத்தான் இருக்க முடியும் என்று தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டிருந்தார். இதனையடுத்து குறித்த நகரில் இந்துக்களுக்கு எதிராகக் கலவரம் வெடித்தது. நூற்றுக்கணக்கான கலவரக்காரர்களால் 15 இந்துக் கோவில்கள், 200 வீடுகள் நொறுக்கப்பட்டன. பொலிஸார் குவிக்கப்பட்டு கலவரம் அடக்கப்பட்டது. பங்களாதேஷில் 90 சதவீதத்தினர் இஸ்லா மியர்களாவர். (ம-எ)





# நடுங்கியது இத்தாலி நான்காவது முறையாக

ரோம், நவ. 1

இத்தாலியில் நேற்றுமுன்தினம் மீண்டும் சக்தி வாய்ந்த நில அதிர்வு இடம்பெற்றது.

குறித்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.6 என்று பதியப்பட்டுள்ளது. கடந்த 3 தசாப்த காலங்களில் இடம்பெற்ற சக்தி வாய்ந்த அதிர்வு இது என இத்தாலி அதிகாரிகள் தெரிவித்தனர். கட்டடங்கள் பல சேதமடைந்தன. 20 பேர் காயமடைந்தனர்.

உயிரிழப்புக்கள் எவையும் ஏற்படவில்லை. கடந்த 50 நாள்களில் இத்தாலி எதிர்கொண்டுள்ள நான்காவது நில அதிர்வு இதுவாகும்.

இத்தாலி விட்ட தவறுகளை இந்த அதிர்வு சுட்டிக்காட்டியுள்ளது. பலமான, உறுதியான புதிய கட்டங்களை நாம் நிர்மாணிக்க வேண்டும் என இத்தாலிப் பிரதமர் மற்றோ ரென்சி தெரிவித்தார். இத்தாலி, புராதன கட்டடங்களுக்கு பிரபல்யமானது. புராதன அடையாளங்களுடன் ஏகப்பட்ட கட்டடங்கள் அங்கு பராமரிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-எ)

# ஹிலாரிக்கு வாக்குகள் திரட்ட களத்தில் ஜெனிபர் லோபெஸ்



மின்னஞ்சல் சர்ச்சையால் ஹிலாரி கிளிங்டன் தனது செல்வாக்கை இழந்து செல்கிறார் என்று கருதப்படும் நிலையில் அவருக்கு ஆதரவு திரட்ட களமிறங்கியுள்ளார் பிரபல பாடகியும் நடிகையுமான ஜெனிபர் லோபெஸ்.

2009 ஆம் ஆண்டு தொட்க்கம் 2013 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் அமெரிக்காவின் அயலுறவுத்துறை அமைச்சராக ஹிலாரி பதவி வகித்தார். குறித்த காலத்தில் அவர் தனது தனிப்பட்ட மின்னஞ்சல்களை அரச தேவைகளுக்குப் பயன்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அமெரிக்க ஊடகமொன்றுக்கு கடந்த வருடம் வழங்கிய நேர்காணலொன்றில் தனது குற்றத்தை ஹிலாரி ஏற்றுக் கொண்டிருந்தார். இருப்பினும் தான் முறையற்ற விதத்தில் எந்த தவறும் செய்யவில்லை என்றும் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. குடியரசுக் கட்சியின் தலைமை வேட்பாளராக டொனால்ட் ட்ரம்பும், ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராக ஹிலாரி கிளிங்டனும் உள்ளனர். ஹிலாரி மீது மின்னஞ்சல் குற்றச்சாட்டை தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தார் ட்ரம்ப். கிட்டத்தட்ட 30 ஆயிரத்துக்கும் அதிகமான மின்னஞ்சல்களை ஹிலாரி அழித்துவிட்டார் என்றும் அவர் தெரிவித்திருந்தார். ட்ரம்பின் இந்த கருத்து அதிர்வலைகளைத் தோற்றுவித்திருந்த நிலையில் குறித்த விடயம் தொடர்பாக ஹிலாரி மீண்டும் விசாரிக்கப்படவுள்ளார் என அமெரிக்க புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

புலனாய்வுத்துறையின் இந்த அறிவிப்பு ஹிலாரியின் வாக்கு சேகரிப்பில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது என்று கருதப்பட்ட நிலையில் அவருக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மியாமி நகரில் மிகப்பெரும் இலவச இசை நிகழ்ச்சியை நடத்தியுள்ளார் ஜெனிபர் லோபெஸ். ஹிலாரிக்கு அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்றும் தனது நிகழ்வில் அவர் கேட்டுக் கொண்டார். (ம-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லக்கினத்தில் பிறந்தவர்களுக்கான பலன்கள்




## மீன லக்கினத்தில் பிறந்தவர்களுக்கு

செயல்வீரர், திறமைசாலி, ஆன்மிக உணர்வுமிக்கவர், உண்மையை விரும்புவர், இரக்க மனமுடையவர், ஏழைகளுக்கு உதவி செய்வதில் ஆர்வமுடையவர். பிறரது பொருள்கள் பால் விருப்பமுடையவர், மலர்கள் பால் ஆசையுடையவர், சிலருக்கு இரண்டு திருமணம் நடைபெறும் சந்தர்ப்பங்களும் ஏற்படும். பயிர் தொழிலில் செல்வமும், நிறைய வயல்களும் உடையவர். ஞானி, பெரியோர், அந்தணர் இவர்கள் பால் பக்தி, விசுவாசம் உள்ளவர். அழகர், வீரர், வாசனை பொருள்களில் பிரியர், அதிக செலவாளி, கண்,காது நோய்கள் ஏற்படும். ஆடை அணி அலங்காரப் பிரியர். அஹிம்சையில் பற்று உண்டு. சிக்கல் கள் வரும்போது சமாளிக்க தைரியமற்றவர், சாத்வீக குணம் உண்டு. லக்கினம் அசுப சம்பந்தம் பெற்றால் சிற்றின்பத்தில் இச்சை அதிகமுண்டு. காவியம், நாடகம், சங்கீதம், நடனம் இவற்றில் ஈடுபாடு உண்டு. அமனுஷ்யமான விடயங்களை ஆராய்வதில் சமர்த்தர். மானசீக தொழிலே இவருக்கு பெரும்பாலும் அமையும். யோகம், தியானம் போன்றவற்றில் சாதனையாளர். நீர்நிலை, கடல் சம்பந்தமான தொழில்கள் அமையும். ஏழையாயினும் முயன்று வசதிகளைப் பெறுவார். நண்பர்கள் மத்தியில் மறைமுகமான எதிரிகள் உண்டு. சிலேத்தும நோய்கள் ஏற்படலாம். 12, 20 ஆவது வயதில் காய்ச்சலாலும், 28 வது வயதில் இருமல் போன்ற வியாதிகளாலும் தொல்லை ஏற்படும்.

## லக்கினத்தை அறிந்து கொள்ளுங்கள்

நீங்கள் உங்களுடைய ஜாதகத்தைப் பார்த்திருக்கிறீர்களா? அதில் ல என்று குறிப்பிட்டு இருப்பதுதான் லக்கினம் என்பதாகும். இந்த லக்கினத்தை அடிப்படையாகக் கொண்டுதான் ஜாதகப் பலன்கள் கணிக்கப்படுகின்றன.

இந்த லக்கினத்தைக் கண்டறிவது எப்படி என்று பார்ப்போம். சூரியனின் நகர்வை 360 பாகைகளாகப் பகுத்து ஒவ்வொரு ராசிக்கும் 30 பாகைகள் வீதம் 12 ராசிகளுக்கும் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு பாகை என்பது 4 நிமிடங்களைக் கொண்டதாகும். 30 பாகைகள் 120 நிமிடங்களாகும். ஆக, ஒரு ராசிக்கான லக்கினம் என்பது சுமார் 2 மணி நேரம் ஆகும். ஒவ்வொரு லக்கினத்துக்கு மான நேரக் கணக்கீடு சற்றே கூடவோ குறையவோ செய்யலாம். ஒவ்வொரு லக்கினத்துக்குமான கால அளவு பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

ஒரு மாதத்தில் சூரியன் எந்த ராசியில் அமைந்திருக்கிறதோ, அந்த ராசிதான் உதய லக்கினமாக அமையும். உதாரணமாக, ஒருவர் சித்திரை மாதம் 1ஆம் திகதி காலை 6 மணிக்குப் பிறப்பதாக வைத்துக் கொள்வோம். சித்திரை மாதம் சூரியன் தன் உச்ச வீடாகிய மேடத்தில் இருப்பார். எனவே, அந்த ஜாதகரின் ஜனன லக்கினம் மேடம் ஆகும். அதே நாளில் ஒருவர் 8.30 மணிக்குப் பிறப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது மேட லக்னம் முடிந்து இடப லக்கினம் தொடங்கி இருக்கும். எனவே, அந்த ஜாதகரின் ஜனன லக்கினம் இடப லக்கினம் ஆகும்.

**நாளை** ஐப்பசி-17
புதன்கிழமை -02.11.2016
திதி: திருதியை பி.இ. 05.05
நட்சத்திரம்: அனுசம் பி.ப.05.21
ராகுகாலம்: [illegible]04-0[illegible]
சுபநேரம்: 0[illegible]34-06[illegible]

# யாரைத் தெரிவு செய்வது?

அமெரிக்க தேர்தல் களம் எதிர்பாராத திருப்பத்தை சந்தித்துள்ளது. முன்னதாக ஹிலாரி கிளிங்டன் வெற்றி பெறுவார் என்ற கருத்து நிலவி வந்த வேளையில் கடந்த சனிக்கிழமை அமெரிக்க புலனாய்வுத் துறையின் விசாரணைக்கான அழைப்பு அமெரிக்க மக்களைக் குழப்பத்தில் தள்ளியுள்ளது. கடந்த மாதம் இடம்பெற்ற 3 நேரடி விவாதங்களிலும் ஜனநாயகக் கட்சி வேட்பாளரான ஹிலாரி வெற்றி பெற்றிருந்தார். குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்ட் ட்ரம்ப் தொடர் சரிவுகளையும், பாலியல் புகார்களிலும் சிக்கித் தவித்தார். இந்த நிலையில் அதிரடியாக அமெரிக்க புலனாய்வுத்துறை ஹிலாரி மீதான விசாரணையை அறிவித்தது.

ஹிலாரி அமெரிக்க அயலுறவு அமைச்சராக இருந்த கால கட்டத்தில் அரசு தேவைகளுக்குத் தனது சொந்த இணையத் தொடர்பை பயன்படுத்தி இருந்தார் என்ற குற்றச்சாட்டு அவர் மீது சுமத்தப்பட்டது. அதாவது, அரசு இணையத் தொடர்புகளை அரசு அதிகாரிகள் ஆராய்வார்கள் என்பதுடன், அவை அரசு இரகசியங்களாகும். எனவே அவ்வாறான தொடர்புகளை ஏன் தனது சொந்த இணையத் தொடர்பில் பயன்படுத்த வேண்டும் என்பதுதான் பிரதான கேள்வியும் குற்றச்சாட்டும்.

ஏனைய நாடுகளுடன் அமெரிக்கா என்ன உறவைக் கொண்டுள்ளது என்பது ஹிலாரிக்கு மட்டுமே தெரிந்த விடயமாக அக்கால கட்டத்தில் இருந்தது. இதனால் ஹிலாரி அரசியல் குற்றம் புரிந்தவராகக் கருதப்பட்டார். ஆனால் விசாரணைகளில் அதிகாரிகள் எதனையும் கண்டுபிடிக்க இயலாத காரணத்தினால் அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு பொய்யானது என விசாரணைகள் மூடப்பட்டன.

ஆனால் ட்ரம்ப் பல பரப்புரைகளில் நீதியான விசாரணைகள் வேண்டும் என கூச்சலிட்டதன் விளைவோ என்னவோ விசாரணைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ட்ரம்ப் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் பெண்கள் விவகாரங்களும், வரி ஏய்ப்பும் ஆகும். ஆனால் ஹிலாரி மீது உள்ள குற்றச்சாட்டுகள் அவ்வாறானது அல்ல. ஒரு நாட்டின் ராஜதந்திரியாக, குறித்த பதவியைத் முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டு. இது பாரதூரமானது. அந்த மின்னஞ்சல்களில் அவர் என்ன விடயங்களைப் பகிர்ந்தார் என்பது இதுவரை வெளிப்படையாக நிரூபிக்கப்படவில்லை என்றாலும் அரச விவகாரங்களை மறைத்தமை பாரதூரமானதாகவே பார்க்கப்படுகிறது.

பலரது கேள்வியும் அந்த மின்னஞ்சலில் என்ன விடயங்களைப் பகிர்ந்தார் என்பதுதான். முன்னதாகதான் தனது சொந்த இணையத் தொடர்பில் மின்னஞ்சல்களை அனுப்பியது தவறுதான் என ஹிலாரி ஒத்துக் கொண்டிருந்த நிலையில், நேரடி விவாதத்தில் ட்ரம்ப் அந்த மின்னஞ்சல்களைக் காண்பிக்க முடியுமா என்று கேட்டார். உமது மின்னஞ்சலை பகிரங்கப் படுத்தினால் நான் எனது வரி ஏய்ப்பை பகிரங்கப் படுத்துவேன் என தெரிவித்திருந்தார். ஆனால் ஹிலாரி பதில் ஏதும் கூறவில்லை.




இந்தச் சூழ்நிலையில், விசாரணை அறிவிப்பு ஹிலாரியின் வெற்றி வாய்ப்புக்கான கணிப்பில் தாக்கத்தைச் செலுத்தியது. பன்னாட்டு ஊடகங்கள் இதைத் தலைப்புச் செய்தியாக்கியதுடன், பல்வேறு விமர்சனங்களும் இடம் பெற்றன. இந்த விசாரணை அறிவிப்பு ட்ரம்ப் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை சாதாரணமாக எண்ணத் தோன்றியுள்ளது. தேர்தலுக்கு இன்னமும் சில தினங்கள் மாத்திரமே உள்ள காலகட்டத்தில் மக்களின் மனதில் பல்வேறு குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்கத் தேர்தல் வரலாற்றில் மிக இக்கட்டான நிலையில் மக்கள் உள்ளனர். யாரைத் தெரிவு செய்வார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முதியோர் இல்லங்கள்தான் எல்லாவற்றுக்கும் தீர்வா?

த.கிருபாகரன்

இன்று சமூகத்தில் சமூகசேவையாளர்கள் என்று தம்மை அடையாளப்படுத்த முயல்பவர்கள் பலர் முகப்புத்தகத்தைச் சரியாகப் பயன்படுத்துகிறார்களா? இன்று ஒரு மனிதனின் தன்மானத்துடன் தொடர்புபட்டதாக இது அமைந்துள்ளது. மூத்தோர்களுக்குச் சேவை செய்பவர்கள் மூத்தோர்களுக்குசேவைசெய்ய நினைப்பவர்கள்அனைவரும்ஓரணியில்இணைய வேண்டும். மூத்தோர்களுக்கான சேவை என்பது எதிர்காலத்தில் மிகப்பெறுமதியான ஒன்றாகும். ஏனென்றால் சனத்தொகையில் மூத்தோரின் எண்ணிக்கை கூடி வருகிறது. எனவே மூத்தோர்களின் சேவைகளையும் அனுபவங்களையும் ஆரவாரமின்றி நாட்டின் அபிவிருத்தியில் இணைத்துவிடுவது எமது கடமைப்பட்டியலில் வழங்கப்பட்டிருப்பதையும் ஒவ்வொருவரும் உணருவது தேவையாக அமைந்துள்ளது.

வீதியில் நிர்க்கதியான தோற்றப்பாட்டில் யாசகம் செய்து வருபவர்கள் அல்லது உதவிகளின்றித்தவிப்பவர்களைக்காணும் போது சிலருக்கு அனுதாபம் வருகிறது. சிலருக்கு உதவி செய்யத் தோன்றுகின்றது. சிலருக்கு சம்பந்தப்பட்டவர்களின் குடும்பத்தின் மீது கோபம் வருகின்றது. சிலர், அதிகாரிகள் எல்லாம் ஏன் இருக்கிறார்கள் என வசைபாடுகிறார்கள். மூத்தோர்களை இத்தகைய தத்தளிக்கும் நிலையில் கண்டால் அவர்களை நிறுவனமயப்படுத்தி முதியோர் இல்லங்களில் விடவேண்டும் என்று தீர்மானம் எடுத்துச் செயற்படுவது பொருத்தப்பாடாக இருக்கவில்லை.

முதியோர் இல்லம் என்பது குடும்பத்தில் சமூகத்தில் இணைந்து வாழ முடியாதவர்கள் அல்லது சமூகப்பாதுகாப்புக் கிடைக்காது நாடி வந்தவர்கள் வாழும் இடமாகும். இங்கு வலிந்து உருவாக்கப்பட்டுள்ள மகிழ்வான சூழலைப்பேணும் தகைமை முதியோர் இல்லங்களில் வாழும் மனநிலையில் உள்ளவர்களுக்கு மட்டுமே உள்ளது. வெளியில் சங்கமாக, வருமானம் தரும் தொழிலாக யாசகம் செய்பவர்கள் உழைக்க சோம்பலாகி மாற்று சிந்தனையில் இருப்பவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட தாரங்களைக் கொண்டவர்கள் எனப் பலரும் பலரின் கண்களுக்குப் பரிதாபமாகத் தெரிகிறார்கள். இவர்களை நிறுவனமயப்படுத்தலுக்காக முனையும் போது பெரிய சவால்கள் தோன்றுவதோடு நிறுவனக்கட்டமைப்புக்களும் சிதறுண்டு விடுகின்றன. இவர்களின் தேடல்கள் வேறாக இருக்க சமூகசேவை ஆர்வலர்கள் இவர்களை முதியோர் இல்லங்களில் சேர்த்துவிட முனைவதுஅல்லதுவிமர்சிப்பது சரியானதா? என்று எண்ணத்தோன்றுகின்றது.

பல்வேறு சமூகப் பிரச்சினைகளுக்கு ஆளாகி சமூகத்திலிருந்து புறம் தள்ளப்பட்டு விரக்தியின் விளிம்பில் நிற்கும் இத்தகைய மனிதர்களைக் கையாள்வது எப்படி? சிந்தித்துக் கொண்டிருக்க நடுத்தர வயதுள்ள ஒருவரின் வருகையும் வார்த்தைகளும் என்னுள் சன்னங்களாக் உறங்கிக் கொள்கின்றன.

## பிள்ளைகளின் ஆதங்கம்

"எனது தந்தை 88 வயது ஓய்வூதியர். நாங்கள் நான்கு பிள்ளைகள் வசதியாக வாழ்கிறோம். எனது அப்பா வீட்டில் இருக்காமல் வெள்ளை வேட்டி சட்டை அணிந்து வீதிகளில் யாசகம் செய்கிறார். எங்களுக்கு வெட்கமாக இருக்கிறது. என்ன செய்யலாம்?" என்று கேள்விக்கணைகளை வலுவாக்கியவாறு கண்களை அகல விழித்துக் கொள்கின்றார். பெற்ற தந்தையைப் பார்க்க வேண்டும் என்ற துடிப்பும் தந்தையின் மீது வைத்துள்ள பாசமும் சமூகப் பொறுப்புடன் செயற்படும் தன்மையும் கண்களில் இருந்து கண்ணீராகச் சிந்தியது. இறை நாமத்தை உச்சரித்தபடி அவரின் நடத்தைகள் மருத்துவ ஆய்வுக்கு முதற்கட்டமாக உட்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தோற்றுவித்தது. "முதியோர் இல்லத்தில் விடுவதற்காக நாங்கள் வரவில்லை. நாங்கள் நிச்சயமாக எமது அப்பாவைப் பார்ப்போம். தங்களின் ஆலோசனையைப் பெறவே வந்தோம்" என்றவாறு தமது சமூகப் பொறுப்பை வெளிப்படுத்தி மீண்டும் ஒரு முறை சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டார். வைத்தியப் பரிசோதனையின் பின் அன்பாக அப்பாவைப் பார்க்க முடியும் என்ற நம்பிக்கையில் அவரின் விடை பெறுகை அமைந்தது. நிர்க்கதியான அனைவருக்கும் உதவுவதற்கு பல வழிகள் இருக்கின்றன என்பதும் புரிந்து கொள்ளப்படுகின்றது.

வெளியில் நாதியற்றுத் திரிபவர்கள் உரிய முறையில் அணுகப்பட்டுத் தீர்வுகாண வேண்டும் என்பதற்கு இந்தச் சம்பவம் சான்று பகர்கின்றது. நிறுவனமயப்படுத்தல் என்பது சகலருக்கும் பொருந்தாது. பந்தங்களைத் தொலைத்தவர்கள், உறவுகளை அறுத்தெறிந்தவர்கள், இறை பாதையில் பயணிக்க விரும்புவர்கள், வாழும்வரை மகிழ்வாக இருப்போம் என நினைப்பவர்கள் நிறுவனமயப்படுத்தப்பட்ட சூழலில் வாழலாம்.

யாசகம் செய்வதன் மூலம் வங்கிகளில் வைப்பிலிடக்கூடிய அளவுக்கு நிதிநிலமை இருக் கின்றது. இந்தப் பணம் போதாது என மீள ளிப்புச் செய்து ஏசி விடுமளவுக்கு அதிகாரமும் இருக்கின்றது. தாள் காசை அவரிடமே மாற்றி ஒரு பகுதியை யாசகம் செய்து விடுவதற்குரிய வசதியையும் யாசகக்காரர் கொண்டிருக்கின்றார். இதில் சிலர் வசூல் கணக்கை கச்சிதமாக முகாமைத்துவம் செய்து மீற்றர் வட்டி மூலம் கொடி கட்டிப்பறப்பவர்களாகவும் இருக்கின்றார்கள்.

இல்லாதவனுக்கு இருப்பவர் கொடுக்க வேண்டும் என்பது தர்மம். இதிகாசங்களில் இவை கூறப்பட்டாலும் இன்று தொழிலாகப் பரிணமித்திருப்பதுதான் கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. இன்று கடனைக்கூட காலையில் வந்து கேட்டு அன்று மாலையில் திருப்பித் தருவதாகக் கேட்[illegible] களைக்கூட க[illegible] கின்றார்கள். கொடுத்தல் கொடுத்தலாகவே அமைகின்றது. இராமாயணத்தில் கம்பர் இராவணன் போரில் தோற்று நின்றபோது "கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" எனக் காட்சியை வர்ணிக்கிறார். ஆனால் இன்று வேதனையின் உச்சமாகக் கடன் கொடுத்தார் நெஞ்சம் போல உச்சமாகவே கலங்கினான் இலங்கைவேந்தன் என்று நினைக்க வேண்டியுள்ளது.

> முன்பு வீட்டில் நடிப்பவர் யார்? பரிதாபப் படுபவர் யார் என முதியோர் பகுத்தறிந்து காட்டினார்கள். இன்று முதியோரை வாய்திறக்க விடாமையால் வீடுகளில் மற்றவர்களிடம் ஏமாந்து ஏமாளியாகி விட்டார்கள். ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக வசூலிக்க முடியாத கடன் பட்டியல் இருக்கின்றது. முதியவர் ஒருவர் என் முன் நின்று தனது அனுபவத்தைப் பகிர்ந்தது நிழலாடுகின்றது.

இப்படித்தான் வெளிவேசத்தில் மயங்கி ஏமாந்து போகின்றோம். முன்பு வீட்டில் நடிப்பவர் யார்? பரிதாபப்படுபவன் யார் என முதியோர் பகுத்தறிந்து காட்டினார்கள். இன்று முதியோரை வாய்திறக்க விடாமையால் வீடுகளில் பலர் மற்றவர்களிடம் ஏமாந்து ஏமாளியாகிவிட்டார்கள். ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக வசூலிக்க முடியாத கடன் பட்டியல் இருக்கின்றது. முதியவர் ஒருவர் என்முன் நின்று தனது அனுபவத்தைப் பகிர்ந்தது நிழலாடிக் கொள்கின்றது.

## முதியோர் இல்லங்களில் சுதந்திரம்

முதியோர் இல்லங்களில் வெளியில் சென்று வருவதற்குரிய சுதந்திரம் உண்டு. அதேவேளை அவருக்கு ஒன்று நேர்ந்து விட்டால் பொறுப்பும் கூற வேண்டும். வெளியில் விடாவிட்டால் மனித உரிமை மீறலாக இருக்கின்றது. இல்லத்தில் வாழ விருப்பம் இல்லாதவர்களைப் பராமரிப்பது சவாலானது. வீதியில் நிற்பவர் சமூகப் பாதுகாப்பின்றி நிற்பது பற்றி அறிந்து உதவுவதற்கு இல்லங்கள் முன்வரும்போதும் வேதனையான விமர்சனங்கள் வருகின்றன. சம்பந்தப்பட்டவரின் அநாகரிகமான மோசமான நடத்தைகள் பெரும்பாலானவர்களைப் பாதிக்கக்கூடாது என்பதற்காக இவை இல்லங்களால் சமூக உணர்வுடன் செய்யப்படுகின்றன. தூரநோக்கான இந்தச் செயல்கள் ஊக்கம் பெறாவிட்டால் நாளடைவில் வீதியில் நிற்பவர்களின் பட்டியல் நீண்டுதானே செல்லும். நிறுவனங்கள் மிக மோசமானவர்களுக்குத் தற்காலிக தங்குமிடங்களாகவே அமையவேண்டும்.

மனிதர்கள் நோயாலும் மன அழுத்தங்களாலும் சிலவகை அடம்பிடிக்கும் பழக்கங்களாலும் வீதிவரை வந்து ஏனையோரின் அனுதாபப் பார்வைக்குள் சிக்கிக் கொள்கின்றார்கள். இவர்களின் துயரங்களைப் போக்குகின்ற நிரந்தர செயற்பாட்டுக்கு உளவளத்துணை அனுசரணை தேவை. இல்லங்களில் மட்டும் சேர்த்துவிட்டுப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி இட்டு விடுவது அந்த இல்லத்தின் செயற்பாடுகளில் அதிர்வுகளைப் பிறப்பிக்கும். வீதியில் நிற்பவரை வீட்டில் விடுவதா? இவை வைத்தியசாலையில் விடுவதா? இல்லங்களில் விடுவதா? இதுஉதவநினைப்பவர்கள் ஆராய்ந்து ஆய்ந்து எடுக்க வேண்டியது முடிவாகும்.

இல்லங்களை முகாமை செய்வது என்பது மிகப்பெரிய சவாலாகும். வெறும் விமர்சனங்களால் பகிர்வுகளைச் செய்யாமல் பங்களிப்புடன் கைகோர்க்க முனைவது தான் ஆரோக்கியமானதாக அமையும். "மூத்தோர்களின் சிறப்பு அனுபவங்களின் இருப்பு" என்பதற்கமைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வதற்கு எமது மூத்தோர்கள் கலங்கரை விளக்குகளாக அமைந்துள்ளார்கள். விமர்சனங்கள் ஆரோக்கியமாக அமையும்போது செயற்பாடுகளும் வினைத்திறனாக அமையும். வீதியில் நிற்கும் ஒவ்வொருவரும் விதம் விதமான பிரச்சினைகளைச் சுமந்தவர்களாகவேகாணப்படுகின்றார்கள். இவற்றை அணுகுவதற்கும் தீர்வுகளைக் கண்டறிவதற்கும் தேவைப்பாடுகள் எழுந்துள்ளன என்பதும் நிதர்சனமாகின்றது.

வாழும் இறுதிநிமிடம்வரை மகிழ்வாக இருப்பதன் மூலம் நாம் நிறைவாவதுடன் பிறரையும் மகிழ்வுறச்செய்து நிறைவாக்கலாம் என்ற மூத்த பிரசை ஒருவரின் அசரீரி என்னுள் மீண்டும் எழுந்து கொள்கின்றது.

கட்டுரையாளர்:
அத்தியட்சகர் அரச முதியோர் இல்லம், கைதடி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எகிப்தில் உள்ள மம்மிகள் (Mummies) பற்றிய சில தகவல்கள்



மம்மிகள் உலகிலே ஓர் அதிசயம் நிறைந்த ஒன்றாக காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்கள் மம்மிகள் என அழைக்கப்பட காரணம் இவற்றின் உடல்களில் எதுவித சேதமுமின்றி அழுகலடையாமல் இருப்பதே காரணம் ஆகும்.

இவ்வாறான பிரதேசங்கள் எவ்வளவு ஆண்டுகள் எடுத்தாலும் உடலில் உள்ள அனைத்தும் பழுதடையாமல் காணப்படும். இதற்குரிய காரணம் என்ன என்பதை நோக்கினால் இவ்வாறான உடல்களுக்கு செய்யப்பட்ட சிகிச்சையே காரணமாகும். அந்த வகையில் இந்த இறந்த உடல்களுக்கு அளிக்கும் சிகிச்சை முறை 3 விதங்களில் காணப்படுகிறது.

01. இறந்த உடலில் இருந்து மூக்குத் துளைகள் வழியே மூளையையும் அதன் பின் இதயம், ஈரல் தவிர்ந்த பிற உறுப்புக்களையும் எடுத்து விட்டு அதன் பின் உடலை காய வைத்தலின் மூலம் உடலை நீண்ட காலம் பாதுகாக்க முடியும்.
2. உள் உறுப்புக்களை வெளியே எடுக்காமல் உடலில் தேவதாரு எனப்படும் மர எண்ணெய் நிரப்பி அதன்பின் காய வைப்பர். இவ்வாறு காயவைத்த உடல் சணல் நார், முட்செடி நார், மென்சணல் துணி மூலம் உடலை சுற்றி வைப்பதன் மூலம் நீண்ட காலம் பாதுகாக்க முடியும்.
3. இறந்த உடலில் உள்ள உறுப்புக்களை அகற்றிய பின்னர் வயிற்றுப் பகுதியிலுள்ள லினின் துணியால் பட்டைகள், மரத்தூள் என்பவற்றை நிரப்பி அதனை சோடியம் காபனேட்டில் ஊற வைப்பர். இதன் மூலம் உடலை நீண்ட காலம் பாதுகாக்க முடியும்.

மேலும் மம்மிகளின் உடலை சுத்தப் படுத்துகின்ற துணிகளை முதலில் நீரில் கழுவியும் பின்னர் குளோரோ பாமில் கழுவியும் பயன்படுத்துவர். மரப்பிசின், கோந்து, மெழுகு, தேன் போன்றவற்றை பயன்படுத்தி துணிகளை உடலில் ஒட்டுவார்கள். எகிப்தில் மரம் இல்லாததால் வட அமெரிக்கா, மேற்காசியாவில் இருந்து மரப்பிசின் எடுக்கப்படுகின்றது.

அகல்யா அருணாயோகநேசன்,
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

# கப்பல் பார்த்த காவலன்

கற்பகபுரம் நாட்டை நீதிநெறி நின்று ஆண்டு வந்தார் மன்னர் கஜேந்திரன். அவரது மந்திரி மிகச் சிறந்த மதியூகியாகவிருந்தார். அவரது ஆலோசனைகள் நாட்டுக்கும் குடிமக்களுக்கும் மிகவும் பயன்விளைவிப்பனவாக இருந்த படியால் கற்பகபுரம் மிகவும் செழிப்புடன் சிறந்து விளங்கியது. மன்னனும் குடிமக்களுக்கு மதிப்பளித்து அவர்களின் குறை நிறைகளைக் கேட்டறிந்து மந்திரியாரின் ஆலோசனை பெற்று சிறப்புடன் நாட்டை நிர்வகித்து வந்தார்.



அரண்மனை வாயில் காவலுக்கு இருந்த இரண்டு காவலர்களில் சேனன் என்பவன் கொஞ்சம் பொறாமைக்குணம் கொண்டவன். மற்றவர்கள் மீது பொறாமைப்படுவன். அடுத்தவர் களின் தனிப்பட்ட விடயங்களிலெல்லாம் மூக்கை நீட்டுவதில் அவனுக்கு மிகவும் பிரியம். சேனன் தனக்கு அருகில் கடமையிலிருந்த மற்றைய காவலனிடம் "நண்பா நாங்கள் காலையிலிருந்து மாலை வரை, மாலையிலிருந்து காலை வரையென மாறி மாறி காவல் கடமையில் கால் கடுக்க நின்று கஷ்டப்படுகிறோம். எமக்குத் தரும் சம்பளம் மிகக் குறைவாகவே உள்ளது. ஆனால் இந்த மந்திரியார் மட்டும் சும்மா மன்னருக்குப் பக்கத்தில் இருந்து கதைத்துக் கொண்டிருக்கிறாரே. அவருக்கு பட்டாடை என்ன, பஞ்சாசனம் என்ன, அழகான மாளிகை என்ன, அரசருக்கு அருகில் இருந்து இப்படிச் சும்மா கதைத்துக் கொண்டு இருப்பதற்கு எமது ஊதியத்தை விட இரண்டு மூன்று மடங்கு தொகையை பெறுகின்றாராமே? இது உண்மையில் பெரிய அநியாயம் அல்லவா? என்று குறைபட்டுக் கொண்டான். இவர்கள் பேசிக் கொண்ட இந்த விடயம் எப்படியோ மன்னரது காது வரை போய் விட்டது. இதனை பெரிதுபடுத்தாத மன்னர் காவலாளி சேனனை அழைத்தார். பணிவுடன் வந்து நின்ற காவலனைப் பார்த்து துறைமுகத்தில் கப்பல்கள் வந்திருக்கின்றனவா? எனப் பார்த்து வருமாறு சொன்னார்.

விரைந்து துறைமுகம் சென்ற காவலன் போன வேகத்தில் திரும்பி வந்து மன்னா கப்பல் வந்திருக்கு என்றான். எத்தனை கப்பல்கள் வந்து நிற்கின்றன? என மன்னர் கேட்டதற்கு தலையைச் சொறிந்து கொண்ட சேனன். இதோ பார்த்து வருகிறேன் என்றபடி ஓடிச் சென்றவன் திரும்பி வந்து, மூன்று கப்பல்கள் நிற்கின்றன என்றான். அவை எங்கிருந்து வந்திருக்கின்றன? என்று கேட்டார் மன்னர் கஜேந்திரன். தலைதெறிக்க திரும்பவும் துறைமுகம் நோக்கி ஓடிய சேனன் மூச்சிரைக்க வந்து நின்றவனாக மன்னா கப்பல்கள் பாரசீகம், யவனம், பர்மா ஆகிய நாடுகளிலிருந்து வந்துள்ளன என்றான். அவனது கோலத்தைப் பார்த்துப் பரிதாபப்பட்ட அரசர் அவனிடம் கேட்கவிருந்த நாலாவது கேள்வியைக் கேட்கவில்லை. பக்கத்தில் நின்ற மற்றைய காவலாளியிடம் "நீபோய் மந்திரியாரிடம் துறைமுகத்தில் கப்பல்கள் வந்திருக்கின்றனவா எனப் பார்த்து வரச்சொன்னதாக தெரிவித்து விட்டுவா" என்றனுப்பினார்.


சற்றுநேரத்தில் அங்கு வந்த அமைச்சரும் "மன்னா துறைமுகத்தில் மூன்று கப்பல்கள் வந்திருக்கின்றன. பர்மாவில் இருந்து வந்த கப்பலில் அரிசி மற்றும் தானியங்களும், பாரசீகக் கப்பலில் குதிரைகளும், யவனத்தின் கப்பலில் துணிகளும் வாசனைத் திரவியங்களும் வந்துள்ளன என்று முடித்தார்.

சேனனை அழைத்த மன்னர் நீ மூன்று தரம் போய் வந்தும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாத தகவல்களை ஒரே தடவையிலேயே அறிந்து வந்து தெளிவாகச் சொன்னார் அமைச்சர். அவரது புத்திசாதுரியம், திறமை, அறிவு ஆகியவற்றுக்காகத்தான் அவருக்கு உன்னை விட அதிகரித்த சம்பளம் வழங்கப்படுகிறது. நீயும் அப்படி இருந்தால் உனக்கும் பொருத்தமான பதவியும் அதற்கேற்ற ஊதியமும் கிடைக்கும். மற்றவர்களைக் குறை கூற முன் உன்னை நீ புரிந்து கொள்ள வேண்டும் என்று புத்தி கூறி அனுப்பி வைத்தார்.

க.திலகேஸ்.



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





# வரலாற்றில் இன்றைய தினம்

1604 - வில்லியம் சேக்ஷ்பியரின் 'த ரெம்பெஸ்ற்' துன்பியல் நாடகமான ஓதல்லோ முதன் முதலாக, லண்டன் வைற்ஹோல் மாளிகையில் ஆற்றுகைப் படுத்தப்பட்டது.
1179 - இரண்டாம் பிலிப் பிரான்சின் அரசராக முடி சூடினார்.
1755 - போர்த்துக்கல், லிஸ்பன் நகரம் நிலநடுக்கத்தாலும் சுனாமியினாலும் முற்றாக அழிக்கப்பட்டது. 60,000 - 90,000 வரையிலான மக்கள் உயிரிழந்தனர்.
1805 - மூன்றாவது ஒன்றிணைத்தல் போரில் ஒஸ்ரியாவை நெப்போலியன் பொனபாட் கைப்பற்றினான்.
1918 - ஒஸ்ரோ-ஹங்கேரியன் பேரரசிடமிருந்து மேற்கு உக்ரைன் சுதந்திரமடைந்தது.
1922 - ஒட்டமான் பேரரசின் கடைசி சுல்தான் ஆறாம் மெஹமட் பதவி துறந்தார்.
1948 - தெற்கு மஞ்சூரியாவுக்கு அப்பால் சீன வர்த்தகக் கப்பல் வெடித்து அமிழ்ந்ததில் 6000 பேர் உயிரிழந்தனர்.
1963 - 1963இன் தென் வியட்நாம் சதிப்புரட்சி தொடங்கியது.
1973 - இந்திய மாநிலமான மைசூருக்கு கர்நாடகா எனப் பெயர் சூட்டப்பட்டது.
1981 - ஐக்கிய இராச்சியத்திலிருந்து அன்ரிகியூவாவும், பார்புடாவும் சுதந்திரம் பெற்றன.
2000- சமாதான முயற்சியில் புதிய திருப்பம்: நோர்வே தூதுக்குழு வன்னியில் பிரபாகரனுடன் முக்கிய பேச்சு.
- தமிழர் குறித்த இலங்கை அரசின் போக்கை அமெரிக்கா பரிசீலனை செய்ய வேண்டுமென அந்த நாட்டு காங்கிரஸ் உறுப்பினர் 3 பேர் கோரிக்கை.
2004 - போரினால் அழிந்த வட கிழக்கைப் புனரமைக்க ஜப்பானிய அரசு நேரடியாக உதவிகளை வழங்க வேண்டுமென தன்னைச் சந்தித்த அகாஷியிடம் தமிழ்ச் செல்வன் கோரிக்கை.
- அரசியல் நோக்கத்துக்காக பனை அபிவிருத்திச் சபை பயன்படுத்தப்படுவது வருந்தத்தக்கதொரு விடயம் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசன் தெரிவிப்பு.
2006- குடாநாட்டில் பட்டினியும், பஞ்சமும் தோன்றும் நிலை. உடனடியாக ஏ-9 பாதையைத் திறந்துவிடுமாறு ஜனாதிபதிக்கு யாழ்.ஆயர் அவசரத் தந்தி.
- ஆயுததாரிகள் வீடு புகுந்து கண்டபடி சூடு. தாய் படுகாயம். மகன் விசாரணைக்கு. இணுவிலில் நேற்றிரவு சம்பவம்

சிறுவர் பக்கத்துக்கான ஆக்கங்கள், ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன. editor@uthayan.com என்ற மின் அஞ்சல் முகவரிக்கு அல்லது **361. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்** என்ற தபால் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பெற்றோருக்கு பயந்து காதலை விட்ட காலம் போய்...**



**இப்போது பெற்றோலுக்கு பயந்து காதலை விடுகிறார்கள் இளைஞர்கள்...**

**ஜப்பானில் குடித்து விட்டு வந்தால் அலாரம் அடிக்கும் மிஷின் கண்டுபிடிப்பு**



**குடிச்சிட்டு வந்தா ஆளை அடிக்கிற மிஷினே எங்க கிட்ட இருக்குயா.. அது பேர் பொண்டாட்டி...**

**வயித்தில ஆப்ரேசன்னு சொல்லிட்டு நெஞ்சில பண்ணியிருக்கிறீங்க டாக்டர்...**



**உன்னை யாரு கீழ இறங்கி படுக்கச் சொன்னாங்க...**

# ரஷ்யாவில் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் இசை நிகழ்ச்சி



ரஷ்ய நாட்டின் தலைநகரம் மொஸ்கோவில் அந்த நாட்டு அதிபர் மாளிகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி அந்த நாட்டில் வாழும் இந்தியர்கள் சார்பில் தீபாவளி விழா சிறப்பாகக் கொண்டாடப்பட வுள்ளது. இந்த விழாவில் எஸ். பி. பாலசுப் பிரமணியம் பங்கேற்று இன்னிசை நிகழ்ச்சி நடத்தவுள்ளார்.

பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி தொகுப்பாளர் படவா கோபி மற்றும் அவரது நண்பர் விஜயகுமார் ஆகி யோர் இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள் ளனர். மறைந்த எம்.எஸ்.சுப்புலட்சுமி அம் மையாருக்கு பின்னர், ரஷ்ய அதிபர் மாளிகையில் இசைநிகழ்ச்சி நடத்தும் இரண்டாவது இந்தியர் என்ற பெருமை எஸ்.பி.பிக்கு கிடைத் துள்ளது.

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | | | | | | 1 | 8 |
| | | | 6 | | 8 | | 4 | |
| 7 | | | | | | | | 2 |
| | | 3 | | 8 | 5 | | | |
| 5 | 2 | | 7 | | | | | 4 |
| | | 1 | | | | | 7 | |
| | 3 | | | | | | | |
| | 8 | | | 4 | 6 | | | 1 |
| | | | 8 | 5 | | 9 | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 5 | 1 | 8 | 9 | 3 | 7 | 2 | 4 |
| 4 | 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 9 | 1 |
| 3 | 7 | 9 | 2 | 4 | 1 | 8 | 5 | 6 |
| 2 | 8 | 3 | 1 | 7 | 6 | 5 | 4 | 9 |
| 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 2 | 3 | 7 |
| 5 | 9 | 7 | 3 | 2 | 4 | 6 | 1 | 8 |
| 7 | 6 | 5 | 4 | 3 | 9 | 1 | 8 | 2 |
| 9 | 1 | 2 | 5 | 8 | 7 | 4 | 6 | 3 |
| 8 | 3 | 4 | 6 | 1 | 2 | 9 | 7 | 5 |

சுடோக்கு ஒரு எண் விளை யாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களை யும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே யும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**Sk Siva radikan**

நம் நிகழ் காலத்தை ரசிப்பதைவிட வருங்காலத்தை எண்ணி பயப்படுவதிலேயே பாதி நாள்கள் கழிந்து போகின்றது...!!

"எதுக்கு தூங்கிக் கிட்டிருக்கிற உன் கணவரை அலாரத்தை எடுத்து அடிச்சே...?"
"அலாரம் அடிச்சாத்தான் அவர் எழுந்திருப்பாரு..."



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** குடும்பத்தினர் அன்பைப் பெற்று மகிழ் வீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் பெறுவர். பெண்கள் சந்தோச வாழ்வு நடத்துவர்.

**இடபம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமா னம் பன்மடங்கு உயரும். பெண்களுக்கு குடும்ப பிரச்சினையில் சுமுக தீர்வு கிடைக்கும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மிதுனம்:** உங்களின் யதார்த்த பேச்சு சிலரை சங்கடப்படுத்தலாம். தொழிலில் லாபம் சராசரி அளவில் இருக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

**கடகம்:** முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் உருவாகிற குளறுபடியை தாமதமின்றி சரி செய்வது நல் லது. லாபம் சுமாராக இருக்கும். ஆரோக்கியம் பலம் பெறும்.

**சிங்கம்:** மதிநுட்பத்துடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு திட்டமிட்டபடி நிறைவேறும். வருமானம் அதிகரிக்கும். அரசு சார்ந்த உதவி கிடைக்கும். பெண்களுக்கு குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**கன்னி:** மனதில் இனம் புரியாத குழப்பம் ஏற் படலாம். நண்பர்களின் வழியில் உதவி உண்டு. தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப் படும். லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் ஆடம்பர எண்ணத்துடன் செயற்படுவர்.

**துலாம்:** மனதில் நல்லெண்ணம் அதிகரிக் கும். நற்செயல்களில் ஈடுபட்டு புகழ் பெறுவீர் கள். தொழிலில் ஆதாயம் அதிகரிக்கும். மனை வியின் பாசம் நிறைந்த அன்பில் மகிழ்வீர்கள். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**விருச்சிகம்:** முக்கிய செயல் நிறைவேற தாமத மாகலாம். நண்பர்களிடம் கருத்து வேறுபாடு வராமல் தவிர்க்கவும். தொழில் வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாவர்.

**தனுசு:** புதிய சாதனை படைக்க ஆர்வம் கொள்வீர்கள். நண்பரின் உதவி கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிப்பர். சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும்.

**மகரம்:** இயன்ற உதவியைப் பிறருக்கு செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் உழைப் பினால் வளர்ச்சி காண்பீர்கள். பண வரவும் நன்மையும் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வி வளர்ச்சி அடைவர்.

**கும்பம்:** நண்பர்களுடன் கருத்து வேறுபாடு உருவாகும். தொழில், வியாபாரத்தில் மூல தனம் அதிகம் தேவைப்படும். லாபம் சுமாராக இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது நல்லது.

**மீனம்:** எதிர்கால நலன் குறித்து சிந்திப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிடும் இடை யூறை சரி செய்வீர்கள். ஆதாயம் திருப்தியளிக் கும். உடல்நலனில் அக்கறை கொள்வீர்கள். சகோதர வழியில் உதவி கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






மட்பாண்ட அலங்காரப் பொருள்கள் அறிமுகமாகியுள்ளன. முழுக்க முழுக்க இயற்கைப் பொருள்களாலான இவை பல்வேறு வடிவங்களில் கிடைக்கப் பெறுகின்றன. இவை 650 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 500 | 700 | 700 | 700 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 600 | 600 | – |
| பாரை | 550 | 500 | 400 | 800 | 500 | 400 | 390 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 600 | 500 | 600 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 300 | 300 | 400 |
| விளை | 650 | 400 | 300 | 600 | 400 | 400 | 300 |
| முரல் | 300 | 300 | 300 | 500 | 300 | 300 | – |
| கும்பிளா | 400 | 300 | 400 | 400 | 300 | 300 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 400 | – |
| ஓரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 350 |
| திரளி | 300 | 200 | 100 | 150 | 200 | 200 | 300 |
| நகரை | 250 | 200 | 100 | 250 | 300 | 300 | 300 |
| சூடை | 150 | 100 | 100 | 200 | 100 | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 200 | 200 | 200 |
| திருக்கை | 150 | 250 | 200 | 400 | 200 | 300 | 130 |
| மதனம் | 150 | 200 | – | 400 | 300 | 400 | – |
| கொய் | 100 | 100 | 50 | 70 | 100 | 100 | 200 |
| பாலை | 400 | 150 | 300 | 400 | 200 | 200 | – |
| வாழை | 100 | 100 | – | 400 | 300 | 300 | – |

# சொக்லேட் நட்ஸ் சாண்ட்விச்

## தேவையான பொருள்கள்

பாண்துண்டு
நியூட்ரெல்லா
வெண்ணெய்
பாதாம், முந்திரி, பிஸ்தா (பொடியாக நறுக்கியது)




## செய்முறை

பாண் துண்டில் ஒரு பக்கம் மட்டும் வெண்ணெய் தடவி வைக்கவும். மற்றொரு பக்கத்தில் நியூட்ரெல்லாவை தடவவும். அதன்மேல் பொடியாக நறுக்கிய நட்ஸ் தூவவும்.

பின்னர் ஒரு பக்கம் வெண்ணெய் மறுபக்கம் சொக்லேட் தடவி வைத்துள்ள பாணை மூடி ரோஸ்டரில் வைக்கவும்.

பாண்ரோஸ்டாகிசிவந்ததும் எடுக்கவும். சொக்லேட் நட்ஸ் சாண்ட்விச் தயார். இதனை சிறுகுழந்தைகளும் விரும்பி உண்பார்கள்.





# பீட்ரூட்டின் பயன்கள்

- பீட்ரூட்டைப் பிழிந்து சாறு எடுத்து தேனுடன் கலந்து சாப்பிட்டு வர அல்சர் நோய் குணமாகும். இதனைத் தொடர்ந்து குடித்து வந்தால் சீக்கிரமே நல்ல கலர் மாறுவதை உணரலாம். சமையல் செய்து சாப்பிடுவதுடன் பச்சையாகவும் சாப்பிடலாம்.
- பீட்ரூட் சாறுடன் வெள்ளரிச்சாறு கலந்து சாப்பிட்டு வர சிறுநீரகங்களும், பித்தப்பையும் சுத்திகரிக்கப்படும்.
- பீட்ரூட்டை நறுக்கிப் பச்சையாக எலுமிச்சைச் சாற்றில் தோய்த்து உண்டுவர குருதியில் சிவப்பணுக்கள் உற்பத்தியாகும்.
- கல்லீரல் கோளாறுகளுக்கும்,. பித்தம் அதிகமாகி அடிக்கடி பித்த வாந்தி எடுப்பவர்களுக்கும் பீட்ரூட் ஒரு சிறந்த மருந்து.

பீட்ரூட் சாறு அஜீரணத்தை நீக்கி செரிமானத்தைக் கூட்டும். கோதுமை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குச் சிறந்த உணவாகும். மலச்சிக்கல் உண்டாகாது.

தலையில் ஏற்படும் வெள்ளை நிற பொடுகுகளைக் களைய பீட்ரூட் ஜூஸை பொடுகு இருக்கும் இடங்களில் மசாஜ் செய்து இரண்டு மணிநேரம் கழித்து சீயாக்காய் பவுடர் கொண்டு தலை குளித்தால் நாளடைவில் பொடுகுகள் நீங்கும்.

புற்றுநோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் நோயாளிகள், பீட்ரூட் ஜூஸ் தினமும் 1 டம்ளர் பருகி வந்தால் புற்றுநோய் பரவுவது தடுக்கப்படும். ஆரம்ப நிலையிலுள்ள புற்றுநோயை குணமாக்கும் வல்லமை படைத்தது பீட்ரூட்.

பீட்ரூட் கீரையையும் மற்ற கீரைகள் போல் சமையல் செய்து சாப்பிட அல்சர், மஞ்சள் காமாலை போன்ற நோய்கள் குணமாகும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | 50 | 60 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 60 | 80 | 100 | 80 | 60 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 120 | 100 | 80 | 200 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 80 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 60 | 140 | 100 | 200 | 200 | 100 | 100 | 60 |
| பாகல் | 100 | 160 | 200 | 240 | 200 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 30 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 100 | 90 | 90 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 120 | 100 | 100 | 100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 40 | 40 | 40 | 30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 60 | 60 | 80 | 80 | 60 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 50 | 60 | 60 | 70 | 40 |
| கீரை | 20 | 20 | 30 | 20 | 20 | 40 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 60 | 70 | 80 | 80 | 80 | 100 | 200 | 70 |
| புடோல் | 40 | 50 | 80 | 60 | 80 | 80 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 100 | 80 | 90 | 120 | 90 | 50 |
| வெண்டி | 80 | 80 | 140 | 100 | 120 | 120 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 180 | 160 | 180 | 180 | 130 | 120 |
| லீக்ஸ் | 140 | 120 | 120 | 120 | 120 | 160 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 35 | 45 | 35–40 | 30 | 35 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 100 | 120 | 85 | 120 |
| தேசிக்காய் | 400 | 600 | 600 | 600 | 550 | 800 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 120 | 120 | 140 | 140 | 160 | 200 | 70 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | [illegible] | [illegible] | [illegible] | 40 | [illegible] | 60 | 80 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறாரின் பாதுகாப்பை உறுதி செய்வது அனைவரதும் பொறுப்பு

## யாழ். மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 1

பாடசாலைச் சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அனைவரதும் பொறுப்பாகும். வாகன சாரதிகளும் அதற்குப் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிச்செல்லும் வாகனங்களுக்கான ஸ்டிக்கர் வழங்கும் நிகழ்வு யாழ்.மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அண்மையில் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சில துன்புறுத்தல் சம்பவங்களை மையமாக வைத்து சிறுவர்கள் பாதுகாப்பாக செல்லவேண்டும், எந்த விதத்திலும் அவர்கள் துன்புறுத்தப்படக் கூடாது என்ற அடிப்படையில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் விதிமுறைகளுக்கு அமைய நாம் கடந்த வருடத்திலிருந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் தற்போது கைகூடியிருக்கின்றன.

பாடசாலைச் சிறுவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களைச் சீராக கையாள வேண்டும் என்ற அடிப்படையில் பொலிஸ் திணைக்களமும் நாமும் ஒன்றிணைந்து இந்தத் திட்டத்தை மேற்கொண்டுள்ளோம். வாகன ஓட்டுநர்களும் ஒத்துழைப்புத் தரவேண்டும்.

சமூகத்தில் ஒருசிலர் விடுகின்ற தவறுகளுக்காக நாம் எல்லோரையும் குறை கூறமுடியாது. அனைவரும் ஒன்றிணைத்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

> வீதி விபத்துக்களால் அதிகளவான உயிரிழப்புக்கள் நிகழ்கின்றன. பாடசாலைச் சேவைகளில் ஈடுபடுகின்ற வாகனங்கள் சீராக இருக்க வேண்டியது மிக முக்கியம். குறித்த வாகனங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

அண்மைக்காலமாக வீதி விபத்துக்களால் அதிகளவான உயிரிழப்புக்கள் நிகழ்கின்றன. பாடசாலைச் சேவைகளில் ஈடுபடுகின்ற வாகனங்கள் சீராக இருக்க வேண்டியது மிக முக்கியம். குறித்த வாகனங்கள் தொடர்பில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.

இந்த நடைமுறை, குறித்த வாகன சாரதிகளுக்கு ஓர் அங்கீகாரம் என்றுதான் சொல்ல வேண்டும். அனைத்தும் ஒழுங்காக இருக்குமிடத்து சாரதிகள் எந்த வித தடையுமின்றிப் பாடசாலைச் சிறுவர்களுக்கான சேவைகளைச் சிறப்பாக வழங்க முடியும்.

பொலிஸார் உங்கள் வாகனங்களைச் சோதனை செய்யும் போது கூட குறித்த ஸ்டிக்கர் ஒட்டப்பட்டிருக்கும் போது அது உங்கள் வாகனத்துக்கு ஓர் அங்கீகாரத்தை வழங்குகின்ற நிலமை காணப்படும் - என்றார்.

நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்ப்பாண பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஸ்ரெனிஸ்லாஸ் தெரிவித்ததாவது:

மாணவர்களையும், மாணவிகளையும் நீங்கள் பாடசாலைகளுக்கு ஏற்றிச்செல்லும்போது முதலில் உங்களுடைய வாகனம் சீராக இருக்கின்றதா என்பதை ஆராய வேண்டும். அவர்களின் பாதுகாப்பு முழுக்க உங்கள் கையில்தான் உள்ளது. பாடசாலை மாணவ, மாணவிகள் வீட்டிலிருந்து பாடசாலை நோக்கி செல்வதிலிருந்து மீண்டும் பாடசாலையிலிருந்து வீடு திரும்பும் வரை அவர்களது பாதுகாப்புக்குப் பொறுப்பாளிகள் நீங்களே. அவர்கள் உங்களை நம்பி பிள்ளைகளை அனுப்புகின்றனர். அவர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்க வேண்டியது உங்கள் அனைவரதும் கடமையாகும்.

மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற அனைத்து வாகனங்களிலும் குறித்த ஸ்டிக்கர் இருப்பது கட்டாயம். குறித்த ஸ்டிக்கர் இல்லாத பட்சத்தில் அது குற்றமாகக் கருதக்கூடிய நிலைமையும் உண்டு -என்றார்.

(ற-4,8)



சங்கானை பழைய தபாற் கந்தோர் வீதியில் உள்ள வீடொன்றில் சிறிய வேப்பமரத்திலிருந்து வேப்பம்பால் வடிந்தபடி உள்ளது. அதிகமான மக்கள் இதனைப் பார்வையிட்டு வருவதோடு போத்தல்களில் சேகரித்தும் செல்கின்றனர். (ற-29)

## விபத்து மற்றும் தாக்குதல்களில் பெண்கள் உட்பட 10 பேர் காயம்

தென்மராட்சி, நவ.1

தீபாவளி தினத்தன்று நடந்த விபத்து மற்றும் தாக்குதல் சம்பவங்களில் காயமடைந்த 3 பெண்கள் உட்பட பத்துப் பேர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

வீதி விபத்துக்களில் சிக்கி இரண்டு பெண்கள் உட்பட 5 பேரும், இரவு வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் பெண் உட்பட ஐவரும் காயமடைந்தனர்.

கனகன்புளியடிச் சந்தியில் இரு வீதிகளில் வேகமாக வந்த ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் மோதிக் கொண்டதில் ஓட்டோ புரண்டு அதில் பயணித்த 26 வயது பெண்ணும், சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையிலிருந்து ஏ வீதிக்கு பிரவேசித்த சைக்கிளை ஏ - 9 வீதியில் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் 18 வயது பெண்ணும் 2 ஆண்களும், சாவகச்சேரி புகையிரத நிலைய வீதியில் சைக்கிளில் சென்ற இருவரை மோட்டார் சைக்கிள் மோதியதில் சைக்கிளில் ஆலயத்துக்குச் சென்ற 77 வயதுப் பெண்ணும் காயமடைந்தனர்.

இரவு தாக்குதலுக்கு இலக்கான நிலையில் 20 வயதுப் பெண்ணும், வெவ்வேறு இடங்களில் தாக்குதல் சம்பவங்களில் நால்வரும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் சிலரைக் கைது செய்து, கடந்த சனிக்கிழமை இரவு வைத்தியசாலையில் பரிசோதனைகளை மேற்கொண்டபின்னர் அழைத்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## கதிர்காமம் விடுதியிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

### கொலையாளியும் தற்கொலை

கதிர்காமத்திலுள்ள யாத்திரிகர்கள் விடுதியொன்றிலிருந்து பெண்ணொருவரின் சடலம் மீட்கப்பட்டிருப்பதாகக் கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 28ஆம் திகதி உயிரிழந்திருப்பதாகக் கணிக்கப்படும் இந்தப் பெண்ணின் கழுத்திலும் உடலின் வேறு பாகங்களிலும் வெட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும், இந்தக் கொலையைச் செய்தவர் எனச் சந்தேகிக்கப்படும் நபர் அன்றைய தினமே கதிர்காம நகருக்கு அண்மித்த பகுதியொன்றில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

கதிர்காமத்தைச் சேர்ந்த டபிள்யூ.எம்.மங்களிக்கா எனும் 44 வயதான இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு கொலை செய்யப்பட்டிருப்பதாகவும், தற்கொலை செய்து கொண்டவர் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதான டீ.ஜீ.நிஷாந்த எனும் நான்கு பிள்ளைகளின் தந்தையெனவும் கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொதுமக்களைச் சந்திக்கும் தினத்தில் திணைக்களங்களில் கலந்துரையாடல்

## அதனால் பெரும் அலைச்சல் எனப் பாதிக்கப்பட்டோர் விசனம்

யாழ்ப்பாணம், நவ. 1

மாதத்தின் ஒவ்வொரு புதன்கிழமையும் அரச திணைக்கள அதிகாரிகளைப் பொதுமக்கள் சந்திக்கும் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டு அது பற்றிய அறிவித்தல்கள் அலுவலகங்களில் காணப்படுகின்றன. அன்று பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருக்க, அதிகாரிகள் அலுவலர்களுக்கான கூட்டங்களை, கலந்துரையாடல்களை அதே தினத்தில் நடத்துகின்றனர். அதனால் நாம் பாதிக்கப்படுகின்றோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ் சாட்டினர்.

இதுகுறித்துத் தெரிவிக்கப்பட்டதாவது:

அலுவலகத்தின் பொறுப்பதிகாரியைச் சந்திக்கவரும் பொதுமக்கள் நீண்ட நேரம் காத்திருந்து மாலை 4 மணிக்குப் பின்னர் அதிகாரிகளைச் சந்திக்கச் சென்றால் சம்பந்தப்பட்ட விடய அலுவலர் வீடு சென்று விடுவார். பல மணிநேரம் காத்திருந்தும் தமது கருமம் நிறைவேறாத நிலையில் ஏமாற்றத்துடன் திரும்பும் அவல நிலையை வடமாகாண அலுவலகங்களில் காண முடிகின்றது.

வடக்கு மாகாணத்தில் உள்ள மாகாண மாவட்ட பிரதேச அலுவலகங்களில் இவ்வாறான ஏமாற்றங்களைப் பொதுமக்கள் சந்தித்து வருகின்றனர்.

நடுவண் அரசும், மாகாண அரசும் பொதுமக்கள் தமது தேவைகளுக்குப் புதன்கிழமைகளில் அரச அதிகாரிகளைச் சந்திக்க முடியும் என்று அறிவித்துள்ளன. ஆனால் அன்றைய தினமே அலுவலகங்களில் அலுவலர்களுக்கான மாதாந்தக் கூட்டங்களும், கலந்துரையாடல்களும், நிகழ்வுகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு பொதுமகனும் தனது தேவைக்காக அலுவலகம் செல்லும் வேளையில் அங்குள்ள பொறுப்பதிகாரி அலுவலர்களுக்கு கூட்டங்களையும் கலந்துரையாடல்களையும் நடத்துவார். அங்கு காணப்படும் அடுத்த நிலையில் உள்ள அதிகாரியிடம் கையொப்பம் பெறச் சென்றால் கையொப்பம் பெற உயர் அதிகாரி வரவேண்டும் என்று கூறுகிறார்.

கூட்டம் அல்லது கலந்துரையாடல் முடியும்வரை காத்திருந்து, குறித்த அதிகாரி வந்த பின்னர் அவரிடம் சென்று கையொப்பம் பெறச் சென்றால் விடய அலுவலர் விடுமுறையில் நிற்பார். அல்லது வீட்டுக்குச் சென்றுள்ளார் எனக் கூறப்படுகிறது. நீண்டநேரம் காத்திருக்கும் பொதுமக்கள் தமது தேவையை நிறைவேற்ற முடியாத நிலையில் வீடு திரும்பி அடுத்த வாரம் வரை காத்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிலவேளைக் கூட்டத்தில் அல்லது கலந்துரையாடலில் காரசாரமான விவாதம் இடம்பெற்று அதன் தாக்கத்தையும் பொதுமக்களிடம் காட்டப்படும் அவலநிலை காணப்படுகிறது. ஏனைய தினங்களில் பிரதேச அலுவலகங்களுக்குச் சென்றால் உயர் அதிகாரி மாவட்ட மாகாண கூட்டங்களுக்குச் சென்றிருக்கிறார். அல்லது வெளிக்கள வேலைகளுக்குச் சென்றுள்ளார். அல்லது நிகழ்வுகளுக்குச் சென்றுள்ளார். புதன்கிழமை வந்து சந்திக்கலாம் என அங்கு கடமையாற்றுபவர்களால் கூறப்படுகிறது. பொதுமக்கள் தினம் என அறிவித்திருப்பது பொதுமக்களை ஏமாற்றும் வேலையா?- என விசனத்துடன் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண

# மரநடுகை மாதம்

## கார்த்திகை 1-30, 2016



சொந்த மண்
சொந்த மரங்கள்

உள்ளூர்
**மரங்கள்**
உயிர்ச் சூழலின்
**உயிர்நாடி**

## ஆளுக்கொரு மரம் நடுவோம்
## நாளுக்கொரு வரம் பெறுவோம்

விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,
உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு
வடக்கு மாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டியுள்ளார். இந்த அரசின் நடவடிக்கைகளால் நாட்டின் தேசிய பாதுகாப்பு பெரும் அச்சுறுத்தலுக்கு முகம்கொடுத்துள்ளது என்று தெரிவித்துள்ள மகிந்த, இதனால் தென்பகுதியிலிருந்து, யாழ்ப்பாணத்துக்குச் சுதந்திரமாகச் செல்வதற்கு முடியாத நிலமை விரைவில் ஏற்படும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார். அம்பாந்தோட்டை மாவட்டத்தின் சூரியவெவ பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அரசின்மீதுஇந்தக்குற்றச்சாட்டுக்களை மகிந்த சுமத்தியுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின்தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயத்தில் இந்த அரசு அக்கறையின்றி இருப்பதால், மிகவும் ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள பொலிஸ் நிலையங்களில் கடமையாற்றும் தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்களை சேவையிலிருந்து உடனடியாக விலகிக்கொள்ளுமாறு வலியுறுத்திக் கடிதமொன்று அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

'பிரபாகரன் படை' என்றபெயரில்இந்த எச்சரிக்கைக் கடிதம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலமைகள் ஏற்படும் என்பதை முன் கூட்டியே நாம் கூறியிருந்தோம்.

ஆனால், இந்த அரசு அவற்றைப் பொருட்படுத்தாமல், வடக்கில் நிலைகொண்டுள்ள இராணுவத்தைக்குறைத்தது. பொலிஸாரைப் பலப்படுத்துமாறு விடுத்த கோரிக்கையைநடைமுறைப் படுத்தவில்லை. இவற்றின் விளைவே இவை.

எமது ஆட்சியின் போது வடக்கில் ஏராளமானதமிழ் இளைஞர், யுவதிகளை பொலிஸ்சேவைக்கு இணைத்துக்கொண்டோம். ஆனால், இன்று அவர்கள் அனைவரையும் பொலிஸ் சேவையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கடிதம் அனுப்பப்பட்டிருக்கின்றது.

இதன் பின்னணி குறித்து ஆராயாமல் இந்தக் கடிதத்தை வெளியில் கொண்டுவந்தது யார் என்பதை விசாரணை செய்யும் ஒரு நிலமையே இன்று ஏற்பட்டிருக்கின்றது.


தவறொன்றுஇழைத்தால் தவறைச்செய்தவர் யார் என்பதையே கண்டுபிடிக்க வேண்டும். அதனைவிடுத்து அந்தத்தவறைவெளியில்கொண்டு வந்தவரை விசாரணைக்கு உட்படுத்தக்கூடாது. ஆனால், இன்றைய அரசு அதனையே செய்து வருகின்றது. தேசிய பாதுகாப்பை நாம் உறுதிப் படுத்திக்கொடுத்தோம். அம்பாந்தோட்டையிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சுதந்திரமாகச் சென்று வருவதற்கான நிலமையை நீங்கள் தான் ஏற்படுத்திக் கொடுத்தீர்கள் என்று இங்கு ஒருவர் கூறுகின்றார். ஆனால், யாழ்ப்பாணத்துக்கு எத்தனை நாள்களுக்குச் சுதந்திரமாகச் சென்று வரக்கூடிய நிலமை இருக்கும் என்பதை உறுதியாகக் கூற முடியாதுள்ளது.

இது ஒரு பெரிய பிரச்சினை. நாட்டைப் பிளவுபடுத்த ஒரு போதும் இடமளிக்க முடியாது. இன்று புதிய அரசியல் யாப்பின் ஊடாக நாட்டைப் பிளவுபடுத் துவதற்கான சூழ்ச்சிகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு இடமளிக்க முடியாது. அரசின் இந்தச் சூழ்ச்சிகள் தொடர்பில் மக்கள் தெளிவு பெறவேண்டும் என நான் நம்புகின்றேன். இந்த அரசு மேற் கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்ந்தால் நாட்டின் தேசிய பாதுகாப்பு பெரும் அச்சுறுத்த லுக்கு உள்ளாகும் என்பதை இந்த இடத்தில் கூறியே ஆக வேண்டும். அதனால் இந்த அரசு தேசிய பாதுகாப்பு விடயத் தில் இதனைவிட மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்பதைநாம் இந்த அரசிடம் கேட்டுக் கொள்கின்றோம் – என்றார். (த)

## மரண அறிவித்தல்

### சின்னப்பு பத்மநாதன்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்-யா/ உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி)



துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கூவில் புலோலி தென்மேற்கு புலோலியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு பத்மநாதன் நேற்று (31.10.2016) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பு-தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ் சென்ற முத்து மற்றும் செல்லம் தம்பதிகளின் அன்பு மருமகனும் சந்திராதேவியின் பாசமிகு கணவரும் இரட்ணேஸ்வரியின் அன்புச் சகோதரனும் பத்மகாந்தன் (ஆசிரியர்- யா/ குளமங்கால் றோ.க. வித்தியாலயம்-மல்லாகம்), பத்மனா, சந்தனா (ஆசிரியை- யா/ வண்ணைநாவலர் மகா வித்தியாலயம்), பத்மினி (ஆசிரியை- யா/தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை), சாலினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நர்மதா, இரட்ணராஜா, ஸ்ரீ ஜெகன் (வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்-யாழ்ப்பாணம்), ஜெயப்பிரகாஷ் (தொழிநுட்ப உத்தியோகத்தர் கடற்றொழில் அமைச்சு வவுனியா கச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனும் காலஞ்சென்ற மனோகரன் மற்றும் செல்வரட்ணம், காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் சிவதேவி, மகேந்திரம், நவரட்ணராஜா, சுவேந்திராதேவி, மதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆரூரன், தர்சனா, மிதுசன், வேதகி, சுவேதா, கவிநயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 3.00 மணியளவில் பூதவுடல் மந்திகை கரம்பன் இந்து மயானத்துக்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கூவில்,
புலோலி தென்மேற்கு, புலோலி.


(ஜே.5781)
(16.17.19)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### குருநாதர் பொன்னையா சிவகுருநாதன்

(நாராயணதாசன்)



தும்பளை, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும், பொன்னாலையை நிரந்தர வசிப்பிடமாகவும் 172, கோயில் வீதி, நல்லூரை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கு.பொ. சிவகுருநாதன் நேற்று (31.10.2016) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற வயிரமுத்து - தங்கம் தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற றோகினி அம்மாவின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற கு.பொ. குமாரசாமியின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கதிரேசம்பிள்ளை (சிங்கப்பூர்), நடராசா (சிங்கப்பூர்) காலஞ்சென்றவர்களான தியாகராசா (சிங்கப்பூர்), தங்கச்சிஅம்மா (பொன்னாலை), குலசேகரம் பிள்ளை (ஆஸ்திரேலியா), உருத்திரன் (சங்கீத பூஷணம் - ஆசிரியர் தொல்புரம்) ஆகியோரின் மைத்துனரும் கு.பொ.சி. வரதராஜா (ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி - யாழ்ப்பாணம்), பாக்கியலட்சுமி (அமெரிக்கா), இரங்கராஜா (இளைப்பாறிய பிரதமசெயலாளர், வடக்கு மாகாணம் ), சௌந்தரராஜா (பொறியியலாளர், பாரெயின்), த. விஜயலட்சுமி, சி.ஜெயலட்சுமி ஆகியோரின் அருமைத் தந்தையும் காலஞ்சென்ற ந.புலேந்திரன் (இ.போ.ச. நடத்துனர், பருத்தித்துறை), வ.தர்மாம்பிகை (யாழ்ப்பாணம்), இ.செம்மணச்செல்வி (யாழ்ப்பாணம்), அமரர் ந.தர்மகுலசிங்கம் (முன்னாள் கிராமசேவகர் வவுனியா), சௌ. மதிவதனி (பாரெயின்) ஆகியோரின் அன்பு மாமனும் வ. அரவிந்தன் (லண்டன்), வ. அனந்தன் (டுபாய்), வ.அரங்கன் (சுவிற்சலாந்து), த.ஜனனி (அமெரிக்கா), கு.கஜானி (கனடா), ஜோ. நளினி (ஆஸ்திரேலியா), ஸ்ரீ.மாலினி (ஜேர்மனி), பு. அகிலன் (அமெரிக்கா), சௌ.மதுசூதனன் (ஆஸ்திரேலியா), மு.கிருஷாந்தி (லண்டன்), த. அருணன் (ஆஸ்திரேலியா), த.அஞ்சனன் (சட்டக்கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புப்பேரனும் த.சங்கீதா, த.ஏஞ்சலா, கு.கௌதமி, கு.கீர்த்தனா, கு.கிருஷ்ணா, ஸ்ரீ.சரண்யா, ஸ்ரீ.அச்சுதன், ஸ்ரீ. அனுருத்தன், மு. மானஷா, மு. ஆதித்தியன் ஆகியோரின் அருமைப்பாட்டனும் க.விஜயலட்சுமி (சிங்கப்பூர்), ந.சின்னம்மா (சிங்கப்பூர்), தி.பரமேஸ்வரி (இந்தியா), சோ. சிவஞானசுந்தரம் (யாழ்ப்பாணம்), கு. சிவயோகம் (ஆஸ்திரேலியா), உ.பரமேஸ்வரி (தொல்புரம்) ஆகியோரின் அன்புச்சகலனும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.11.2016 புதன்கிழமை காலை 9 மணிக்கு 172, கோயில் வீதி, நல்லூரில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பொன்னாலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

172, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(ஜே.5773)(07.19.20)

தகவல்: பிள்ளைகள்
[illegible],
சி.இரங்கராஜா,
சி. [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### செல்வி சாந்தகுமாரி (கிருபா) செல்வராஜா



தோற்றம்:-20.12.1968
மறைவு :-30.10.2016

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சாந்தகுமாரி (கிருபா) செல்வராஜா(யா/சுண்டுக் குழி மகளிர் கல்லூரி ஆசிரியை) 30.10.2016 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரியர்களான திரு.திருமதி செல்வ ராஜா தம்பதிகளின் புதல்வி யும், டெய்சி, டொறத்தி (தேசிய வைத்தியசாலை - கொழும்பு), டல்சி (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி - கொழும்பு), டோறா (கிருஜா -நோர்வே), டெல்பின் (கிறிஸ்தா - ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தங்கையும், பிறேம்குமார் (புகையிரத திணைக்களம்), அரசரட்ணம் (இலங்கை வங்கி),ஜீட் ரவிக்குமார் (நோர்வே) ஆகியோரின் மைத்துனியும், அஞ்சலோ ரூபன், ஏஞ்சல் ரூபினி, அமலன், நிமலன், சலோமி, மேதினி, மகிபன்,நிரூபன், ஜனுஜா, மகிழினி ஆகியோரின் சித்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் ஜயரட்ண மலர்ச்சாலையில் இன்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணிமுதல் இரவு 8 மணி வரையும், நாளை (02.11.2016)புதன்கிழமை காலை 9 மணிமுதல் பிற்பகல் 3 மணிவரையும் பார்வைக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணிக்கு இறுதி வழிபாடு இடம்பெற்று பூதவுடல் நல்லடக்கத்துக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

24,1/3, தயாவீதி,
வெள்ளவத்தை.

தகவல்: குடும்பத்தினர்.
071 549 0300

### இராசரத்தினம் இராசசிங்கம்

(முகாமையாளர்-சண்முகானந்த ரெக்ஸ்ரைல் யாழ்ப்பாணம்)



பிறப்பு 15.12.1960
இறப்பு 30.10.2016

சங்கானை தேவாலய வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசரத்தினம் இராசசிங்கம் கடந்த (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் -பகவதிஅம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராமநாதன்-ஆனந்தலஷ்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும் நிர்மலாதேவியின் பாசமிகு கணவரும் ஜினோத், சபீஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கந்தசாமி(கனடா), குணரத்தினம் (கொழும்பு), சறோஜினிதேவி (கொழும்பு), லலிதாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கோணேஸ்வரதேவி (கனடா), சிவனேஸ்வரி குமாரசிங்கம் (சிங்கம் ரெக்ஸ்ரைல் கொழும்பு), சிறிக்காந்தன் (சுவிஸ்), விக்கினேஸ்வரதேவி, ரமேஷ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2016) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேவாலய வீதி,
சங்கானை.

(ஜே.5774)
(16.17.19)

தகவல்:
குடும்பத்தினர்.

### நடராஜா நவலோகன்

(ஓய்வு பெற்ற சமுர்த்தி உத்தியோகத்தர்)



பொற்கலந்தம்பை தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா நவலோகன் கடந்த (29.10. 2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் நடராஜா-சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காரை நகர் பலகாட்டைச் சேர்ந்த குமாரானந்ததாஸ்-புஸ்பராணி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அனுசியாவின் பாசமிகு கணவரும் பிரசன்யாவின் (Sussex College Badulla) பாசமிகு தந்தையும் விமலாதேவி, கமலாதேவி, சறோஜினிதேவி, சரஸ்வதிதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், தர்மபாலன் மற்றும் நரேந்திரன், அனபாயன், தர்சினி ஆகியோரின் மைத்துனரும் சுலைக்சனா, கஜந்தினி-சிவகீதன், நிமல்ராஜ், கஜந்தரூபி-செல்வச்சந்திரன், நிசாந்தன், கேசினி, சொரூபினி, சர்வின், சபினா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வர்மிலன், நேரஜா, ஆஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2016) புதன்கிழமை பி.ப 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோண்டாவில் ஸ்ரேசன் வீதி,
கோண்டாவில்.

(ஜே.[illegible])

தகவல்:
குடும்பத்தினர்.

## மாணவர்...

சிறிசேன பல்கலைக்கழக மாண வர்கள் உயிரிழந்தமை காரண மாக யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டபோராட்டங்கள் நியாயமானது தான் என்று ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இதுபோன்றசம்பவங்கள் தென்னிலங்கையில் நடந்திருந்தால், அங்கு மிகப் பெரிய அமைதியற்ற சூழல் உருவாகியிருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கீரிமலையில் வீடு கையளிப்பு நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

"யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் சாவடைந்த செய்தி எனக்கு எட்டியதுமே நான் துரிதமாக நடவடிக்கை எடுத்தேன். தனியான விசாரணைக்கு உத்தரவிட்டேன். சிறப்புப் பொலிஸ் குழுவை விசாரணைக்காக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினேன். இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய சந்தேகத்தில் 5 பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த நடவடிக்கை – விசாரணை எதிர்காலத்தில் சுயாதீனமாகவும் – சுதந்திரமாகவும் முன்னெடுக்கப்படும்.

இந்தச் சம்பவத்தின் பின்னர், யாழ்ப்பாணத்தில் ஒரு நிச்சய மற்ற தன்மை ஏற்பட்டது. பல்கலைக்கழக மாணவர்கள் தங்களுடைய சகோதர மாணவர் களின் சாவு குறித்து அதிர்ச்சியுற்றார்கள். அவர்கள் மிகவும் கலவரமடைந்தார்கள். யாழ்ப்பாண மக்களும் கலவரமடைந்தார்கள். அவர்களுடைய உள்ளத்தில் ஏற்பட்ட வேதனைகளைப் பற்றி நாங்களும் சரியாகப் புரிந்து கொண்டிருக்கின்றோம்.

இந்தச் சம்பவம் காரணமாகச் சில ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்பட்டன. அப்படியாக நடந்த போராட்டங்கள் நியாயமானது தான் என்று நான் ஏற்றுக் கொள்கின்றேன்.

இப்படியான சம்பவம் தென்பகுதியில் உள்ள பல்கலைக் கழகத்தில் நடந்திருந்தால், இதைவிட மோசமான அமைதியின்மை ஏற்பட்டிருக்கும். மாணவர்கள் அவ்வாறு கலவரமடைவது புதுமையான விடயம் அல்ல. இந்தச் சம்பவம் தொடர்பில் அமைதியாகச் செயற்பட்ட யாழ்ப்பாண மக்களுக்கு நான் நன்றி கூறு கின்றேன். ஆனால் தென்னிலங்கையில் இப்படியான சம்பவம் நடந்திருந்தால் மிகமோசமான அமைதியற்ற நிலை ஏற்பட்டிருக்கும் என்று நான் நம்பு கின்றேன் – என்றார். (த-5-7)


# நெஞ்சை விட்டகலாத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி மாகிறேற் வில்மட்

மண்ணுலகம் 22.04.1944 | விண்ணுலகம் 01.11.2015



பாதம்பட்ட இடமெல்லாம் பார்த்து மனம் ஏங்குதம்மா!
கண்பார்க்கும் இடமெல்லாம் - உந்தன்
அழகு முகம் தெரியுதம்மா!
காட்டிநின்ற உன் அன்பு கைத்துயராய்
வழி நெடுக வந்திடாதோ!
கானல் நீராய் எமையெல்லாம் கலங்க வைத்து போனதென்ன?
எம் பாசம் காந்ததுவோ ஏங்குதம்மா எங்கள் மனம்
உன் அன்பு பாசத்தை சிந்தையிலே ரசித்தோமே!

இன்று தவியே தவிக்க விட்டு நீர் மட்டும்
எமைப் பிரிந்த மாயமென்ன ?
உன் வதனம் காணாது எம் உள்ளம் வாடுதம்மா
இனி எங்கு காண்போமே
என்ன சொல்லி அழைப்போமே உனை!
வார்த்தை ஏதுமில்லை எம் துயர் துடைக்க
தேற்றுவார் யாருமின்றி தேம்பி அழுகின்றோம்
தேடுகின்றன விழியெல்லாம் உம் வதனம் காணமுடியவில்லை

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு கொக்குவில் புனித சின்னப்பர் ஆலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலியில் பங்கு கொண்டு இவருக்காகப் பிரார்த்தித்து தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு

(ஜே. 5700 (10.01.17))

அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



## நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

### கூலிக்கான கூறுவிலை கோரல்

சங்கத்தால் அமைக்கப்பட இருக்கும் களஞ்சிய கட்டட வேலைக்கான கூலிக்கான கூறு விலைகள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் 07.11.2016ஆம் திகதிக்கு முன் தங்களது கூறுவிலையினைப் பதிவுத் தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தொழில்நுட்ப உத்தியோகத்தரின் வழிகாட்டுதலுக்கு அமைவாகக் குறிப்பிடப்படும் வேலைகள் மேற்கொள்ள வேண்டும்.

| இல. | வேலை விவரம் | விலை விகிதம் |
|---|---|---|
| 01 | அத்திவார அகழ்வு வேலை - 01 கியூப் | |
| 02 | 3" (75mm) அடிக் கொங்கிறீற் - 01 No | |
| 03 | 9"X9" அளவு கொண்ட கொங்கிறீற் தூண் 4/12 mm கம்பிகள் 6" சிறப்ஸ் (Strupps) மற்றும் பலகை அணைத்தலுடன் (Steel box) - 01 நீள அடி | |
| 04 | அத்துடன் படல் கம்பி வேலை உட்பட (Footing) - 01 No. | |

கட்டடம் அமையப் போகும் இடத்தை கடமை நேரத்தில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்.
தொலைபேசி இல:- 021 222 2143



# ஐந்தாவது ஆண்டு நினைவலைகள்



கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும்
அராலி வடக்கு வட்டுக்கோட்டையை
வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவருமான

## அமரர் சரோஜினிதேவி சிவஸ்கந்தா

(ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குனர்-இலங்கை
தொலைத்தொடர்பு திணைக்களம்)

மலர்வு 14.09.1941 | உதிர்வு 28.10.2011

திதி - பூர்வபக்க துதியை



விழிமூடி எம்மை வழிகாட்டும் எங்கள் ஒளியான தாயே ஓடி வருவீரோ
வழி மூடும் காலத்திலெல்லாம்-எம்மை அழியாது காத்திட்ட அரணே
கழிவிரக்கம் காட்டாத காலனவன் விழி அழ வீழ்த்தி விட்டான் எங்கள் விருட்சத்தை
வெளிச்சம் எம் வாழ்வில் ஏற்றிய தாயே வெள்ளி நிலவாய் போனது மேன்!
பள்ளி சென்று பாடங்கள் பல கற்று கொள்ளி உங்களுக்குப் போடுவதற்கா?
துள்ளித் துள்ளி நாங்கள் போகையில் அள்ளி அணைத்த தங்கமே தாயே!
தள்ளி நின்று எள்ளி நகையாடும் உலகில் துளிகூடத் துவழாமல் தூக்கிவிட்ட தாயே
வலியால் நெஞ்சம் வலிக்கையில் ஒலியாய் உம்குரல் கேட்டாலே போதும்
துளியாய் போய்விடும் எம்துயரம் நலிவாக மெலிவாக போகாமல் எமை
கலியாமல் பொலிவாக ஆக்கிய பொன்னான தாயே அலைகள் கூட ஓய்ந்திடும்
ஆனால்-உங்கள் தொலைபேசி எங்கள் குரல் கேட்காது ஓய்ந்திடுமா?
மலைபோல் இருந்தீர் மறைந்து விட்டீரே அம்மா தலையான எங்கள் தாயே
எமைத் தவிக்கவிட்டு தொலைதூரம் சென்றது ஏனம்மா!

பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(J.5755) (21)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிதி மதிப்பீட்டு...

சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட் டது. இந்தக் குழு நியமிப்பு, அதற்கான செலவினங்களுக்கு அனுமதி கோரிமாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட்ட பிரே ரணைக்கு, மாகாண சபை அனுமதி வழங்கியிருந்தது.

இந்தக் குழுவுக்கான நிதி விடுவிப்புத் தொடர்பில், வடக்கு மாகாண ஆளுநர் குரேயிடம், தலைமைச் செயலர் அ.பத்திநாதன் அனுமதி கோரியிருந்தார். இதற்குப் பதில் வழங்கியுள்ள ஆளுநர், நியமிக்கப்பட்ட குழு உறுப்பினர் கள் ஒவ்வொருவரின் கொடுப்பனவு, நிர்வாகச் செலவு உள்ளிட்ட முழுமையான நிதி மதிப்பீட்டு அறிக்கையைக் கோரியுள்ளார். (த-5-10)

## பிள்ளைகளால்..

படும் வயோதிபர்களின் சொத்துக்களை அரசுடைமை யாக்கும் சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப் போவதாக, சமூக சேவைகள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரி வித்துள்ளார்.

பத்தரமுல்லையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ் வில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

முதியோர் இல்லங்களில் பராமரிக்கப்படும் வயோதிபர் கள் இறந்தவுடன் அவர்களின் உறவினர்கள் என்று கூறிக் கொள்பவர்கள், உயிரிழந்த வயோதிபர்களின் சொத்துகளுக்காக முரண்பட்டுக் கொள்ளும் சம்பவங்கள் சமூகத்தில் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது.

கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் இந்தச் சொத்துத் தகராறுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

வீதிகளில் அநாதரவாகக் கைவிடப்பட்ட நிலையில் மீட்கப் பட்டுச் சமூக சேவைத் திணைக்களத்தால் நிர்வகிக்கப் படும் முதியோர் இல்லங்களுக்கு அழைத்து வரப்படும் முதியோர்களுக்கு உறவினர்கள் இருக்கின்றனரா என் பது குறித்து முதலில் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

வீதிகளில் இருந்து காப்பாற்றப்படும் வயோதிபர்களின் ஒளிப்படங்களைப் பத் திரிகை வாயிலாகப் பிரசுரிக்கவும் நட வடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு செய்யும்போது சம்பந்தப்பட்ட முதியவ ருக்கு உரிமை கோராத உறவினர் கள், அவரது சொத்துகளுக்கு உரிமை கோர இடமளிக் காது தடுக்க முடியும்-என்றார். (த-5)

## அனைவரும்...

அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அர சமைப்பே உருவாக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ்ப் பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.

கீரிமலையில் வீடுகளைக் கையளிக்கின்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் வடபகுதி மக்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். நாங் கள் அனைவரும் பொறுப்பாகச் செயற்பட வேண்டும். சில பிரச்சினைகளுக்கு அவசர மாகத் தீர்வை எதிர்பார்க்கின்றீர்கள். அது சாதாரணமாக எல்லா சமூகத்திலும் வாழும் மக்களின் சுபாவம். ஆனால் நாங்கள் இருக்கக் கூடிய பிரச்சினை என்னவென்பதைச் சரியாகத் தெரிந்து கொள்ளவேண்டும் – புரிந்து கொள்ள வேண்டும்.

எங்களை அமைதியற்ற நிலைக்கு ஆளாக்குவதற்குச் சிலர் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களின் கபளீகரத்தனமான எண்ணத்துக்கு நாங்கள் இடம் கொடுக்கக்கூடாது. நாங் கள் பெற்றுக் கொண்ட சமாதா னத்தைப்பாதுகாக்கவேண்டும். ஏனையோரின்தேவைக்கு ஏற்ப எம்மைச் செயற்படுத்த நாம் இடமளிக்கக் கூடாது. வடபகுதி மக்கள் கடந்த காலங்களில் பொறுமையோடு செயற்பட்டனர். எனக்குத் தெரியும். எனவே அந்தப் பொறுமையும் அமைதியும்தான் எங்களுக்கு மிக முக் கியமானது. எதற்கும் நாங்கள் அவசரப்பட்டு விடக் கூடாது. நீங்கள் அமைதியாகச் செயற்படுவதற்காக நான் உங்களுக்கு நன்றி கூறுகின்றேன்.

நாங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் அரசமைப் பைத்தான் உருவாக்குவோம். சிங்கள–தமிழ்–முஸ்லிம் மக்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில்தான் அரசமைப்பைத் தயாரிக்கப் போகின் றோம். அரசமைப்பு வரைவின் திட்டம் வெளிவருவதற்கு முன்னரே பலரும் பலவிதமாகப் பேசுகின்றார்கள். பொய்யான பரப்புரை களை முன்னெடுக்கின்றார்கள்.

விகாரைகளுக்குச் சென்று பொய்யான விளக்கங்களைக் கொடுக்கின்றார்கள். பௌத்த மதத்துக்கு தற்போதைய அரசமைப்பில் வழங்கப்பட்ட இடம், புதிய அரசமைப்பில் இல்லாமல் செய்யப்படும் என்று சொல்கின்றார்கள். இவ்வாறு பொய் சொல்பவர்கள்தான், நாம் நாட்டைக் காட்டிக் கொடுக்கப் போகின்றோம், நாட்டைப் பிரிக்கப் போகின்றோம் என்று சொல்கின்றார்கள். இந்தக் குற்றச்சாட்டுக்களை நான் மறுக்கின்றேன்.

உலகத்தில் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ் வொரு விதமான அரசமைப்பு இருக்கின்றது. ஏனைய நாடுகளில் இருக்கின்ற அரசமைப்பு எங்களுக்குப் பொருந்தாது. எங்களுடைய நாட்டை ஆட்சி செய்யக் கூடிய விதத்தில் தான் நாங்கள் எங்களு டைய அரசமைப்பை உருவாக்கு வோம். எமது மண்ணில் மீண்டும் இரத்த ஆறு ஓட அனு மதிக்க முடியாது. எல்லோருடைய ஆதரவைப் பெற்றுக் கொள்ளக் கூடிய விதத்தில்தான் புதிய அரசமைப்பு உரு வாக்கப்படும்.

என் மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த 62 லட்சம் மக் களின் நம்பிக்கையை நான் சிதைக்கமாட்டேன்.

நாட்டில் மீண்டும் போர் ஏற்படாமல் இருப்பதற்கு செயற் படுவதுதான் எங்களின் பொறுப்பு. போர்க் காலத்தில் அரச தரப்பும், அதற்கு எதிரானவர்களும் ஆயுதம் ஏந்திப் போராடினார்கள். இன்று முப்படையினர் தேசிய நல் லிணக்கத்துக்காக கை நீட்டுகின்றனர். மக்களுடன் சிநேகபூர்வமாகப் பணி புரிகின்றனர்.

மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கை விரைவுபடுத்தப் படும். வடபகுதியில் இன்னமும் ஒரு லட்சம் வீடுகள் அமைக்கப்படும். அவை முப்படையினர், தனியார் நிறு வனங்கள் ஊடாக அமைத்து வழங்கப்படும். வறுமையை ஒழிப்பதன் ஊடாகவே நல்லிணக்கத்தை அடைய முடி யும். நாம் நல்லிணக்கத்தை அடைவதற்கும், வறுமையை ஒழிப்பதற்கும் பல்வேறு நாடுகளும் உதவி வழங்கு கின்றன- என்றார். (த-5-7)

## நல்லிணக்கபுரம்...

மற்றும் மயிலிட்டியின் சிறு பகுதி உள்ளடங்கலாக 454 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டமைக்கான பத்திரம் என்பன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நேற்று வழங்கப்பட்டன.

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந் தமான 47 ஏக்கர் நிலப் பரப்பில், 100 வீடுகள் கட்டப்பட் டுள்ளன. வீடுகள் ஒவ்வொன்றும் நிலத்தின் மதிப்பீட்டுடன் சேர்த்து 27 லட்சம் ரூபா ஆகும். இரண்டு அறைகள், சமையலறை, குளியலறை, ஹோல் என்பவற்றுடன் ஒவ் வொரு வீடும் அமைந்துள்ளன. அத்துடன் வீடுகளுக்குக் குடிதண்ணீர் சுத்திகரிப்புச் செய்யும் இயந்திரத்துடனான குடிதண்ணீர் வசதிகள், மின்சார வசதிகள் என்பனவும் வழங்கப்பட்டுள்ளன.

கீரிமலையில் அமைக்கப்பட்ட இந்த வீட்டுத் தொகுதிக்கு, 'நல்லிணக்கபுரம் மாதிரிக் கிராமம்' என்று பெயரிடப்பட்டுள் ளது. இவற்றைக் கையளிப்பதற்கான நிகழ்வு, இந்த வீடு கள் அமைக்கப்பட்ட பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பி.ப. 3 மணிக்கு வருகை தந்தார். அவரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா வரவேற்றார். மாதிரிக் கிராமத்தின் வாயிலில் அமைக் கப்பட்ட பெயர்ப் பலகையை ஜனாதிபதி திரை நீக்கம் செய் தார். இதன் பின்னர் பாடசாலை மாணவர்களால், நல் லிணக்கத்தைப் பிரதிபலிப்பதாக அங் குள்ள சுவர்களில் வரையப்பட்ட ஓவியங் களையும் ஜனாதிபதி பார்வையிட் டார். மாணவர்களுக்குப் பரிசில் வழங்கினார். சம்பிரதாய பூர் வமாக ஒரு வீட்டை நாடா வெட்டி ஜனாதிபதி திறந்து வைத்தார். இதன் பின்னர் பிரதான மேடையில் நிகழ்வு இடம்பெற் றது. வரவேற்புரையை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மகேஸ் சேனநாயக்க வழங்கினார். நிகழ்வு மேடையில் வைத்து, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வலி. வடக் கில் 454 ஏக்கர் காணி விடுவிப்புக்கான பத்திரத்தை மாவட் டச் செயலர் நா.வேதநாயகனிடம் வழங்கினார். இதன் பின்னர் நூறு வீடுகளுக்கும் உரிய பயனாளிகள் மேடைக்கு அழைக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் வீட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது.


இந்த நிகழ்வில், அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன், ஆளு நர் றெஜினோல்ட் குரே, பாதுகாப்பு இராஜாங்க அமைச் சர் ருவான் விஜயவர்த்தன, சிறுவர் இராஜாங்க அமைச் சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் களான மாவை.சேனாதிராசா, எம்.ஏ.சுமந் திரன், பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, மீள்குடி யேற்ற அமைச்சின் செயலர் சிவஞான சோதி, முப்படைத் தளபதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-5-7)

## பல்கலை...

பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட நிலையில், இனிமேல் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறக்கூடாது என்பது உள்ளிட்ட விடயங்களை ஜனாதிபதியிடம் வலியுறுத்தவே இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டது. சுலக்சன், கஜன் ஆகிய மாணவர்கள் கடந்த 20ஆம் திகதி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல் லப்பட்டனர். இதனையடுத்து பல்கலைக்கழகக் கற்றற் செயற்பாடு களை மாணவர்கள் இடைநிறுத்தினர். இந்தச் சம்பவம் தொடர்பில் மீள் குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் துணை வேந்தர் மற்றும் மாணவர் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது, கொல்லப் பட்ட மாணவர் களின் குடும்பத்துக்கு இழப்பீடு செலுத்தவேண்டும், உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும், பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இனிமேல் இத்தகைய சம்பவங்கள் இடம் பெறாது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் ஆகிய கோரிக்கைகளை அமைச்சரிடம் மாணவர்கள் முன் வைத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் தொடர் பில் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரை யாடவேண்டும் என்று மாணவர் கள் அமைச்சர் சுவாமிநாதனிடம் கோரி னர். மாணவர்கள் முன் னெடுத்துள்ள போராட்டத்தைக் கைவிட்டால் ஜனாதிபதியைச் சந்திக்க ஏற்பாடு செய்து தருவதாக அமைச்சர் அங்கு கூறியுள்ளார். இதனையடுத் துப் போராட்டம் கைவிடப்பட்டது. இதன்படி மாணவர்கள் 15 பேர் கொண்ட குழுவும் துணைவேந்தர் உள்ளிட்ட சில விரைவுரையாளர்களும் இன்று கொழும்பில் ஜனாதிபதி யைச் சந்திக்கவுள்ளனர் என அமைச்சர் சுவாமிநாதன் தெரிவித்தார். (த-4-8)

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து செல்வரத்தினம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்வரத்தினம் 28.10.2016 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதிக ளின் அன்பு மகனும், காலஞ்சென்ற வர்களான கனகசபை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவ ரும், சிவபாலன் (ஜேர்மனி), குலசேகரம் (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் உதயகுமாரன் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்- வலி.தெற்கு - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞான அருட்கரசி (ஜேர்மனி), தானியா (கனடா), சுகந்தினி (ஆசிரியர் - யா/உடுவில் மான்ஸ் த.க. பாடசாலை) ஆகி யோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற ஆயிலியத்தின் அன் புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சங்கரலிங்கம், கனக ரத்தினம், சிவராசா, கைலாயநாதன், சரவணமுத்து ஆகி யோரின் மைத்துனரும், பாலமயூரன், ராம்கி, வேனியா, அபிரா, அஸ்ரா, விக்ரோரியா, சம்பத்மேனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.11.2016) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவசக்தி இல்லம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
செ.உதயகுமாரன்
(மகன்)

077 046 0150

(J/5737)
(11,18,21)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மேரிபிறிசிலா கலைவாணி (கலா) கிளமென்ற் யோகநாயகம்



அன்னை மடியில் :-23.07.1958
இறைவன் அடியில் :-24.10.2016

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிட மாகவும், லண்டனை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மேரி பிறிசிலா கலைவாணி (கலா) கிளமென்ற் யோகநாயகம் 24.10.2016 போர்த்துக்கல்லில் அகாலமரண மானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான யோண்பிள்ளை - ஸ்ரெலா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நீக்கிலாப் பிள்ளை- ஞானம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், கிளமென்ற் யோகநாயகத்தின் பாசமிகு மனைவியும், மைக்கல், நீக்கலா ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆனந்தராஜா, மேரிபிலோமினா (புவனா), மேரி கொன்செப்ரா (கண்ணா), கிருபாகரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், றொபேட் அருமை நாயகம், யசிந்தா கலிஸ்ரஸ், பற்றிமாகிறேஸ், பற்றீசியா கிளெட்வின், பெனிற்றா யூடிற் கோணேஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(J/5761)
(11,17,21)

தகவல்:யசிந்தா கலிஸ்ரஸ்

### திருமதி சியாமளாதேவி (ரஞ்சி) மகாதேவா செட்டியார்



அனுராதபுரத்தை பிறப்பிட மாகவும், யாழ்ப்பாணம், ஸ்ரான்லி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சியாமளாதேவி மகாதேவா செட்டியார் 30.10.2016 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சுப்பிரமணியம் - இந்துமதி தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஜெகநாதன் செட்டியார்- அன்னப்பா தம்பதிகளின் மருமகளும், மகாதேவா செட்டியாரின் பாசமிகு மனைவியும், ஜெயப்பிரகாஸ் (உரிமையாளர்- ஜெகநாதன் விற்பனை நிலையம்).ஷர்மிளா (நோர்வே), பிரசாந்தன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், சுகாதார அமைச்சு, வடமாகாணம்), சங்கீதா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜெகபிருந்தா, ரவிச்சந்திரன் (நோர்வே).பாமினி, திலகரட்ணம் (ராகினி ஜுவல்லர்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ் சென்றவர்களான ரவிவர்மா, சுகந்திரகுமார் மற்றும் வாசுகி தேவி, நிர்மலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான செந்தில்ராஜா, முத்துலிங்கம், ருக்குமணி மற்றும் சண்முகரத்தினம், பூமதி, நாயகம் சிற்றம் பலம், ரவிச்சந்திரிக்கா, இந்துராணி, சிறிஸ்கந்தராஜா ஆகியோ ரின் பாசமிகு மைத்துனியும், ஜெகப்பிரவீன், மகாவைஷ்ணவி, பிரசாந்தி (நோர்வே), நிஷாந் (நோர்வே), அபிலாஸ், அக்சயன், ஆரணன், தனுசியன், துசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.11.2016) புதன்கிழமை ஸ்ரான்லி வீதியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் பூதவுடல் வில்லூண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

21, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/5760)
(11,17,21)
021 222 2734, 077 706 2349

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாய்ப்புக் கிடைத்தால் இலக்குகள் சரியுமாம்

இந்திய அணியில் தொடர்ந்தும் விளையாட வாய்ப்புக் கிடைத்தால் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தத் தயார் எனத் தெரிவித்தார் மிஸ்ரா.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான ஐந்தாவது ஒருநாள் ஆட்டத்தில் மிஸ்ரா 18 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 இலக்குகளை வீழ்த்தினார். இந்திய அணி அபார வெற்றி பெறக் காரணமாக அவர் இருந்தார். இதனால் ஆட்டநாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் தெரிவானார். இதையடுத்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

என்னை எப்போதும் இலக்குகளை வீழ்த்தக்கூடிய பந்து வீச்சாளராகவே நான் பார்ப்பதுண்டு. ஆனால் அதிக அளவில் அலட்டிக் கொள்வதில்லை. நம்முடைய சாதனை பற்றி அதிக அளவில் நினைத் தோம் என்றால், என் மீதே நான் அதிக அளவிலான நெருக்கடியைப் புகுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டுவிடுவேன். எனது கடின உழைப்பு அனைத்தையும் செலுத்தி இலக்குகளை வீழ்த்தியிருப்பது மகிழ்ச்சிச் தொடர்ந்தும் வாய்ப்புக்கள் வழங்கும் பட்சத்தில் இன்னும் அதிக இலக்குகளை வீழ்த்தத் தயாராக உள்ளேன் என மிஸ்ரா தெரிவித்தார். (ம)



# ரொனால்டோ ஹற்றிக் கோல் ரியல் மட்ரிட் அசத்தல் வெற்றி

லா லிகா தொடரில் ரொனால்டோவின் ஹற்றிக் கோல்களின் உதவியுடன் டிப்போர்ரிவோ அணியை வீழ்த்தியது ரியல் மட்ரிட் அணி.

ஸ்பெய்ன் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையில் நடைபெறும் இந்தத் தொடர் மிகவும் பழைமையானது. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரியல் மட்ரிட் அணியை எதிர்த்து டிப்போர்ரிவோ அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் என்னவோ டிப்போர்ரிவோவுக்கு சாதகமாகவே அமைந்தது. 7 ஆவது நிமிடத்தில் டிவ்சன் முதல் கோலைப் பதிவுசெய்தார். 17 ஆவது நிமிடத்தில் மட்ரிட்டின் முதல் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார் ரொனால்டோ. 33 ஆவது நிமிடத்தில் அவர் பிறிதொரு கோலைப் பதிவுசெய்ய 2:1 என்ற கோல் கணக்கில் மட்ரிட்டின் ஆதிக்கத்துடன் முடிந்தது முதல் பாதி.

இரண்டாம் பாதியில் 84 ஆவது நிமிடத்தில் அல்வாரோ, மட்ரிட்டின் மூன்றாவது கோலைப் பதிவுசெய்தார். அடுத்த சில நிமிடங்களில் தனது ஹற்றிக் கோலைப் பதிவுசெய்தார் ரொனால்டோ. முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)

# மாற்றுத்திறனாளிகளின் கிரிக்கெட்டில் உருக்கம்

மாற்றுத்திறனாளிகளுக்கான துடுப்பாட்டத் தொடர் டுபாயில் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டமொன்றில் பந்தைத் தடுப்பதற்காக இங்கிலாந்து வீரர் ஓடியபோது அவரது செயற்கைக் கால் கழன்று விழுந்தது. இது ஓர் உருக்கமான சம்பவமாகப் பதிவாகியுள்ளது.

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகள் இந்த ஆட்டத்தில் மோதின. பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடிய போது அந்த அணியின் துடுப்பாட்ட வீரர் பந்தை வேகமாக அடிக்க பந்து பவுண்டரியை நோக்கி சென்று கொண்டிருந்தது. அப்போது அந்த பகுதியில் களத்தடுப்பில் ஈடுபட்டிருந்த இங்கிலாந்து வீரர் லியம் தோமஸ் பந்தைத் தடுக்க முயன்ற போது அவரின் ஒரு செயற்கைக் காலானது கழன்று தனியாக விழுந்தது. அதை அவர் பொருட்படுத்தாமல் ஒரு காலில் நொண்டிக் கொண்டே பந்தை பவுண்டரிக்குப் போகவிடாமல் எடுத்து இலக்குக் காப்பாளரிடம் வீசினார். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பார்வையாளர்கள் அவருக்குக் கைதட்டி தங்களின் உற்சாகத்தை வெளிப்படுத்தி அவரின் தன்னம்பிக்கையைப் பாராட்டினார்கள். இந்த ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றிபெற்றது. (ம)




# மெக்சிக்கோ சுற்றில் வென்றார் கமில்டன்

உலக கார்பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மெக்சிக்கோ சுற்றில் நடப்புச் சம்பியனான கமில்டன் வெற்றிபெற்றார்.

உலக கார்பந்தயத் தொடர் 21 சுற்றுக்களாக நடத்தப்படுகிறது. இதன் 19 ஆவது சுற்று மெக்சிக்கோ ஓடுதளத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. 305 கிலோ மீற்றர் தூரமுடைய பந்தயத்தை வெறும் ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்கள் 31 செக்கன்களில் கடந்து முதலிடம் பிடித்தார் கமில்டன். இந்த சீசனில் கமில்டன் பெற்ற 8 ஆவது வெற்றியாக இது அமைந்தது. மொனாகோ, கனடா, ஆஸ்திரியா, இங்கிலாந்து, ஹங்கேரி, ஜெர்மனி, அமெரிக்கா சுற்றுக்களிலும் கமில்டனே வெற்றிபெற்றார்.

ஜெர்மனி வீரர் ரஸ்பேர்க் இரண்டாவது இடத்தையும், ஆஸ்திரேலிய வீரர் டானியல் ரிக்கார்டோ மூன்றாவது இடத்தையும் பிடித்தனர். 19 சுற்றுகளின் முடிவில் ரஸ்பேர்க் 349 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார். நடப்புச் சம்பியன் அந்தஸ்துடன் களமிறங்கிய கமில்டன் அவருக்கு அடுத்தப்படியாக 19 புள்ளிகள் பின் தங்கிய நிலையில் உள்ளார். இதன்படி அவர் 330 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இன்னும் இரண்டு சுற்றுகள் எஞ்சியுள்ளன. இதனால் நடப்பு வருட சம்பியனாவதில் கமில்டன், ரஸ்பேர்க் இருவருக்கும் இடையே கடும் போட்டி நிலவுகிறது. (ம)



# பற்றிக்ஸ் - ஜோசவாஸ் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன


சென்.பற்றிக்ஸ் அணி


சென்.ஜோசவாஸ் அணி

யாழ்ப்பாணம், நவ. 1

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் 19 வயதுக்குட்பட்ட பாடசாலைகளின் அணிகளுக்கு இடையில் நடத்திய கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான கால் பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து வென்னப்புவ சென். ஜோசவாஸ் கல்லூரி மோதவுள்ளது. துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நாளை மறுதினம் மாலை 5 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிஸ்பா சாதனை

பாகிஸ்தான் அணிக்கு அதிக டெஸ்ட்ஆட்டங்களில்தலைமை தாங்கியவர் என்ற சாதனையை, மிஸ்பா உல் ஹக் படைத்தார்.
48 ஆட்டங்களில் இதுவரை தலைமைதாங்கியிருந்தார் மிஸ்பா. நேற்றுமுன்தினம் ஆரம்பமான மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஆட்டம் மிஸ்பா தலைமைதாங்கும் 49 ஆவது ஆட்டமாகும். இதன் மூலம் அணிக டெஸ்ட் ஆட்டங்களுக்குத் தலைமை தாங்கிய பாகிஸ்தான் அணித் தலைவர் என்ற சாதனையை அவர் படைத்தார். இம்ரான் கானின் சாதனையையே அவர் தகர்த்தார். கங்குலியையும் மிஸ்பா சமப் படுத்தினார். (ம)





# சிங்கப்பூர் ரென்னிஸ் தொடர் வாகை சூடினார் சிபுல்கோவா

சிங்கப்பூர் ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் வாகை சூடினார் சிபுல்கோவா.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதல் எட்டு இடங்களிலும் உள்ள வீராங்கனைகளுக்கு மட்டும் வருட இறுதியில் நடத்தப்படும் சிங்கப்பூர் ரென்னிஸ் தொடர் நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள ஜேர்மன் வீராங்கனை ஏஞ்சலிக் கெர்பரை எதிர்த்து சிபுல்கோவா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார் சிபுல்கோவா. இரண்டாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய அவர், அந்த செற்றையும் 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றினார். இதனால் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானார்.
மகிழ்ச்சியை விவரிக்க வார்த்தைகள் இல்லை. எனது வாழ்க்கையில் மிகப்பெரிய தருணம் இது. எப்படி வெற்றியை வசப் படுத்தினேன் என்பது இன்னும் தெரியவில்லை. சிங்கப்பூர் தொடரில் எனக்கு கிடைத்த முதல் வாய்ப்பிலேயே சம்பியனாகியமை அபாரமானது என சிபுல்கோவா தெரிவித்தார். (ம)

## மல்காவை வீழ்த்தியது அத்லெட்டிகோ மட்ரிட்

லா லிகா தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அத்லெட்டிகோ மட்ரிட் அபார வெற்றிபெற்றது.
அத்லெட்டிகோ மட்ரிட், மலாகா அணிகளுக்கு இடையில் இந்த ஆட்டம் நடைபெற்றது. 4:2 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் வெற்றி பெற்றது. கெவின், கரஸ்கோ இருவரும் தலா இரு கோல்களைப் பதிவு செய்தனர். இந்த வெற்றியின் மூலம் லாலிகா புள்ளிப் பட்டியலில் ரியல் மட்ரிட், பார்சிலோனாவுக்கு அடுத்த படியாக தன்னை நிலை நிறுத்திக் கொண்டது அத்லெட்டிகோ மட்ரிட். (ம)

# சென். ஹென்றிஸ் – சாகிரா அரையிறுதியில்

யாழ்ப்பாணம், நவ. 1
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் [illegible]9 வயதுக்குட்பட்ட பாடசாலைகளின் அணிகளுக்கு இடையில் நடத்திய கொத்மலை சொக்ஸ் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு சாகிராக் கல்லூரி அணி மோதவுள்ளது. யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நாளைமறுதினம் இரவு 7 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)


சென்.ஹென்றிஸ்


சாகிராக் கல்லூரி அணி

## சிம்பாப்வேக்கு எதிராக களமிறங்குகிறார் சந்திமல்

சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் தொடரில் இலங்கை அணியின் துணைத்தலைவர் சந்திமல் களமிறங்கவுளார் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. காயம் காரணமாக அணித்தலைவர் மத்தியூஸ், துணைத்தலைவர் சந்திமல் இருவருக்கும் ஓய்வு கொடுக்கப்பட்டது. இதனால் கேரத் அணியைத் தலைமை தாங்கி வழிநடத்துகிறார். இந்தத் தொடர் முடிந்த பின்னர், ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் சந்திமல் களமிறங்கத் தயாராக உள்ளார் என இலங்கை கிரிக்கெட் சபையின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)



## சான்நெருக்கு பாராட்டு வில்லியம்சனிடமிருந்து



இந்தியாவுக்கு எதிரான தொடர்களை இழந்த போதிலும், தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் சான்நெரின் செயற்பாடு திருப்திகரமாக இருந்தது என வில்லியம்சன் பாராட்டியுள்ளார்.
இந்தியாவுக்கு எதிரான தொடரில் சகலதுறை வீரரான சான்நெரின் செயற்பாடு சிறப்பாக அமைந்தது. அவர் இளைய வீரர். புதிதாக அணிக்குள் வந்தவர். இந்தியாவின் ஆடுகள நிலைமைகள், சுழற்பந்து வீச்சாளருக்குச் சாதகமானவை என்ற போதிலும், இங்கு வரும் ஏராளமான சுழற்பந்து வீச்சாளர்கள் தடுமாறுவதுண்டு. ஆனால் மிச்செல் சான்நெர் ஒவ்வொரு நாளிலும் சிறப்பாகப் பந்து வீசினார். சிறப்பான தாக்கத்தை இந்திய அணிக்கு ஏற்படுத்தினார். தோல்வி, தோல்விதான் தனிநபர் பெறுபேறுகளின் அடிப்படையில் சான்நெரின் முத்திரை பதித்துள்ளார். துடுப்பாட்ட வரிசையில் லாதம் சிறப்பாகச் செயற்பட்டார் என வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யுத் கழகத்தின் கரப்பந்தாட்டத்தில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றவை

யாழ்ப்பாணம், நவ. 1
அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் அச்சுவேலி தோப்பு வாலிபர், புத்தூர் வளர்மதி, உடுப்பிட்டி நவஜீவன்ஸ் மற்றும் புத்தூர் கலைமதி ஆகிய அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்றன.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டங்கள் யுத் கழகத்தின் மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன. முதலாவதாக இடம்பெற்ற காலிறுதியில் புத்தூர் கலைமதி அணியும் அச்சுவேலி தோப்பு வாலிபர் அணிகள் மோதின. 2:1 என்ற செற் கணக்கில் தோப்பு வாலிபர் அணி வெற்றிபெற்றது.

இரண்டாவது காலிறுதியில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழமும் மோதின. இதில் 2:1 என்ற செற் கணக்கில் கலைமதி அணி வெற்றிபெற்றது.

மூன்றாவது காலிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் கலைமகள் விளையாட்டுக் கழகமும் மோதின. 2:1 என்ற செற் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கான வாய்ப்பைத்தக்கவைத்தது.

நான்காவது காலிறுதியாட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகமும் மோதின. புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் 2:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-108)



# சொந்தத் தொடரை கைப்பற்றியது மத்தி.

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்திய கூடைப்பந்தாட்டத் தொடரில் ஆண்கள் பிரிவில் யாழ். மத்திய கல்லூரி அணி சம்பியனானது.

அழைக்கப்பட்ட பாடசாலைகளின் அணிகளுக்கு இடையே நடத்தப்பட்ட இந்தத் தொடரின் இறுதியாட்டம் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலையை எதிர்த்து யாழ். மத்திய கல்லூரி அணி மோதியது. நான்கு கால் பாதிகளைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் கால் பாதியை 11:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஏஞ்சல். இரண்டாவது கால் பாதியை 13:9 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது யாழ். மத்தி. முதல் பாதியின் முடிவில் 23:20 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது மத்தி. மூன்றாது கால் பாதியில் 21:17 என்ற அடிப்படையில் முன்னிலை வகித்தது ஏஞ்சல். நான்காவது கால் பாதியில் அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய மத்தி அந்த செற்றை 27:13 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. முடிவில் 67:54 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது யாழ். மத்திய கல்லூரி அணி.

நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக ரெலோ அமைப்பின் கொள்கைப் பரப்புச் செயலாளரும், சிவன் அறக்கட்டளையின் ஸ்தாபகருமான க.வேலாயுதம் கலந்துகொண்டார். (ம-23)

## இமையாணன் மத்தி கிண்ணம் வென்றது

கரணவாய் நவ. 2
மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டக் கிண்ணத்தை சுவீகரித்தது இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம்.

அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் இரவு குறித்த கழகத்தின் மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்றது. இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகமும் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் மோதின. 21:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-108)



## சிம்பாப்வேக்கு எதிராக இலங்கை முன்னிலை கீரிமர் அபார சதம்



சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின் படி இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் முன்னிலை பெற்றுள்ளது.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் ஹராரேயில் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து சகல இலக்குகளையும் இழந்து 537 ஓட்டங்களைக் குவித்தது இலங்கை. அதிகபட்சமாக தரங்க ஆட்டமிழக்காமல் 110 ஓட்டங்களையும், குசல் பெரேரா 110 ஓட்டங்களையும், சில்வா 94 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் கிரீமர் 4 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்குக் கள்மிறங்கிய சிம்பாப்வே இரண்டாம் நாள் முடிவில் 88-1 என்றிருந்தது. மவோயோ 41 ஓட்டங்களுடனும், மசகட்சா 33 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். மேலதிகமாக 4 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் மவோயோ ஆட்டமிழந்தார். வெளியேற்றியவர் லக்மல். மசகட்சா மேலதிகமாக ஓர் ஓட்டத்தையேனும் பெறவில்லை. எர்வின். வில்லியம்ஸ் பதின்மத்தைத் தாண்டவில்லை. 22 ஓட்டங்களுடன் வோலரை வெளியேற்றினார் பெரேரா. மூர், கிரீமர் இணை நீண்ட இணைப்பாட்டத்தை அரங்கேற்றியது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடந்து இணைப்பாட்டமாக 132 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 79 ஓட்டங்களுடன் மூர் ஆட்டமிழந்தார். மூரின் இலக்குச் சரிவின் பின்னர் சிம்பாப்வே ஆட்டம் கண்டாலும் மறுமுனையில் சதம் கடந்தார் கிரீமர். 373 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது சிம்பாப்வே. கீரிமர் 102 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார். 164 ஓட்டங்கள் முன்னிலையுடன் இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இலங்கை 5-0 என்ற நிலையில் இருந்த போது நாள் முடிவுக்கு வந்தது. (ம)

## சதத்தை நெருங்குகிறார் பிரீத்வைட் பாகிஸ்தானை சமாளிக்கிறது தீவுகள்

பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாளின் நிலவரத்தின் படி, பாகிஸ்தானுக்கு சவால் விடக்கூடிய வகையில் மேற்கிந்தியத் தீவுகள் உள்ளது.

நாயணச்சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 281 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக அஸ்லாம் 74 ஓட்டங்களையும், மிஸ்பா 53 ஓட்டங்களையும், யுனிஸ் கான் 51 ஓட்டங்களையும், சர்பிராஸ் அகமட் 51 ஓட்டங்களையும் சேர்த்தனர். பந்துவீச்சில் பிஸ்கூ 4 இலக்குகளையும், கபிரியேல் 3 இலக்குகளையும், ஜோசெப் 2 இலக்குகளையும், சேஸ் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகளுக்கு வழக்கம் போல தடுமாற்றம் காட்டினார் ஜோன்சன். ஒரே ஓட்டத்துடன் அவர் ஆட்டமிழக்க 6 ஓட்டங்களுக்கு முதல் இலக்கை இழந்தது தீவுகள். நம்பிக்கை நட்சத்திரமான பிராவோவால் முடிந்தது 11 ஓட்டங்களே. வீழ்த்தியவர் பாபர். சாமுவேல்ஸை ஓட்டமெதனையும் பெறவிடாது யாசிரும், பிளக்வூட்டை 23 ஓட்டங்களுடன் ஆமிரும் வீழ்த்தினர். 68 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது தீவுகளின் நான்கு இலக்குகள் சரிக்கப்பட்டன. பிரீத்வைட், சேஸ் இணை சிறிது தாக்குப்பிடித்தது. இரு வரும் ஆளுக்கொரு அரைச் சதம் கடந்தனர். டவ்ரிச்சும் சிறப்பாக ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 47 ஓட்டங்களைச் சேர்த்தார். பிரீத்வைட், கோல்டர் இணை எஞ்சிய சில பந்துப் பரிமாற்றங்கள் சிறப்பாகவே தாக்குப்பிடித்தது. நாள் முடிவில் தீவுகள் 244-6 என்றுள்ளது. பிரீத்வைட் 95 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)



தேவை
வானில் சென்று வியாபாரம் செய்வதற்கு விற்பனை உதவியாளர் தேவை.
077 1510827

வேலையாள் தேவை
சிற்றூண்டி (வடை, வாய்ப்பன்) தயாரிப்பதற்கு வேலை தெரிந்த ஆண் ஒருவர் தேவை.
தொடர்பு - இடம் :கொக்குவில்
077 2761161, 077 2269237

அமெரிக்க அதிஷ்ட விசா
ஒரு சாதாரண முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
இலவசமாக அமெரிக்கா போகலாம்
விரையுங்கள் - இன்னும் நாட்களே உள்ளன
V2 Travels
0768226230
அடுத்தவருடம் இந்த வாய்ப்பு இருக்குமோ தெரியாது. இப்பவே பதியுங்கள்

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
புதிய பிரிவு
திங்கள் பி.ப 5.00-6.30 மணிவரை
புதன், வியாழன்
பி.ப 5.00-6.30 மணிவரை
T.P 0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக் கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org